ஓம்

"ஒன்றுபட்டா லுண்டு வாழ்வே — நம்மில், 'ஒற்றுமை நீங்கில் அனைவர்க்குந் தாழ்வே."

# ஈழகேசரி

சிறந்த தேசியத் தமிழ் வார வெளியீடு.

(ஞாயிற்றுக்கிழமைதோறும் வெளிவருது)

"நன்மை கடைப்பிடி" | "நயனொடு நன்றி புரிந்த பயனுடையார், பண்பு பாராட்டு முலகு" | "நாடோப்பன செய்"

வாழ்க அந்தணர் வானவ ரானினம், வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக, ஆழ்க தீயதெல் லாமர னாமமே, சூழ்க வையக முந்துயர் தீர்கவே.

தொகுதி—எ. } யாழ்ப்பாணம், சுன்னாகம்: தாதுஹு தைமீ கஅவ (31-1-37) ஞாயிற்றுக்கிழமை { பகுதி—உஎ.

## தோத்திரம்.

ஏக்கால முந்தனக் கென்னவொரு செயலிலா வேழைநீ யென்றி ருந்திட்
டெனதாவி யுடல்பொருளும் மௌனியாய் வந்துகை யேற்றுநம தென்ற அன்றே
பொய்க்கால தேசமும் பொய்ப்பொருளில் வாஞ்சையும் பொய்யுடலை மெய்யென் னலும்
பொய்யுறவு பற்றலும் பொய்யாகு நாளென்னல் பொய்யினும் பொய்யா கையால்
மைக்கா லிருட்டனைய இருளில்லை யிருவினைகள் வந்தேற வழியு மில்லை
மனமில்லை யம்மனத் தினமில்லை வேறுமொரு வரவில்லை போக்கு மில்லை
அக்காலம் இக்கால மென்பதிலை யெல்லாம் அதீதமய மான தன்றே
அண்டபகி ரண்டமும் அடங்கவொரு நிறைவாகி ஆனந்த மான பரமே.

—தாயுமான சுவாமிகள்.

## அன்னை

ந. பழனிவேலு

1. கருவான நாள்தொட்டுக் கண்ணுய்ப் பேணும்
கருணைநிறை எனதன்னைக் கமலத் தாளை
உருகுமனம் தன்னுலும் கண்ணீ ராலும்
உவப்புடனே கழுவி நீ ராட்டி னேனே!

2. சாதிமத பேதமதை விட்ட போழ்தே
சகலருமே ஒன்றென்னும் ஞானம் உண்டாம்
ஓதுமுன தன்னைதிரு கமலத் தாளை
உண்மையுடன் பணிந்திடவே பரம ஞானம்.

3. காதல்தனை வெல்லுமொரு சக்தி யுண்டேல்
கருணைபொழி எனதன்னை அன்பே கண்டீர்
மதலைமொழி தன்னைக்கேட் டுருகும் நெஞ்சம்
மாதாவிற் கன்றிவே றொருவர்க் குண்டோ?

4. "மாதாவை ஒருநாளும் மறக்க வேண்டாம்"
மானிலத்தில் அவளன்புக் கிணைதா னுண்டோ?
வேதாக மங்களிலே காண்ப தெல்லாம்
விருப்பமுடன் உனதன்னைக் குழைப்பாய் என்றே.

5. ஆதலினல் சோதரனே நாமும் இன்று
அன்னைதனைப் போற்றுதலின் மேன்மை கண்டோம்
ஓதுவோம் அவள்புகழைக் கர்வத் தோடு
உலகினிலே காணுகின்ற தெய்வம் என்றே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட்டாதே யென்னையொன்றில் நாட்டி யிதமகிதவ, காட்டாதே யெல்லாம்நீ கண்டாய் பராபரமே.

# வியாபார தேவதாரு

# வனங்கள் பதிவுசெய்யப்பட்டன

இப்பத்திரிகையை வாசிக்கும்போது இக்கடுதாசி எப்படி, எங்கே உண்டாக்கப்படுகின்றதென்பதைப்பற்றியும் இதை இன்னும் உண்டாக்குவதற்குப் போதிய அளவு தொழிற்படாத பொருள்கள் இருக்கின்றனவா வென்பதைப்பற்றியும், நீர், எப்பொழுதாவது சிந்தித்ததுண்டா. அப்பொழுதுதான் மரமும், மரச் சோத்தியும் தற்கால நாகரீக வைபவத்தில் எத்துணை முக்கிய அம்சமாகத் தொழிற்படுகின்றனவென்பதையும் இதில் பணம் முதலிடுவதினால் எத்துணை லாபமுண்டு என்பதையும் உணருவீர்.

இப்பணமுதலீடு மிகப்பிரயோசனமுள்ளதும், 680 தீவிரவளர்ச்சியுடையதும் அவற்றின் பாதுகாப்புக்கு உத்தரவாத முடையதுமான தேவதாருமரங்களைக்கொண்ட சொரியலான ஒரு ஏக்கர் நிலத்தைக் குறிக்கும்.



உலகின் எல்லாப்பாகங்களிலுமுள்ள அதி தீவிர சித்தமும் மிக்க உபாயமும் உள்ள வியாபாரிகளினால் இது வரையில் 500000 தங்கப்பவுண்கள், வியாபாரவளர்ச்சிச் சாதனங்களில் முதலிடப்பட்டிருக்கின்றன.

யாழ்ப்பாணத்தில் வசிக்கும் நீங்கள் மிக்க சாவதான மானவும் செட்டானவும் பழக்கங்களிற் பேர்பேனவர்கள். ஆகவே இன்னும் மேலதிகமாக இதைப்பற்றி நீங்கள் விசாரிப்பீர்களானல் இப்பணமுதலீடு உங்கள் மனதைக் கவரவேண்டும். கவரும்.

ஒவ்வொரு சாதனமும் எடுக்கும்போது ரூ. 67 ச. 50ம் பின் 30 மாசங்கட்கு மாசாமாசம் ரூ. 13 ச. 50 கட்டவேண்டிய தோன்ருகும்.

மதிக்கப்பட்ட வரும்படி 2000 ரூபா முதல் 4500 ரூபா வரையில் ஒவ்வொரு 10—12 வருடங்கட்கும்.

"நியூஸிலண்ட்" நாட்டிலேயுள்ள வனம் 6-கோடியே 30 லட்சம் ஏக்கரிலிருந்து 1 கோடியே 20 லட்சம் ஏக்கராகக் குறைக்கப்பட்டு விட்டது. இந்த மரக்குறைவை நிவிர்த்தி செய்வதற்குப் புதிதாசச் செய்கைபண்ணப்படும் வனம் 50 லட்சம் ஏக்கர் நடப்பட வேண்டியது அவசியம்.

இச்சங்கத்தின், இலங்கையின் பிரதான காரியாதிகாரி இப்பொழுது யாழ்ப்பாணத்திலிருக்கின்றனர். அவர் சாதனங்கள் புதிதாகச் சேருபவர்களுக்குக் கொடுக்கின்றனர். யாழ்ப்பாணக்காரியாலயத்திற்கு எழுதினல் அவர் சந்தோஷமாக உங்களை வந்து சந்தித்து இவ்வியாபாரத்தைப்பற்றி இன்னும் நன்கு விளக்குவார். அவர் வருவதினல் நீங்கள் எவ்வித கடமையும் உடையவர்களாகமாட்டீர்கள்.

எதிர் காலத்தைப் பற்றிச் சிந்தியுங்கள்.

தொழிலிலிருந்து இளைப்பாறியபின்னர் இப்பண முதலீட்டின் பலனை அனுபவியுங்கள்,

உங்கள் குழந்தைகட்காக.

அவர்களுக்கு நல்ல கல்வியூட்டுவதற்கு நிச்சயம் பண்ணிவைத்தல் ஒவ்வொரு பெற்றரின் பெருமையும் கடமையுமாதும்.

## "சீ. பி. எவ்." சாதனங்கள்

நஷ்டம்தராதபடி பத்திரப்படுத்தப் பட்டிருக்கின்றன என்பதை நினைவு கூருங்கள்

இலங்கையின் பதிவுபண்ணப்பட்ட காரியாலயம் :-
ஹொங்கொங் வங்கிக் கட்டிடம்,
கொழும்பு

யாழ்ப்பாணம் காரியதரிசி
சுப்பிரமணியம்-நாகலிங்கம்
நெடுந்தெரு, காங்கேசன்துறை

10-5-36.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| பத்திரக்கிரயம் | |
|---|---|
| இலங்கை, இந்தியா, பர்மா | ரூபா 4. |
| மலாய்நாட்டுக்கு | வெள்ளி 4. |
| சீவியசந்தா | ரூபா 40. |
| தனிப்பிரதி | சதம் 5. |
| இந்தியாவுக்கு | ,, அணா 1. |
| மலாய்நாட்டுக்கு | ,, காசு 7. |

# ஈழகேசரி

| விளம் பரவிகிதம் | |
|---|---|
| முதன்முறைக்கு | |
| ஒருகலம் | ரூபா 7-00 |
| ,, அரைக்கலம் | ,, 4-00 |
| ,, காற்கலம் | ,, 2-50 |
| அரசியல்சம்பந்தமான விளம்பரங்களுக்குச் சலார் வேறு. | |

தொகுதி—எ. } யாழ்ப்பாணம், சுன்னுகம்: தாதுவுடு தைமீ கஅ௳ (31-1-37) ஞாயிற்றுக்கிழமை { பகுதி—உஎ


## இக்காலமக்கள்வாழ்க்கையின் வனப்பு.

(தமிழ்ப்பண்டிதர், வண்ணை: நே. வை. செல்லையா அவர்கள்)

(முற்றொடர்)

இக்காலத்தில் ஒருவகுப்பார் பக்தி மார்க்கத்தையும் சமயத்தையும் பதிபுண்ணியத்தையும் மக்களுக்குப் போதிப்பவர்போலவும் செய்பவர்போலவும் அதற்குரிய வேடத்தை உத்தியோக உடுப்பாக வைத்துக்கொண்டு, மக்களை மயக்கியும் வஞ்சித்தும் பொருள் பெருக்கித் தங்கள் சுகக்ஷேமங்களை நிலைப்படுத்திக்கொண்டு காலங்கழிக்கின்றார்கள். இவர்கள் வள்ளிநாச்சியார் கூறியபடி "இவ்வேடர் குலத்துக் கெல்லாமோர் கொடும்பழியைச் செய்தீரே" என்றபடி முடிகிறது. இனித் தொழின்முறைகளை எடுத்துக்கொண்டால் தேநீர்க்கடையோ, சிற்றுண்டியோ, பேருண்டியோ, ஆடை ஆபரணதிகளோ, பிறவோ கொண்டு செய்யும் வர்த்தகங்கள் யாவற்றினும் அவ்வவற்றின் தன்மைகளைப் பார்வைக் கொன்றாக்கியும், பிறப்பினை யொன்றாக்கியும் செய்து பிறரை மயக்கிப் பொருள் பெருக்குவதிலே கருத்துடைய வணிகரைப் பட்டின மருங்கிற் பரக்கக் காணலாம். செட்டு என்பதின் உண்மைக் கருத்தை நாம் தெளிவாக அறிந்துகொள்ள வேண்டும். செட்டின் உயர்வும் இழிவும் அதன் நோக்கத்தைப் பொறுத்தவை. செட்டு என்பது—வியாபாரம். விடுதலைக்காக அன்புடனும், உண்மையுடனும்; நேர்மையுடனும் பெறும் பொருளுக்குத் தகுதியுடையதாயும் கைக்கொள்ளப்படும் செட்டு மிக வுயர்ந்ததாகும். ஆங்கிலேயர் இதில் ஓர் அளவுக்கு உண்மையுடையவர்கள். இந்திய இலங்கை மக்களிடத்தில் இத்தகைய உணர்ச்சி வருதற்குக் குதிரைக்குக் கொம்பு முளைக்கவேண்டும். நாளைக்குப் பாயசங் குடிப்பதற்கு இன்று கஞ்சி குடிப்பது கேவலம். இதனை நாயனார் "கெடுவல் யானென்பதறிக தன் நெஞ்சம் நடுவொரீஇ யல்லசெயின்" என்பதில் விளக்கியிருக்கின்றார். தனது நெஞ்சறிய நியாயத்தினின்றும் விலகித் தவறானவற்றைச் செய்தால் அதனால் யான் கெடுவேனென்பதை யொவ்வொருவனு முணரவேண்டும் என்பதாம். இவ்வதிகாரத்தை நாயனார் எவ்வாறு கூறி முடிக்கின்றாரெனின், "வாணிகஞ் செய்வார்க்கு வாணிகப் பேணிப் பிறவும் தம்போற் செயின்" பிறர் பொருள்களையும் தம்முடைய பொருள்போலக் காத்துச் செய்தால் அச்செய்கையானது வாணிகஞ் செய்வார்க்கு நல்ல இலாபமாகும் என்று முடித்திருக்கின்றார். இதற்கு இக்காலத்து நமது நாட்டார் "பேணுதலை" மாத்திரம் தவிர்த்துக்கொண்டு மற்றதைச் செய்து வருகின்றார்கள். இதுதான் வித்தியாசம். ஆனால் இது ஒருவித கீழ்ப்படியிலுள்ளார் கொள்கை. கவலைகளிலிருந்து விடுதலையடையும்பொருட்டு உண்மையையும் நேர்மையையும் பற்றுக்கோடாகக்கொண்டு குடிசையில் கஞ்சி குடித்து வாழ்தல் தேவர்களாலும்போற்றப்படும் சீரிய வாழ்க்கையாகும். நமது வாழ்க்கைத்துறையில் நாமே செய்துகொள்ளும் பல தேவைகள் உண்டு. அநேகமாக இன்றியமையாத—நமக்குரிய சில பொருள்களை—தேவைகளைத் தூக்கிச் செல்லவும் முடிக்கவும் கூலிக்காரன் வேண்டியிருக்கிறது. அத்தகைய நிலைக்கு நம்மைக் கொண்டு சென்றது நாகரிக வாழ்க்கையேயன்றி வேறில்லை. அவைகளைத் தானே நிறைவேற்றிக் கொள்வதைப் போல நாகரிகம் வேறில்லை. பிறரைக்கொண்டு நன்றாக வேலைசெய்துகொள்வதினும் தன்காரியத்தைத் தானே குறைகளுடன் செய்துகொள்வது சிறந்ததாகும். இஃது இப்பொழுது ஒரு சிலருக்குத் தாழ்வாகக் காணப்படலாம். ஆனால் எக்காலத்துக்கும் எல்லாருக்கும் அதை விடச் சிறப்பு வேறில்லை.

நமது உத்தியோகமுறை, குடும்ப நிர்வாகம், சொத்துரிமை என்னும் இவற்றில் மட்டுமே சீர்திருத்தம் தேவையென மதித்துவிடக்கூடாது நமது சமுதாயம் என்னும் கட்டிடம் முழுவதையும் இப்போதுள்ள மின்சாரவேக வியக்கத்தினின்று புதியவொழுங்கினுக்கு மாற்றிக்கொள்ளவேண்டும். பள்ளிக்கூடம், சமயம், கலியாணம், வர்த்தகம், விஞ்ஞானமாகிய எல்லா வாழ்க்கைத் துறைகளிலும் சீர்திருத்தம் அவசியம். இயற்கை ஒருகணமேனும் தூங்குவதில்லை. தன்னைத்தானே அது செப்பனிட்டவண்ணம் இருக்கிறது. ஒவ்வொரு வைகறையிலும் நமக்கு ஒரு புதியகாலை அது தருகிறது. மனிதனும் இயற்கைத் தேவியின் வழிபற்றித் தன்னைத் தானே திருத்திக்கொள்வானாக என்னும் பாடத்தை வைகறைக் காலமானது பறவைகளின் மூலமாகவும், நிலையியற்பொருள்மூலமாகவும் நமக்குக் கற்பிக்கின்றது. பொய்மையையும் பிறரை ஏமாற்றும் திருட்டுத் தன்மையையும் உதறித் தள்ளவேண்டும். அறிவுக்குப் பொருத்தமில்லாத எதனையும் செய்யக்கூடாது. இந்த அறவழியில் தலையிடுவோருக்குப் பெரிய பெரிய இடருந் துன்பமும் குறுக்கிடக்கூடும்—நிச்சயமாகவே குறுக்கிடக்கூடுமென்பதை நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும். ஏன்? நிர்வாணிகளுடைய ஊரில் கோவணதாரி பைத்தியகாரனல்லவா? மரணமே [illegible] மானுடைய அம்மரணம் மணம்பொருந்தியதாகவிருக்கும். தமிழ்நூற் கருவூலமாகிய குறிஞ்சிப் பாட்டில் 13—18-வது அடிகள் நினைவில் வைக்கத் தகுந்ததாகிறது.

"முத்தினும் மணியினும் பொன்னினும் அத்துணை
நேர்வருங் குரைய கலங்கெடின் புணரும்
சால்பும் வியப்பும் இயல்பும் குன்றின்
மாசறக் கழீஇ வயங்குபுகழ் நிறுத்தல்
ஆசறு காட்சி ஐயர்க்கும் அந்நிலை
எளிய வென்னார் தொன்மருங் கறிஞர்"

நல்லிலக்கணங்கள் அமையப் பெற்ற முத்தானும் மாணிக்கத்தானும் பொன்னானும் பொருந்துதலமைந்த ஆபரணங் கெடின் பின் வந்து கூடும். தத்தங் குலத்திற்கேற்ற குணங்களினமைதியும் மேம்பாடும் ஒழுக்கமுமாகிய அவற்றின் பழையதன்மை கெடின் அதனால் உண்டாகிய அழுக்கைப் போம்படி கழுவி மேன்மையான புகழை முன்புபோல நிற்கும்படி நிறுத்தல் சகல கலைகளையுமறிந்த குற்றமற்ற அறிவினையுடைய தெய்வ இருடிகளுக்கும் எளிதான காரியமல்ல என்பது இதன் கருத்து. (தொடரும்)

ஈழத்தறிஞர்

## ஸ்ரீமான் கு. கதிரவேபிற்ள்ளை அவர்கள்.

[ஆகாயவசனி நிலையத்தில் வெள்ளவத்தை, திரு. தூல. சபாநாதன் அவர்கள் நிகழ்த்திய சொற்பொழிவு]

(முற்றொடர்)

**ஆசிரியர்:**

கி. பி. 1848 இல் பீ. ஏ. பரீட்சையிற் றேறியதும் பிள்ளையவர்கள் செமினரியிலே ஆசிரியராக அமர்ந்தார். பின்னர் உவெஸ்லியன் மிஷனுக்கும் சிறந்த ஓர் ஆசிரியர் தேவையெனக் கண்டபொழுது ஜோன் வால்ற்றன் பாதிரியார் பிள்ளையவர்களையே தெரிந்தெடுத்து அவருடைய சம்மதத்துடன் தமது மிஷனில் சேர்த்துக்கொண்டார். கி. பி. 1851ம் ஆண்டில் இம்மிஷனின் கீழுள்ள மத்திய பாடசாலையில் ஆசிரியராகச் சேர்ந்தார், சேர்ந்து நான்கு வருடம்வரை படிப்பித்தார்கள். இவருடைய ஆசிரியத்திறமையானும் நல்லொழுக்கத்தானும் பாடசாலைத் தலைவரில்லாதிருந்த காலத்து இவரையே பதிற்றலைவராகக் கடமைபார்க்கும்படி தெரிந்தெடுத்தனர். மொழி பெயர்ப்பதிலும் மிக்க பயிற்சியுடையவரென முன்னரே குறிப்பிட்டாம். இந்த மிஷனைச் சார்ந்த பேர்சிவல் பாதிரியார் விவிலிய நூலை மொழிபெயர்த்தற் கெண்ணினர். பலர் உதவி புரிந்தனரெனினும், நூலின் எளிய இனிய நடைக்கும் பொருட்செறிவுக்கும் காரணர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் அவர்களும் பிள்ளையவர்களுமாம்.

**பத்திரிகை நடாத்தல்:**

யாழ்ப்பாணத்தில் பண்டைக் காலந் தொடங்கியே பத்திரிகையில் அதிக ஊக்கம் இருந்திலதென்பது நன்கு புலப்படும். இடக்கிடையே சில அறிஞர்கள் ஆர்வத்தொடு தொடங்கிய பத்திரிகைகள் பல ஈராட்டைப் பருவமடைய முன்னரே இறந்துபட்டொழிந்தன. தமிழர்களின் முன்னேற்றத்திற்குப் பத்திரிகை இன்றியமையாததொரு கருவி. ஆங்கிலத்தும் தமிழிலும் பத்திரிகைகள் மலிந்திருத்தல வேண்டும். அவற்றைப் படித்தின்புறும் பழக்கமும் நம்மவர்களிடத் துண்டாதல் வேண்டும். பத்திரிகை சிறந்தோங்கலும் படிப்போர் அதிகரித்தலும் ஒன்றற்கொன்று தொடர்புடையவாயிருத்தலின், தமிழன்பர்கள் சிறிதளவாயினும் சிந்திப்பார்களாக.

யாழ்ப்பாணத்தில் கி. பி. 1841 இல் 'உதயதாரகை' உதயமாயிற்று. இது பிறைவெளியீடாகவும் (மாதமிருமுறை) ஆங்கிலமும் தமிழும் ஒருங்குள்ள பத்திரிகையாகவும் வெளிவந்தது. ஹென்றி மாட்டின் என்பவர் பத்திரிகாசிரியராகவும், பாயசன் உடையார் துணைவராகவும் கடமைபுரிந்து வந்தார்கள். தமிழர்கள் முன்னேற்றமடைவதற்கும், தமிழர்களின் குறைகளை ஏனையோருக்கு அறிவித்தற்கும், தமிழர்களின் நோக்கங்களையும் சிறப்புக்களையும் புலப்படுத்தற்கும், ஆங்கிலப்பத்திரிகையொன்று நம்மவர்க்கு இன்றியமையாது வேண்டப்படுமெனக் கருதினர் பிள்ளையவர்கள். பிறரொருவரும் முன் வாராமையால் தாமே 'Literary Mirror' 'இலக்கியவாடி' என்னும் பெயருடன் திங்கள் வெளியீடொன்றைத் தொடங்கினர். இதன் முதற்பிரதி கி. பி. 1853-ம் ஆண்டு வைகாசி மாதம் 6-ந்தேதி வெளிவந்தது. இப் பத்திரிகை இரண்டுவருடம் வரையில் ஆங்கிலத்திலும், தமிழிலும் பல கட்டுரைகளைத் தன்னகத்தே கொண்டு அறிவுச் சுடர் பரப்பி வந்தது. பிள்ளையவர்களின் தந்தையாரும் பல செய்யுட்களையும், கட்டுரைகளையும் எழுதி இதனை அணி பெறச் செய்தார். பொருள் வருவாயினைப் பொருட்படுத்தாது இரண்டு வருடம் வரை பிள்ளையவர்கள் பாடுபட்டும் தமிழர்கள் அதனை யுணராமையால் பத்திரிகை நின்றுவிட்டது.

**வழக்கறிஞராதல்:**

'இலக்கியவாடி' யெனும் பத்திரிகையை நடத்திய பொழுது பருத்தித்துறையில் நீதவானாயிருந்த (Leisching) லீசிங் துரையவர்களோடு பிள்ளையவர்கள் பழக நேர்ந்தது. துரையவர்கள் சிறந்த கல்வியாளர். ஆங்கிலத்தில் இலங்கைச் சரித்திரமெழுதியிருக்கின்றார். பிள்ளையவர்கள் தமது நிலைமையை இன்னுஞ் சிறப்பிக்க வேண்டுமென அவரது சுற்றத்தார் வேண்டிக் கொண்டதற்கிணங்கி, ஆசிரிய பதவியினின்றும் விலகி,

(தொடர்ச்சி 14-ம் பக்கம் பார்க்க)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏசுநாதனை மனதார வணங்குகின்றோமா!

## எவ். பி. குரேசியர் என்னும் ஆங்கில படைத்தலைவரின் அன்பு மொழிகள்.

(திரு. க. வேலுப்பிள்ளை)

இப்பெரியார் பரம்பரையாகப் போர்த்தலைவர்களின் வழியிற் றோன்றிய மாபுருடர். அவர் ஆங்கிலத்தில் கூறும் மொழிகளை தமிழில் பெயர்த்தெழுதுவாம்:—

அன்பர்களே!

இவ்வளவென மதித்தற்கரிய பெருந்தொகைப் பணத்தை மக்கள் செலவுசெய்யவும், எண்ணிலடங்காப் பண்டங்களை வணிகர் விற்றுப் பெரும்பொருள் படைக்கவும், அன்பினர், உற்றார், அயலார், வேற்றாரார் எல்லாரும் ஒருங்கே குழீஇ இன்படையச்செய்யவும், புகைவண்டித்தொடர்கள் பலப்பல மிக விரைவிலோடவும், ஆடகரும் பாடகரும் அளியருந்திக் களிகொள்வோரும் ஆங்காங்கு கூடி யாடவும் பாடவும் ஆனந்திக்கவும், இவ்வாற்றால் பல கவலைக்கிடனுய பாமரரும் சற்றே இன்பத்திலோங்கவும் செய்யவும் பண்டிகையான "கிறிஸ்மஸ்" மீளவும் ஒருகால் எம்முழை வந்துவிட்டது. எமது ஞானமுனிவரன் பிறந்த நாளாகிய இப்பண்டிகையை நாம் பேருவகையுடனும் பெருங் கிளர்ச்சியுடனும் பொருள்வருவாயைக் குறித்தோ,சின்னேரச் சிற்றின்பங்களைக் குறித்தோ அன்புடன் வரவேற்றுக் களிக்கின்றோம். ஆனால் அதேஊக்கத்துடனும் மனநிறைவுடனும் அப்பெருமானையும் அவர் திருவாய்மொழிகளையும் நாம் போற்றுகின்றோமா?

அவர் பெருநாள் விழாவின் குதூகலம் எம்முள்ளங்களைக் கொள்ளை கொள்வதும் ஒரு சிறு நேரமேயாம். பின் நாமவற்றை மறந்து உலகவாழ்க்கையின் சிக்குகளு ளகப்பட்டு, பொய்யுங் குறளையும் புன்றொழிற் செய்கைகளும் பயின்றும், வலியருக்குடைந்தும் மெலியரை வாட்டியும் எஞ்சிய பெருங்காலத்தைக் கழிக்கின்றோம். ஆனால் இவ்விழாவின் கொண்டாட்ட காலஞ் சிறிதளவிற்றெனினும் அது பெரும் பயனுடைத்தாயிருக்கின்றது.

மக்கள், பகைவர், நொதுமலர், நண்பர் என்றவேற்றுமையின்றி, பல துறைகளிற் பயின்று சுழலும் மனத்தையடக்கி, தாம் பெற்ற இன்பம் வையகமும் பெறுவான் விழைந்து தம்முயிரைத் தியாகஞ்செய்த பெருமுதல்வன் சீரைப் பாராட்டி அவர் வாழ்வின் மேன்மையை வியந்து வியந்து எங்கு மின்பமும் அன்பும் பொங்க ஆனந்திப்பர். இவைகளெல்லாம் அந்தோ சிறுகணப்பொழுதேயாம். இந்நிலையில் என்றும் நின்று பெருவள்ளலின் ஞானபோதனைகளை எங்கும் பரவச்செய்து தாமு மவ்வாறு ஒழுகுவார்களேயானால், இது அழியாத பேருவகையை உலகிடை நாட்டுமன்றோ — காலக்கொடுமையால் நாம் அம்முதல்வனை மறந்துவிட்டோம்.

அன்பர்களே!

என் வாழ்க்கையின் பெரும்பகுதியை யான் ஓர் படைத்தலைவனாயிருந்தே சழித்தேன். இவ்வாழ்வு அன்பு மறனுமற்ற வெறுவாழ்வென்பதை அறிவேன். அறிந்தும் அதனையே கைக்கொண் டொழுகவேண்டிற்று. அவ்வாழ்வின் பயனாக, நாம் சிறிது நேரம் கொண்டொழுகும் "இக்கிறிஸ்மஸ்" என்னும் அன்புடை வாழ்வு, எம் வாழ்நாள் முழுதும் பரவிவருமேயானால் இன்று உலகை வாட்டும் ஆசையும் பகையும் போரும் தோல்வியுமாகிய பண்பில்லா வாழ்வினின்றும் விடுதலையடைவோமென்பதை நான் உணர்ந்தேன்.

"டீன்இன்ஜ்" என்னும் மடாதிபதியொருவர் "இரண்டாயிரம் ஆண்டுகளாக நாம் கிறித்துவசமயம் எனவொன் றிருக்கின்றதென்பதனை அறிவோம். ஆனால், அச்சமய உண்மைகளை அறிந்து அவற்றிற்குத்தக ஒழுக இன்னுந் தொடங்கவில்லை" என்று கூறி யிரங்குகின்றார். இவர் கூற்று முழுவதும் உண்மையென்றே நானுமுணர்கின்றேன். உண்மையில் அச்சமயக் கொள்கைகளுக் கமைய நாம் ஒழுகினோமாயின், இன்று எமது ஐரோப்பிய நாட்டின் தரைப்பரப்பெல்லாம் பாடிவீடுகளாகவும்,ஆங்குள்ள பண்டங்களெல்லாம் படைக்கலங்களாகவும் மலிந்திராவன்றோ. இன்று நாம் எந்நிலையிலுள்ளோம் எனப் பாருங்கள். அன்றொருநாள் இங்கிலாந்தின் கோயிலதிபதிகளை நோக்கி "சண்டையை நீக்கிச் சமாதானவாழ்வைப் பற்றுங்கள்" என்று போதிப்பது வேதநூலில் விலக்கப்பட்டதொன்றெனக் கூறுமாறு எமது யுத்தமந்திரியார் கூறினார். இவர் எமது வேதக்கொள்கைகளை மறந்துவிட்டார்போலும். மறந்ததோடு வேதநெறியும் படையரண் போதனையும் ஒன்றோடொன்றொவ்வாதன வென்பதையும் மறந்துவிட்டார். அம்மட்டோ, எமது பாராளும்மன்றத்து அங்கத்தினர் சிலர், தற்கால இளைஞர் தேசிய உணர்ச்சியினு லுந்தப்பட்டு, தேசபாதுகாப்பிற்காகத்தம்மைத்தியாகஞ்செய்கின்றார்களல்லரெனக்கண்டு, அவ்வாறு அவர்களைப் படையிற் சேர்க்கவேண்டிய கட்டாய விதிகளையும் வகுக்க எண்ணுகின்றார்களாம். தேசியதாகம் என்பது இதுதானே?

எமது வேதமோ, ஒரு சாதியான் தன் சாதியையே மேலெனக் கொண்டு, ஏனையோரைக் கடிந்து, படையாணை மெச்சி, அகங்கரித்துக் கூவுதல் தேசியக் கொள்கையாகமாட்டாதெனக் கூறும். இதற்கு மாறுபட்ட கொள்கையினரைக் கடவுள் ஏன் வைத்திருக்கின்றாரோ! இவரலன்றோ 1914-ம் ஆண்டு தொடங்கிய மாபெரும் போர் நிகழ்ந்தகாலத்தில் யேசுநாதன் செய்த "மலைப்பிரசங்கத்தைத் துண்டுப்பத்திரங்கள் வாயிலாகவேனும் அச்சடித்துப் பரப்பக் கூடாதென்றும், அவ்வாறு செய்யின், அது அரசவிரோதமாகக் கணிக்கப்படும் என்ற நவீன கொள்கையும் பரவியது. சாந்தமும் அன்பும் நல்வாழ்வின் அடிப்படைகளெனக் கூறும் வேதக்கொள்கை, அவாவும் பகையுங் கொண்டு அயலோரைக் கொல்லக் கூறும் படையாட்சிக் கொள்கையோடு முரண்படுமென்று அவர்களறிவார்கள். அதனாலன்றோ மலைப் பிரசங்கத்தை ஒறுத்து, ஏசுநாதரையும் பிறநாட்டிற்கனுப்பி, அவருக்கும் சற்றே ஆறுதல் கொடுக்க எண்ணிவிட்டார்கள்.

ஜெர்மனி தேசத்தில் இன்னும் இத்தீய கொள்கையே குதிக்கின்றது. சர்வாதிகாரியாகும் திரு. கிட்லர் துரைமகனுருடைய சமயகுரவர் வேதநூலை மாற்றி எழுதிவிட்டார். எவ்வாறு தமது தலைவர் தங் நாட்டினின்றும் யூதர்களை ஒட்டிவிட்டாரோ,அஃதேபோல தாம் இயற்றும் புதிய வேதநூல்களிலும் தங்கள் நவீன கொள்கைகளுக் கொவ்வாதனவற்றை நீக்கிவிட்டார். இவர்களின் புதிய வேதத்தில் விதந்தெடுத்துக் கூறப்படும் ஏசுநாதர் "நாசரெத்" என்னும் நாட்டில் பிறந்தவரல்ல, பின் நாசிக்கட்சியினர் மனைகத்துவக்கில் முளைத்த ஏசுவேயாம். இப்புதிய குழந்தையின் வாயினின்றும், "பிறிதொன்றின் உயிரையுங் கொல்லாதேயுங்கள்" என்ற பழைய பாடத்தை யொழித்து "ஓர் உயிரையும் வஞ்சித்துக் கொல்லாதீர்கள்" என்ற மழலையைப் பேசுவித்து மகிழ்கின்றார்கள். இம்மழலை, அரசியல் விருத்திக்கும் அயல்நாட்டை யடக்கி அதனைக் கைப்பற்றும் படைப் பெருக்குக்குமாக பிறஉயிர்களை அச்சமின்றிக் கொல்லலாம் என்ற இன்ப ஓசையை விரித்துநிற்கின்றது.

இனி "உலகில் அன்பைப் பெருக்கி அமைதியை விளைப்பவர் வாழ்க" என்ற வாக்கை மாற்றி "தந்தேயத்தாருடன் மாத்திரம் ஒற்றுமைப்பட்டு வாழ்வாரே நீடூழிவாழ்க" என்ற ஓர் புதுமொழியையும் புகட்டுகின்றார். தந்தேயம் வாழ்விற் சிறப்பதைக் காண்பதும் அயல்நாடுகள் எப்பாடுபடினு மெமக்கென்குறை என்பதுமே இவர்களின் கொள்கைகள். இவ்வாறான தடுமாற்றங்க ளுள்ளபோதினும் ஜெர்மனியர் ஏசுநாதரின் பிறந்தநாள் வைபவத்தை விமரிசையாகக் கொண்டாடுவதே விந்தையினும் விந்தை!

இனி, இத்தாலியதேசத்தில் இத்தினமும் ஏசுநாதன் உயிர்த்தெழுந்து விண்ணேறிய தினமுமாக இருநாட்களும் பெருநாட்களாகக் கொண்டாடுகின்றார்கள். இந்நாட்டுச் சர்வாதிகாரியான முஸோலினி என்பார் மக்கள் என்றும் ஒற்றுமையுள்ளாரா யன்புடன் வாழ்தல் என்பது, தமதுகொள்கைக் கெதிர்நிலையான தொன்றென்றும் அஃதறிவிலார் கூற்றென்றுங் கூறுவார்.

ஆனால் ருசியா நாட்டிலோவெனின், இத்தினக் கொண்டாட்டம் முற்றாய் ஒதுக்கப்பட்டதுமன்றி, பதினெண்கோடி மக்களில் ஒருவராவது வேதநூலை விலைக்கேனும் வாங்கப்படாதெனவும் தடுத்திருக்கின்றார்கள். தடுத்து உலகம் நடுங்கக் கடும் போர் செய்யும் நோக்கமாக பெருமுயற்சிகள் செய்கின்றார்கள். இவைகள் இவ்வாறாக,

எமது வேதக் கொள்கைகளோ இவ்வாறு யுத்தசன்னதங் கொள்ளுமாறு கூறவில்லையென்பதே யுண்மை. அது உண்மையான அறத்தாறறின் வழி மக்களை நடக்கப் போதிக்கின்றது. ஒருவனைக்கொல்லவோ, வஞ்சிக்கவோ, ஏமாற்றவோ அன்றி, சுதந்திர தாகத்தால் இவ்வாறு செய்ய—செய்விக்க ஒருவன் துணையாயிருந்தும், பின் இவற்றிற்கு முழுமாறான நல்லறம் போதிக்குங் கடவுட் கொள்கைகளையும் அவன் நாடுவதென்பது மூயற்கோடேயாம். இனி இந்த யுத்த சன்னதப் பெருந் தாகம் பகைநாட்டாருடன் சண்டைசெய்வதோடு நில்லாது, எமது வாழ்க்கையினும் பார்ந்து வலியாரே வாழ்தற்குரியாரென்ற திமிரத்தையும் படரச்செய்கின்றது.

போர்க்களங்களிலெல்லாம் படையெடுத்துச் சென்று, ஆங்கு நிகழ்ந்தனவற்றைக் கண்ணாரக்கண்ட எனக்கு ஒவ்வொரு சாதியாரும் யுத்தத்திற்காக எவ்வளவு பரபரப்புடன் அரண்கோலுகின்றார்களோ அவ்வாறே, இன்னும் அதிகமாகவேனும், உலகிற் சமாதானத்தை நிலைநிறுத்த இவர்கள் எல்லோரும் கூடி உழைக்கவேண்டுமெனத் தோற்றுகின்றது. உண்ண உணவின்றி, இருக்கஇடமின்றித்தவிக்கும் ஏழைகள் இருக்க, கோடிக்கணக்கான பொருளைச் சேனை யமைத்துப் படைக்கலமாக்கலிற் செலவுசெய்வதால் சமாதானம் ஏற்படுமோ? மேலும் ஒருவரின் படைவலியைக் கண்டு மற்றவர் பொறாமையும் திலும் பயமு மடைந்திருக்கும்போது, அவர்க ளிருபகுதியாராலும் சமாதானம் நிறுவப்படமுடியுமா?

பாருங்கள்!

பிரான்சுதேசத்திலே சனங்கள் கூறற்கரிய துன்பங்களால் நலியவும், அவர்க ளிலம்பாட்டை நீக்கவேண்டிய பணத்தில், கோடிக்கணக்கான ரூபாய்களைப் படையரணிற் செலவு செய்கின்றார்கள். ஏன்? ஜெர்மனி "றெயின்" பிரதேசத்தைக் கைக்கொண்டு படை யரண்செய்கின்றதாம். அந்தோ, "விதிவலியாற் கெடுமதி கண் தோன்றுதன்றோ!"

அன்பர்களே!

மேற்போந்தவற்றால் நாம் இன்னுங் கையாளும் நவீன கொள்கைகளும் நோக்கங்களும் பயனற்றவை எனவும், அவற்றை நீக்கிவிடவேண்டுமெனவும் தெரியவில்லையா? அதிகாரிகள் வாய்மதங்களும், தேசிய கொள்கைகளும் அரசியற்றிருத்த முறைகளும் உலகை நன்னெறி படரச்செய்கின்றோமென்று வாய்ப்பறை கூறுவார் வெறு வாய் மொழிகளுமாமிவை எல்லாம் ஆரவாரமாத்திரையாகத் தோன்றி அவர்களோடு மடிகின்றன.

ஆனால், இற்றைக்கு இரண்டாயிரம் வருடங்களாக எத்தனையோ சண்டமாருதங்களுக்கெல்லாந் தப்பித் தலையெடுத்துவரும எமது தெய்வக் கொள்கையோ அவரி னடிக்கொழும்பு பூண்ட அடியார்களால் போற்றப் பட்டுவருகின்றது. இதுவொன்றுமே அக்கொள்கை போதகமுடைத்தென நிலைநாட்ட வல்லதொன்றன்றோ.

புதுப்பணம் படைத்தவன் வாழ்வுபோல, இந்த நவீன கொள்கைகளும் தேய்ந்துபோமென்பதில் ஐயமில்லை. ஏன். உலகச் சிக்குட்பட்டுழன்று உழன்று மேலும் லசிக்குக்குள் தம்மை வீழ்த்தியபின், அத்தொடக்குகளினின்றும் விலக்கிக்கொள்வதற்கு மனிசர் பழங்கொள்கைகளின் பற்றையே நாடிநிற்கிறார்கள்.

இன்று நடக்கும் குழப்பங்களைக் கண்டு பயந்து நடுங்கியிருக்கும் குடிகளாகிய நாம், எமது அரசினருக்கு உலக நன்மையை விரும்பி சில இடித்துரைக்கும் உரித்துள்ளோம். அன்பும் அருளும் எல்லோருக்கும் உரிமைப்பொருள்கள். இவ்வன்பு வாழ்வை எம் இல்லங்கடோறும், தொழில் நிலையங்கள்தோறும், வீதிகள்தோறும் விளங்கச்செய்ய இன்று முயல்வோம். இனி எம்மக்களிற் பெரும்பாலார் யுத்தமுனைக் கேகிப் போர்செய்வதற்குடன்பட்டிருக்கவில்லை. சண்டையால் தாம் முன் அடைந்தனவும், பின் வரப்போகின்றனவுமான கோரமான பேறுகளை அவர்களறிவார்கள்.

இனிப் போர் வேண்டுமென வாய்ப்பறையறைந்த காலமும் போய் விட்டது. நாடுகளின் தலைவர்கள் ஒருவரோடொருவர் பகைத்துப் போர்க்கெழுதல் அரசியலி னமைதிக்கோர் பெருங்கேடாய்விடுமென அறிவார்கள்.

அன்பர்களே!

இத்தலைவர்களும் இவர்களையொத்த வேறு பெரியாரும் உலகத்திலே பெருஞ் சரிதை நூலாகவும், வீரம் புகட்டும் நூலாகவும், அருஞ்சொல்களைக் காட்டும் நூலாகவுமுள்ள ஏசுநாதரின் வாழ்வு நூலாகிய வேதத்தைப் படித்து, நன்னெறி ஒழுக்கிற் றலைப்பட்டு, தம் வாழ்நாட்களில் சிறு நாட்களையேனும் தவப்பொழுதாக்குவார்களோவென நான் மிகவும் விழைகின்றேன்.

அன்பர்களே! நாம் எமது சுயநல விருப்பையும், எமக்கென வாழும் வாழ்க்கையையும் வெட்டி வீசி, ஒருவரின் இன்பமும் துன்பமும் மற்றவ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமயம்.

## எது உண்மை? எது பொய்?

"உண்மைச் சமயம் Dr. கஸின்ஸ்போன்ற பெரியாரைக் கவர்ந்துவிடுகிறது. போலிச் சமயம் Dr. அம்பேத்கார் போன்றவரை வெளியே ஓட்டிவிடுகிறது."

"தீண்டாமை தலைவிரித்தாடி விருத்தியடையின் இந்துசமயம் இறந்துவிடும்" என மகாத்மாகாந்தியடிகள் ஒருமுறை கூறியதுண்டு. அவருக்குத் தீண்டாமை முற்றாகநீங்குவது, இந்துசமயத்தின் அடிப்படையான கொள்கையாகும். அவர் வாழ்க்கையில், தர்மத்துக்கே பிரதம ஸ்தானம் அளிக்கப்படுவதாகும். தமது சீவனிலும் பார்க்க அதனைப் பெரிதாக ஓம்புவர். மனித இயற்கைக்கு முழுமாறான இத் தீண்டாமையாம் கொடிய நோயைக் களைவதே அவரின் பிரதம நோக்கமாகும்.

திருவாங்கூர் மன்னரின் மகத்தான அறிக்கையை மகாத்மா மிக ஆரவாரத்துடனும் மனக்களிப்புடனும் ஏற்றார். இனியாவது அவர் "தீண்டாமை விருத்தியடையின் இந்துசமயம் இறந்தொழியுமெனச் சொல்லாதிருப்பாராக. தீண்டாமை விரைவில் விட்டு நீங்குமென்றும் இந்து சமயம் பன்மடங்கு விருத்தியடையுமென்றும் நம்பிக்கைகொள்வாராக.

சமீபத்தில் காந்தியடிகள் ஓர் தலயாத்திரை செய்பவர்போல் திருவாங்கூர் சென்றனர். திருவாங்கூரில் ஹரிஜனங்கள் ஓர் இடத்தில் வாசித்துக் கொடுத்த பத்திரத்துக்குப் பதிலளிக்குங்கால், அவர் கூறியதாவது:— "தீண்டாவகுப்பினைச் சேர்ந்த யான், சடுதியில் தீண்டக்கூடியவனானேன் என்ற களிப்புடன் இந்த யாத்திரையை மேற்கொண்டேன்."

ஹரிஜனங்களின் சமய ஈடேற்றத்தில்மாத்திரம் அவர் அக்கறை கொண்டவரல்லர். அவர்களது சமுதாயவாழ்வு, சன்மார்க்கநிலை, பொருளாதாரநிலை என்பனவற்றிலும் பெரிதும் கவனஞ் செலுத்திவருகின்றனர். உண்மையான முன்னேற்றத்தை ஹரிஜனங்களடைவதற்கு அவர்கள் அறியாமையும், வறுமையும் நீங்கவேண்டும்.

ஆசாரதிருத்தங்கள் ஏற்படுவதை விரும்பாத கட்சியினர், மகாத்மா இந்துசமயத்துக்குப் பெருங்கெடுதி விளைக்கின்றாரெனக் கூக்குரலிடுகின்றனர். ஆனால், மகாத்மா என்ன சொல்கின்றார்? இந்துசமயம் அழிந்து போகாமல் போதிய பாதுகாப்புகள் ஏற்படுத்துவதாகக் கூறுகின்றனர். எனவே, இவ்விருகட்சியினரும் இந்து தர்மம் என்றால் என்ன என்பதைக் குறித்து அபிப்பிராயபேதமடைகின்றனர். திருத்தத்தை விரும்பாத பிற்போக்குக்கட்சியினர் நாட்டில் அதிகப்பட்டு அனுசரணையிலிருந்த வழக்கத்தைச் சமயம் என்று நம்பி மோசம் போயினர். தீண்டாமை முதலிய கொடிய வழக்கங்கள் எவ்வளவுக்குச் சமயத்தோடு சேர்ந்திருக்கின்றனவென்பதை அவர் அறியார்.

இந்துசமயத்தின் பாதுகாவலர்களாக நடிக்கும் சனாதனதர்மக் கட்சியினர், அச்சமயம் பாழடையாதபடி காப்பாற்றினரா? ஆலயங்கட்குள் ஹரிஜனங்கள் நுழைவதை அவர்கள் திடமாக எதிர்த்தனர். இவர் செய்கையின் பெறுபேறு யாது? Dr. அம்பேத்கார்போன்ற தலைவர்கள் இந்து சமயத்தைக் கைவிடுவதாக முடிவுசெய்ததே. இவர்போன்றவர்கள் இந்து சமயத்தை ஓர் கொள்ளைநோய் என்றனர்.

இந்துக்களின் சமய சாஸ்திரப்படி அவர்களின் அரசர் விஷ்ணுபிரானின் அவதாரமெனக் கருதப்படுவர். சமயசாஸ்திரங்களை நன்கு தேர்ந்து ஆராய்ச்சிசெய்த பண்டிதர்களின் அங்கீகாரத்தோடு, ஆலயங்களை ஹரிஜனங்கட்குத் திறந்துவைத்த திருவாங்கூர் அரசரின் செய்கை, நீதிக்கு மாறெனச் சனாதனதர்மக் கட்சியினர் கூறுவது சிறிதும் பொருந்தாது.

திருவாங்கூர் மன்னரின் அறிக்கையின் பின்னரும் ஆலயப் பிரவேசத்தை யாராவது எதிர்ப்பின், அது இந்துசமய விசுவாசிகளின் செய்கையாக மதிக்கப்படமாட்டாது. குருட்டுத்தனமான நம்பிக்கை காரணமாகவும் போலிவாழ்க்கையின் காரணமாகவும் எழுந்த நீதியற்ற செயலென்றே அது கூறப்படும். மாற்றங்களை விரும்பாத தேசவிரோதிகட்குத் திருவாங்கூர் அரசினர் சரியான அடிபோட்டுள்ளார்.

உண்மை யாதெனில், Dr. அம்பேத்காரும் சனாதனதர்மக் கட்சியினரும் இந்துசமயத்தின் பூர்வீக புனிதநிலையை அறியாது தத்தளிக்கின்றனர் என்பதே இந்துசமயத்தின் தூய்மை தீண்டாமையாம் அழுக்குள் மறைந்துகிடக்கின்றது. புகையானது அக்கினியை மறைத்து நிற்பதுபோல், இந்துசமயத்தின் தூயநிலையை அறியவிடாது தீண்டாமை மறைத்துநிற்கிறது. இப்புகையை அகற்றிவிட, திருவாங்கூர் வாசிகள் ஆரம்பித்துள்ளார். திருத்தத்தை நாடாத சனாதனதர்மக் கட்சியினரின் அக்கிரமத்தின்பயனாக, Dr. அம்பேத்கார் சமயமாற்றத்தை நாடின், திருவாங்கூர் அரசரின் மகத்தான செயல் காரணமாக, Dr. கஸின்ஸ்போன்ற பெரியார்கள் இந்துசமயத்தைத் தழுவிக்கொள்கின்றனர். Dr. கஸின்ஸ் என்பவரோ, அதிபிரசித்திபெற்ற கல்விமானும் புலவருமாவர். திருவாங்கூர் ஆலயங்கட்குள் யாவரும் புகலாமென அறிக்கை வெளியிட்டதும், Dr. கஸின்ஸ் அவர்கள் இந்துமதத்தைத் தழுவி, திருவனந்தபுரத்திலுள்ள ஆலயத்துள் புகுந்து கடவுள்வணக்கஞ் செய்தனர். சில கிரியைகள் செய்யப்பட்ட பின்னரே, இவர் இந்துசமயத்துள் சேர்க்கப்பட்டனர். இவர்க்குச் ஜெயராம் என்ற நாமம் புதிதாகக்கொடுக்கப்பட்டது. இது, இராமரின் உண்மைச் சீவியத்தின்பயனாக, நாம் கற்றுக்கொள்ளும் உண்மையான அறிவின் ஜெயமே என்போம்.

ஆகையால், உண்மைச் சமயம் Dr. கஸின்ஸ் போன்றவரைக் கவர்ந்துவிடுகிறது. போலிச் சமயம் Dr. அம்பேத்கார் போன்றவரை வெருட்டிவிடுகிறது. ஆகவே பழைய கொள்கைகளை இறுக்கிப் பிடிப்போர் இன்னும் அப்படிச் செய்வாரா? அப்படிச் செய்யின், அவர்கள் பெருநட்டத்தை இழைப்பவராவர். இவர்களின் குருட்டு நம்பிக்கையே இவர்களின் பிற்போக்கான கொள்கைகட்குக் காரணம்.

"The Maharatta."

ருக்குமாறெனக் கண்டு, உண்மையான சகோதரத்துவம் பூண்டு அருணெறிப் படர்ந்து அன்பே கடவுளெனக் கண்டு வாழ்வோமாக.

சொல்லுவதியாருக்குமெளிது; சொல்லியவாறு செய்தலோ அரிது. நாம் சொல்வனவற்றைச் செய்கையிலுங் காட்டி நன்மை கடைப்பிடித்து வாழ இன்றேமுயல்வோமாக. (வரும்)


## ஏஜெண்டுகள் தேவை

சுதேச சவர்க்காரக் கைத்தொழிற்சாலையில் தயார்செய்யும் பலவிதமான சவர்க்காரங்களும் விற்பனை செய்வதற்கு யாழ்ப்பாணத்திலும் மற்றும் இடங்களிலுய் ஏஜெண்டுகள் தேவை. முழுவிபரங்களும் எழுதியறிகுக.

*Write to the Manager,*
**The Ganesh Oriental Soap Works,**
15, Temple Road
Mutual
COLOMBO, *(Ceylon)*

(242) 24-1-37—2.


## நற்குணங்கள்

(B. Franklin)

எல்லாத் தீயகுணங்களையும் முற்றாக அகற்றிவிட்டுச் சன்மார்க்கமுடையனாயிருக்க விரும்பினேன். ஒருபிழையும் செய்யாத வாழ்வை நாடினேன். இந்திரியங்களின் சேட்டை, வழக்கம், சகவாசம் என்பன காரணமாகத் தோன்றும் தீமைகளை விலக்கமுயன்றேன். சரியெது? பிழையெதுவென நான் அறிவேன; பின்வன் பிழையை விலக்கிச் சரியைச் செய்யக்கூடாதெனை எண்ணினேன். விஷயங்களை அனுட்டானத்தில் கொண்டுவர முயன்றதும் பல சங்கடங்கள் ஏற்படக்கண்டேன். செய்ய இயலாத ஒரு விஷயத்தை ஆரம்பித்துவிட்டதாக எண்ணி வியாகுலமடைந்தேன். ஒரு தீமையைத் தடுக்க முயன்றபோது இன்னொரு தீமை எதிர்ப்பட்டது. பராமுகமாயிருப்பின் பழைய பழக்கங்கள் தலைகாட்ட முற்பட்டன. நியாயவரம்பையும் சிற்சிலபோது மனவிருப்பம் மீறி விட்டது. சன்மார்க்க வாழ்வினை நடாத்த, சும்மா விரும்பின அளவில் கூடியதாகும் என்ற எண்ணம் பிழையென்பதை அறிந்தேன்.

தீயகுணங்களை முற்றாக ஒழித்து, நற்பழக்கங்களைப் பழகுவதே சன்மார்க்க வாழ்வுக்கு வழியாகுமென அறிந்தேன்.

சில நற்குணங்களை மிகச் சுருக்கமாகவும் விளக்கமாகவும் குறித்து வைத்து, அவைகளின்படி நடக்க முயன்றேன். அவை பின்வருமாறு:—

(1) மௌனம்

மற்றவர்களுக்கு அல்லது உனக்கு, பயனை அளிக்கத்தக்க விஷயங்களையன்றி வேறொன்றும் பேசாதே. உபயோகமற்ற சம்பாஷணைகளைக்கைவிடு.

(2) கிரமம்

உனது பொருட்கள் குறிக்கப்பட்ட இடங்களில் இருக்கக்கடவன; செய்யும்வேலையைக் குறித்த குறித்த நேரத்தில் செய்து முடிப்பாயாகுக.

(3) திடசிந்தை.

உனது கடமையைச்செய்துமுடிக்கத் தீர்மானஞ்செய்; உனக்குக்கிடைத்ததைக் குறைவின்றிச் செய்துமுடி.

(7) அடக்கமான செலவு.

உனக்கு அல்லது மற்றையோர்க்கு நன்மை ஏற்படக்கூடிய விஷயங்கட்குச் செலவு செய்யலாம்; வீணாகப் பொருளை விநியோகிக்காதே.

(5) முயற்சி.

காலத்தை வீணாக்காதே; உபயோகமான விஷயத்தில் எப்போதும் காலத்தைச் செலவிடவேண்டும். வீண் தொழில்களில் தொடர்பு வையாதே.

(6) உள்விசுவாசம்.

மற்றையோரை அணுப்பி அவர் மனதைப் புண்படுத்தாதே. மற்றையோர்கட்குத் தீங்கிழைக்காத வண்ணமாகவும், நீதியாகவும் சிந்தனை செய்; பின் பேசும்போதும் அவ்வாறே பேசுவாயாக.

(7) நீதி.

தீங்கிழைத்து மற்றையோர்க்கு நட்டத்தை உண்டாக்காதே; உனது நன்மையைச் செய்துவிட்டு மற்றையோர்க்கு நட்டத்தை வருவியாதே.

(8) தாராளகுணம்.

அளவுக்கு மிகுதியாகப் பட்சமும், அன்றேல் அளவுக்கு மிகுதியாகக் கோபாவேசமும் கூடாது. மற்றையோர் செய்யும் குறைகளைப் பொறுத்துக் கொள்ளல் வேண்டும்

(9) சன்னதம்.

அற்ப விஷயங்களில் ஆத்திரங்கொண்டு சன்னதமாடாதே. காத்திராப்பிரகாரமாக, அல்லது தடுக்க முடியாதவிதமாக வரும் கஷ்டங்களைக் கண்டு ஆரவாரஞ் செய்யாதே.


# தொல்காப்பியம்

**எழுத்ததிகார - மூலமும்**

நச்சினார்க்கினியருரையும்

**வித்துவான் சி. கணேசையர் எழுதிய**

**உரைவிளக்கக் குறிப்புக்களும்.**

பொருளடக்கம்

1. பதிப்புரை,—2. ராவ் பகதூர் சி. வை. தாமோதரம் பிள்ளை அவர்கள் வரலாற்றுச் சுருக்கம்,—3. உரைவிளக்கக் குறிப்பின் முகவுரை,—4. தொல்காப்பியர் வரலாறு,—5. நச்சினார்க்கினியர் வரலாறு,—6. எழுத்ததிகார மூலமும் - நச்சினார்க்கினியருரையும் - உரைவிளக்கக் குறிப்புக்களும்,—7. சூத்திர அகராதி,—8. உதாரண அகராதி,—9. அரும்பதவிளக்க முதலியன,—10. முற்பதிப்புக்களில் விளக்கப்படாத மேற்கோள் விளக்கம்,—11. விஷய அகராதி,—12. அநுபந்தம் (அளபெடை, எழுத்துப்போலி).

**சிறந்த பதிப்பு** **விலை ரூபா 4.**

தபாற்கூலி வேறு.

**1-4-37 க்குப் பின் விலை ரூபா 4-50.**

பிரபல புத்தக வியாபாரிகளிடத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

**தனலக்குமி புத்தகசாலை,**

**சுன்னாகம், இலங்கை.**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலக்கியப் பகுதி

# குமாரசுவாமிப் புலவர் பெற்ற கடிதங்கள்.

பின்வருங் கடிதத்தில் தி. த. க. பிள்ளையவர்கள், கம்பர்சமயம், கம்பர் கொள்கைகள், அக்கொள்கைகளுக்கு ஆதாரமான நூல்கள் முதலியவற்றை ஆராய்ந்து எழுதியிருக்கின்றனர்.

சுன்னுகம், 29-1-37 கு. முத்துக்குமாரசுவாமிப்பிள்ளை

கடிதம் 60 (1908)

Stone House Hill,
Ootacamund, May 3,1908.,

ஐய,

சென்ற மாதம் 14ம் தேதி வரையில் ஒரு கடிதம் எழுதினேன். அதன் பின் தங்கள் கடிதம் ஒன்றும் வரவில்லை. நான் சென்னையிலிருந்து சென்றமாதம் 18-ம் தேதி புறப்பட்டு இங்கே 19-ம் தேதி இரவு வந்து சேர்ந்தேன். வரும்போது நாலு இராமாயண ஏடுகள் கந்தசா[illegible] முதலியாரிடங் கொடு[illegible]த் தங்களுக்குக் கா[illegible]ைகை அனுப்பும்போது கூட அனுப்பிவைக்கும்படி சொல்லிவிட்டு வந்தேன். என்னிடத்தில் இங்கே ஏழு ஏடுகள் இருக்கின்றன. அவற்றிலொன்று சாமிநாதையர் கொடுத்த பிரதி. அது ஆலங்குடி வரதராஜ முதலியார்களது. அதில் படல வேறுபாடுகளும், பாடபேதங்களுமுள, படலங்கள் கடவுள் வாழ்த்துப் படலம், அவையடக்கப் படலம், பாயிரப்படலம் என்று போகின்றன. இந்தப் பாயிரப்படலம் மற்றப் பிரதிகளிலில்லை. அது 27 பாடல்களுள்ளது. "உலகமு முலகத் துயிரையு முதவுமொரு பொரு ளொருவரு மறியா திலகிய பிரமப் பெரும்பரஞ் சோதி" என்பது முதற்பாட்டு. "கலை முனிவர் வாழ்க" என்றற் றொடக்கத்தது கடைசிப்பாட்டு. யாழ்ப்பாணப் பிரதிகளில் பாயிரப்படலமென்று ஒன்று இருப்பதாகத் தாங்கள் சொன்னதுண்டு. அதற்காக இதை எழுதுகின்றேன். அதுவு மிதுவு மொன்றுதானோ? இப்பாயிரப் படலத்துப் பாட்டுக்கள் கம்பர் பாட்டாய்க் காணப்படவில்லை.

சிவகங்கையிலிருந்து நண்பரொருவர் ஒரு பிரதி அனுப்பியிருக்கிறார். அது இன்னும் வந்து சேரவில்லை. அது அங்குள்ள இங்கிலிசுப் பாடசாலையுபாத்தியாயராயுள்ள சொக்கலிங்க ஆசாரியரது. திருநெல்வேலிக்கும் எழுதியிருக்கின்றேன். அதற்கு மறுமொழி இன்னும் வரவில்லை. பாண்டித்துரைத் தேவரிடமிருந்து மறுமொழி வந்ததோ? கருப்பொருளையும் எழுதினீர்களோ? பிரதிகள் வேண்டுமானால் இன்னும் அதிகம் சம்பாதிக்கலாம்.

கம்பருடைய கொள்கைகளுக்கு ஆதாரங்கள் என்னவென்று ஆராய்ந்து வருகின்றேன். துருவாசமுனிவர் இந்திரனுக்குச் சாபமிட்டது சொல்லும்போது அவர் வான்மீகர் சொன்னபடி சொல்லாது விஷ்ணு புராணத்திற் சொன்னபடி சொல்லுகின்றார். விஷ்ணுபுராணத்திற் கூட லக்ஷ்மியிடத்திலிருந்து மாலை பெற்று வந்தாள் என்று சொல்லப்படவில்லை. இது கம்பர் தாமாகவே சேர்த்திருக்க வேண்டும். இரணியன் வதையும் விஷ்ணு புராணத்திலேயே சொல்லப்பட்டிருக்கின்றது. திருவரங்கத்தைப்பற்றி பவிஷ்யேத்தர புராணத்திற் சொல்லப்பட்டிருப்பதாகக் கண்டேன். அதில் என்ன சொல்லப்பட்டிருக்கிறதென்று பார்க்கவேண்டும். பாற்கடல் கடைந்தது சொல்லும்போது விஷ்ணு புராணத்தில் ஔஷதிகள் போட்டுக் கடைந்ததாகவே சொல்லப்பட்டிருக்கின்றது. இவைகளைப் பார்க்கும்போது கம்பர் இந்தப் புராணங்களை யெல்லாம் நன்குணர்ந்தவராகவே காணப்படுகிறார். கம்பர் சொல்லுவதற்கு ஆதாரம் எங்கெங்கே இருக்கிறதென்று சொல்லுவது உலோகோபகாரமாகவிருக்கும். இங்கிலிசில் பெரிய கிரந்தங்களை அச்சிடுபவர் செய்வதும் இதுவே. கம்பர் அங்கங்கே விஷ்ணுவுக்கு மகிமை[illegible] கற்பிப்பதனுலும் விஷ்ணு புராணத்தில் சொல்லுபவைகளை எடுத்து இன்னும் சிறப்பித்துச் சொல்லுவதனுலும் கம்பர் வைஷ்ணவராகக் காணப்படுகிறார். இவற்றைப்பற்றித் தாங்களும் ஆராயவேண்டும். "தேவபாடையி னிக்கதை சொன்னவர் மூவராமவர்தம்முளும் முந்திய, நாவினுரையின்படி நான் சொல்லுகின்றேன்" என்பதைத் தீர்க்க விசாரிக்க வேண்டும்.

நான் ஒவ்வொரு ஏடாகஒத்துப்பார்த்துவரப்போகிறேன். கவனிக்கவேண்டியது கண்டவிடத்து அப்போதப்போது அறிவிப்பேன். நாம் செய்யும் அரும்பதவுரை சாமிநாதையருரைபோல் பதங்களுக்குரையாகவிருக்கப்படாது. பொருண்முடிபு இலக்கண முடிபுகளை எடுத்துக்காட்டிக் கம்பர் கொள்கைகளுக்கு ஆதாரங்கள் காட்டிச் செல்லவேண்டும். குறள் சீவகசிந்தாமணி முதலியவற்றிலிருந்து எடுத்த சொற்களையும் பொருள்களையும் இயன்றவரை காட்டவேண்டும். பதங்களுக்கு அர்த்தம் இன்றியமையாதவிடத்திலன்றி மற்றிடங்களில் எழுதப்படாது. சிந்தாமணிக்கு நச்சினார்க்கினியர் எழுதிய உரைபோல் அவ்வளவு விரிவு வேண்டியதில்லை. அது போல் பொருண்முடிபும் இலக்கண முடிபும் காட்டினுற் போதும்.

தங்களன்பன்
தி. த. கனகசுந்தரம்.

### திருத்தம்

இதற்குமுன் வெளிவந்த 59-வது கடிதத்தின் முதற்பகுதியிலுள்ள பாட்டின் இறுதியிலுள்ள "வேண்டும', என்ற சொல்லைக் "கேண்மோ" என்று திருத்திக்கொள்க. கு. மு

(தொடரும்)


## PREMIER INSURANCE & BUILDING SOCIETY Ltd., Madras.

யாழ்ப்பாண சங்கத் தலைவர்:—
திரு. நெவின்ஸ் செல்வத்துரை B. A., M. B. E., (Late) M. S. C. வண்ணார்பண்ணை.

பணி செய்து கிடப்பதே எம்கடன் * தேச வாழ்வுக்கு உழைப்பதே தொழில் *
PREMIER INSURANCE & BUILDING SOCIETY LTD. MADRAS ESTD.. 1934.

தலைமை ஏஜன்ற்:—
திரு. ஜே. றி. ஹென்ஸ்மன் வண்ணார்பண்ணையும் சாவகச்சேரியும்.

(1) இரண்டு லட்சம் ஆட்கள் ஒன்றுபட்டு இப் பணியைச் செய்யக்கூடியதா யிருக்கிறது.
(2) பூரண நம்பிக்கைக் குரியது.
(3) எவ்வித பண நஷ்டமு மில்லாதது.
(4) லாபங்கள் காலம் செல்லச் செல்ல அதிகரித்து வரும்.

அங்கத்தவருக்கு வரும் பெரும் இலாபங்கள்:-

(1) 12½ ரூபாயைக் கட்டினவர்கள் ரூபாய் 200|- உரிமை லாபம் அடைகிறார்கள்.
(2) 100|-ரூபாயைக் கட்டினவர்கள் ரூபாய் 1000|- (ஆயிரம்) பெற்றுக்கொள்ளலாம்.
(3) விவாகம் ஆகும்போது கொடுக்கப்படுகிறது.
(4) மாதம், மாதமாய் தீர்க்கக்கூடிய கடன் ரூபா 250|- லிருந்து ரூபாய் 5000|- வரையும் எடுக்க ஒழுங்குகள் உண்டு.

| | |
|---|---|
| 31 உரிமையாளருக்கு கொடுக்கப்பட்ட உபகாரப்பணம் | ரூ. 7595|- |
| மூலதனம் (இருப்பு) | ரூ. 200,000|- |
| வருஷ பிரீமியர் வருமானம் | ரூ. 100,000|- |
| அரசாட்சியாரிடம் பிணைப்பணம் | ரூ. 75,000|- |
| ஈட்டுக் கடனில் இருப்பது | ரூ. 200,000|- |
| வீமாமூலம் கொடுக்கப்பட்டது | ரூ. 2,250|- |


### சங்கானைத் துரைக்கு 18 மாதச்சிறை

சென்ற 26-ந் திகதி செவ்வாய்க்கிழமை யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டில் சங்கானையைச்சேர்ந்த கே. சுப்பிரமணியம் என்பவரிடமிருந்து சென்ற ஆவணிமாதம் 14-ந் திகதி இரவு சங்கானைத் துரை என வழங்கும் டீ. சி. ஐயாத்துரை, (2) சுப்பிரமணியம், (3) செல்லத்துரை என்பவர்களும் வேறு சிலருமாக ஏறக்குறைய 500 ரூபா வரையில் பறித்துக்கொண்டு ஓடிவிட்டதாகக் குற்றஞ்சாட்டித் தொடரப்பட்ட வழக்கில் 1-ம் 2-ம் எதிரிகளைக் குற்றவாளிகளெனக் கண்டு தனித்தனி 18 மாசக் கடூழிய மறியல் விதிக்கப்பட்டது.

### நூதனமான வியாதி

அமெரிக்காவில் புளோறிடா என்னுமிடத்தில் வசித்துவந்த மெஸ். ஹார்வேட் ஸ்றில்மான் என்பவன் அதிகம் பேசும் குணமுடையார். அவர்க்கு வயது 44. கிறீஸ்த வேதங்களில் அதிகம் பயிற்சியுடையவர். 18 நாட்களாக இரவும் பகலும் இடைவிடாது பேசிக்கொண்டிருந்தமையே இவர் நோயாகும். இவர் பைத்தியகாரரல்லர். கேட்போருக்கு ஏற்ற விடையளிப்பர். பேசுவதும் கேட்போர்க்கு உவந்ததாகும். பேச்சைத் தடுக்க இயலாதாயிற்று. நாளாந்த புதினங்களைப் பற்றியும் பேசிவந்தார். வைத்தியர் அவுஷதம் கொடுத்து இவரை நித்திரை கொள்ளச் செய்தனர். அப்போது அவர் உதடுகள் ஆடிக்கொண்டேயிருந்தனவாம். பேச்சு அதிகரித்ததே உணவும் நித்திரையும் அருகிக்கொண்டு வந்தன. ஈற்றில் சுரமும் ஏற்பட்டது. வைத்தியர் இவர் நோய் மிக நூதனமானதெனக் கூறினர்.

## Order Nisi

IN THE DISTRICT COURT OF JAFFNA.
Testamentary Jurisdiction } *No. 406.*

In the matter of the intestate estate of *Kanapathypillai-Saravanamuttu*

Deceased

**Nallapillai widow of Saravanamuttu of Alaveddy.**

Vs. Petitioner.

1. **Sithamparam widow of Kanapathypillai**
2. **Kanapathypillai Sinnathamby both of Tellippalai East.**

Respondents.

This matter coming on for disposal before C. Coomaraswamy Esquire District Judge of Jaffna on the 7-th day of January 1937 in the presence of Mr. V. Sandrasegara Proctor on the part of the Petitioner abvenamed and the affidavit of the said Petitioner dated the 5th day of January 1937 having been read.

It is ordered that the petitioner be and she is hereby declared entitled as widow of the abovenamed deceased to have Letters of Administration as to the estate of the deceased issued to her unless the respondents abovenamed or any other person or persons interested shall on or before the 8-th day of February 1937 show sufficient cause to the satisfaction of the Court to the Contrary.

**Sgd. C. Coomaraswamy**
*District Judge*

The 18th day of January 1937.
(248) 24-1-37—2.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியச்செய்திகள்

### காங்கிரஸ் சபையும் தேர்தலும்

புதிய அரசியற் சட்டப்படி இந்தியாவில் பல்வேறு பாகங்களிலும் மாகாணப் பிரதிநிதிகள் சபை, மாகாணச் சட்டசபை என்பனவற்றிற்கு பிரதிநிதிகள் தேர்தல் ஆரம்பித்துச் சுறுசுறுப்பாக நடக்கின்றன.

பண்டிதர்நேரு அவர்கள் பலவிடங்கட்குச் சென்று காங்கிரஸ் கொள்கைகளை எடுத்து விளக்கி, காங்கிரஸ் பிரதிநிதிகட்கே சம்மதம் கொடுக்கும்படி வாக்குரிமை பெற்றோர்க்குச் சொல்லுகின்றனர். கோன்பூர் நகரில் ஓர் தேர்தற் கூட்டம் நடக்கும்போது ஒரு செருப்பு பண்டிதர்மேல் எறியப்பட்டது. பண்டிதர் தயங்கினர் அல்லர். தேர்தல் விஷயமாகப் பிரசங்கஞ் செய்வதிலேயே தாம் ஊக்கமுடையரென்றும், தேர்தல் முடிவு யாதாயினும் காரியமில்லை யென்றும் பண்டிதர் கூறினர். இத் தேர்தல் மூலமாகக் காங்கிரஸ் கட்சியினரின் பெலத்தை அரசினர் அறியவும் கூடும் என்றார்.

லக்னோ நகரில் பண்டிதர் மாளவியா அவர்கள் ஒரு தேர்தல் கூட்டத்தில் பேசிக்கொண்டிருந்த போது கலகம் ஏற்பட்டது. பல்வேறு கட்சியினரும் கைகலந்து சண்டை செய்தனராம். பொலிஸ் காரர் வந்து சண்டையை நிற்பாட்டினர்.

இதுவரையில் தேர்தல் ஓரளவுக்கு அஸாம் பிரதேசத்திலும் வங்காளத்திலுமே நடந்தேறியுளது. எல்லா முடிவும் இன்னும் வெளியாகவில்லை. அஸாமில் 23 ஸ்தானம காங்கிரஸ் கட்சியினரால் கைப்பற்றப்பட்டதாம். கல்கத்தாவிலும் அநேகஸ்தானங்கள் காங்கிரஸ் வசமாயின.

### சட்டவிரோதமாம்

1929-ம் வருடக் காங்கிரஸ் சபையில் இந்தியரின் நோக்கம் பூரண சுயராச்சியத்தை அடைவதே என முடிவுசெய்யப்பட்டது. இதை இலக்காகக்கொண்டு 1930-ம்வருடம் ஜெனவரி 26-ந்திகதி இந்தியாவில் பல பாகங்களிலும் காங்கிரஸ் தொண்டர்கள் கூடி, பூரண சுயராச்சியத்தைப் பெறத் தாம தொண்டாற்றுவதாக முடிவுசெய்து, இவ்விஷயமாக ஒரு சத்தியஞ் செய்துள்ளார். அன்றுதொடக்கம் இதுவரையும் காங்கிரஸ் கட்சியினர் பூரண சுதந்திரத் திருநாட் கொண்டாட்டம் நடத்திவந்தனர். அத்தினத்தில, இந்தியா பூரண சுதந்திரம் பெறுவதை நோக்கித் தாம் தொண்டாற்றுவதாகவும், பூரணசுதந்திரத்தை அன்றி வேறெவ்வித அரசியலையும் ஏற்பதில்லையென்றும் ஓர் சத்தியப் பத்திரத்தை வசித்து அங்கீகரித்துவந்தனர்.

இவ்வருடம் அரசினர் அப்பத்திரம் வாசிக்கக்கூடாதெனவும், அது இராஜத்துரோகமானதென்றும் ஓர் அறிக்கை வெளியிட்டனர். அப்பத்திரம் அச்சிட்டு வெளியிடப்படாதென பத்திரிகைகட்கும் கட்டளை செய்தனர். ஆனால் இத்தருணத்தில் காங்கிரஸ் கட்சியினர் சட்டமறுப்பினை மறுபடியும் ஆரம்பித்துத் தமது நோக்கத்தைப் பழுதடையவிடுவரா? அன்று. எனவே, இப்பூரண சுதந்திரத் திருநாள் (26-1-37) சாதாரணமாக இந்தியா எங்கணும் கொண்டாடப்பட்டது.

### தேசீயக்கொடி

மைசூர் அரசினர் இற்றைக்குச் சில வருடங்கட்கு முன் மைசூர் பங்களூர் நகர்களில் தேசீயக் கொடி தொங்க விடப்படாதென முன் உத்தரவு செய்தது யாவரது ஞாபகத்திலும் இருக்கலாம். இப்போது இவ்விஷயமாக இன்னோர் உத்தரவு மேற்படி அரசினராலேயே பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. அதன்படி தேசீயக் கொடி மைசூர் நகரில் மாத்திரமன்றி அந்நகரைச் சுற்றியுள்ள இடங்களில் 5 மைல் சுற்றளவுக்குள் எவராவது பொது இடங்களில் தொங்க விடப்படாதாகும். மேலும் இக் கொடி சமாதானத்துக்கு மாறானதென்றும், அன்றியும் மைசூர் அரசாங்கக் கொடியிருக்க இதைத் தொங்கவிடுதல் அரசாங்கத்தின் கௌரவத்துக்குப் பங்கத்தை விளைக்குமென்றும் மேற்படி உத்தரவு கூறுகின்றது.

இவ்வுத்தரவு மைசூர் காங்கிரஸ் சபையினர் தேசீயக் கொடிகளைக் கட்டி நடத்தும் கொண்டாட்டங்கட்கு மிகவும் தடையாயிருக்குமென்றே சொல்லப்படுகிறது. இது வரையும் மைசூர் அரசினர் இவ் விஷயங்களில் அக்கறை கொண்டாரில்லை. இப்போது இவ்வித தடையுத்தரவுகளைக் கிளப்பி ஏன் சிரமப்படுகின்றனரோ தெரியவில்லை.

### தேவையில்லையாம்

சமீபத்தில் பிறிட்டிஷ் அரசியலில் எட்வேட் அரசர் பதவியை நீத்த விஷயமாகப் பெரும் மாறுதல்கள் ஏற்பட்டது யாவரும் அறிந்த விஷயம். எட்வேட் அரசர் ஸ்ரீமதி. ஸிம்சனை விவாகஞ் செய்து கொள்வதை பிறிட்டிஷ் அரசினர் விரும்பினாரல்லர். குடியேற்ற நாட்டுச் சுதந்தரம் பெற்ற நாட்டினர் அபிப்பிராயமும் இவ்விஷயத்தில் ஆராய்ந்து அறியப்பட்டது. கனடா, அவுஸ்திரேலியா, நீயுஜிலந்து, தென்னாபிரிக்கா முதலிய குடியேற்ற நாட்டினரை வினவியபோது அத்தேச அரசினர்களும் இவ்விவாகத்துக்கு உடன்பட்டாரில்லை. நிற்க,

இந்தியா குடியேற்ற நாட்டுச் சுதந்தரத்தை அடையாவிடினும் இவ் விஷயத்தைக் குறித்துஇந்திய அரசினரையாவது முதன் மந்திரியாரையாவது வினவாதுவிட்டது பெருங் குறையென, இந்தியச் சட்டசபையில் ஓர் அங்கத்தவர் ஆட்சேபம் நிகழ்த்தினர். அதற்கு உத்தரமாக இந்தியா குடியேற்ற நாட்டுச் சுதந்தரத்தைப் பெறவில்லை யென்றும், ஆகையால் ஆலோசிக்கப்படவேண்டிய அவசியம் ஏற்படவில்லையென்றும் அரசாங்க அங்கத்தவர் கூறினர். இது எப்படி அங்கீகரிக்கப்படலாம். இந்தியாவின் சக்கரவர்த்தியாகும் மன்னர் பதவியை விடுங்கால், அவ்விஷயம் இந்தியர்க்குத் தெரியப்படுத்தப்படாதா? இந்தியர் குடியேற்ற நாட்டுச் சுதந்தரத்தைப் பெறுவிடினும், இந்திய அரசினரை யாவது உலக ஒப்பனைக்குக் கேட்கப்படாதா? இதிலிருந்து இந்தியாவினைப் பிறிட்டிஷார் எப்படிக் கருதுகிறாரென நன்கு விளங்குகின்றது. தமதுபால்மாடாக்கி எப்போதும் வைத்திருக்கலாமென்பதே இவர்கள் நோக்கம் போலும். இது எப்படிக் கூடும்? சுதந்தர வேட்கை இந்தியாவில் மிகுந்துளதாக, வீண் எண்ணங்கள் எதற்கு?

### சுபாஷ் சந்திரவஸு

இவர் சிறையில் வசிக்கும் காலத்துக்கு எல்லை கிடையாது போலும். அரசினர் அறிக்கைப்படி இவரால் தேசத்தில் கலகம் ஏற்படாதெனத் தமக்கு நன்றாக விபரங் கிடைப்பின், தாம் இவரை விடுதலை செய்யத் தடையில்லை யென்று கூறுகின்றனர். அக்காலம் எப்போது வருமோ? இவர் நிறை 171 இறாத்தலிலிருந்து 161 இறாத்தலாய் விட்டது. அரசினர் அறிக்கைப்படி தேகாரோக்கிய நிமித்தம் கவலைக்குக் காரணமில்லையாம். குடலில் சிறுது வலிப்பு இருப்பதற்குக் காரணம் வியன்னா நகரில் இவர்க்குச் செய்யப்பட்ட சத்திர வைத்தியமென்கின்றனர். அதனால் ஒரு கெடுதியும் ஏற்படாதாம். எப்படியாயினும் அரசினர் இவரைச் சிறையில் வைத்து இவர் சக்தியை நசிப்பது நீதியாகாது. விடுதலையடையின் இவர் நீண்டகாலத்துக்கு நலலாரோக்கியத்துடன் வாழக் கூடுமென்பது நிச்சயம்.

### காங்கிரஸ் தொண்டர் மாண்டனர்

சமீபத்தில் இந்தியாவில் நடக்கும் தேர்தல் காரணமாக ஏற்படும் சச்சரவுகட்கு ஓரளவின்று. இடைவிடாது ஏச்சுகளும், பேச்சுகளும், சண்டைகளுமே எங்கும் காணப்படுகின்றன. ஐக்கியமாகாணத்தில் லக்னோ நகருக் கருகாமையில் ஒரு தொண்டர் கொல்லப்பட்டாரெனப் புதினங்கள் கூறுகின்றன. இவர் காங்கிரஸ் சார்பாக தேர்தல் விஷயமாக வேலை செய்துவந்தனரென்றும் மாறான கட்சியினரே இவரைக் கொலைசெய்தனரெனவும் சொல்லப்படுகிறது. ஐக்கிய மாகாண காங்கிரஸ் தேர்தற் சபையினர் இவ்விஷயமாக விசாரணைசெய்யும்படி சில தலைவர்களை அனுப்பியுள்ளார். விசாரணை நடக்கின்றது.

### வேலை நிறுத்தம்


வங்காள—நாகபுரி புகைரதமார்க்கத்தில் வேலைசெய்யும் கூலிகள் 20,000 பேர் தற்போது வேலைநிறுத்தஞ் செய்துள்ளார். புகைரதப் பகுதியினருடன இவர்க்கு ஏற்பட்ட விரோதம்மே இதற்குக் காரணமாகும். புகைரதப் பகுதியினர் போதிய காரணமின்றி 1,110 வேலைகாரரை வேலையினின்றும் நிற்பாட்டினதே வேலைநிறுத்தத்தின் சமீபகாரணமாகும். இப்போது இருகட்சியினர்க்கு மிடையில் சமரசத்தைக் கொண்டுவர இந்திய அரசினர் பெரிதும் முயலுகின்றனர். தொழிலாளர் பிரதிநிதியாகும் ஸ்ரீமான். V. V. கிரி என்பவர் டெல்கிநகர்க்குச் சென்று வியாபார அங்கத்தவருடன் இவ்விஷயமாகக் கலந்து பேசுகின்றாராம். புகைரதப் பிரதிநிதியும் அங்கு சென்று சமாதானப் பேச்சில் சேர்ந்துகொண்டனர். இப்போது இருகட்சியினரும் ஓரளவுக்கு இணங்கிவிட்டனரெனவும் வேலைநிறுத்தம் முடிவுக்கு வருமெனவும் சொல்லப்படுகிறது. சில வேலைக்காரரை மறுபடியும் வேலையில் நியமிக்கும் விஷயத்திலேயே அதிக விவாதம ஏற்படுவதாகின்றது.

### பிரிவாற்றுமை

மயிலிட்டி தெற்கு பரமானந்தர் அவர்களின் புத்திரனும், மயிலிட்டி தெற்கு ஞானோதய வித்தியாசாலை உதவி ஆசிரியருமாகிய வயிததிலிங்கம் என்பவர் தமது 34-ம் பராயத்தில் ஏற்பட்ட நோய்காரணமாகத் தைமாதம் அ-ந் திகதி (21-1-37) வியாழக்கிழமை ஒருமணியளவில் தமது பாரியாரையும் அன்பிற்குகந்த குழந்தைகள் மூவரையும் பரிதபிக்க விடுத்துச் சிவபதமடைந்தமை பிரலாபிக்கத்தக்க தொன்றாகும். இவரது பிரிவாற் றுயருறுவார் யாவருக்கும் எமது அனுதாபம் உரியதாகுக. கடி.


நேரம் தவறாது வேலை முடிக்கவும்
நிதானம் தவறாது படம்பிடிக்கவும்
வேண்டுமாகில்

| அளவு |
| --- |
| 3½″ × 2½″ குவாட்டர் |
| 4″ × 5″ போஸ்ட்காட் |
| 6½″ × 4¾″ கபினற் |
| 8½″ × 6½″ புள் |
| 12″ × 10″ றேயல் |
| 15″ × 12″ ஸ்பெஷல் |



| விலை | ரு. | ச. |
| --- | --- | --- |
| 3 படங்கள் | 2 | 00 |
| ,, ,, | 2 | 75 |
| ,, ,, | 4 | 75 |
| ,, ,, | 9 | 50 |
| ,, ,, | 14 | 00 |
| ,, ,, | 18 | 00 |

வெளிப் பிரயாணங்களுக்கு பிரத்தியேகச் செலவு !

LILLY STUDIO
MAIN STREET, JAFFNA.

லில்லி ஸ்ருடியோ
முதலாயிருக்கும்.

கிளை ஸ்தானம்:
பெரியகடை ஆஸ்பத்திரி ரோட்டு, | 36-ம் நம்பர், பெரிய தெரு;
யாழ்ப்பாணம்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




வானந் துளங்கிலென் மண்கம்ப மாகிலென் மால்வரையும், தானந் துளங்கித் தலைதடு மாறிலென் தண்கடலும், மீனம் படிலென் விரிசுடர் வீழிலென் வேலை நஞ்சுண், டுமையொன் றில்லா ஒருவனுக் காட்பட்ட உத்தமர்க்கே.

— அப்பர்சுவாமிகள்

யாழ்ப்பாணம், சுன்னுகம்:
தாது ஹு தைமீ கஅஉ

## அரசாங்கசபையினரும் ஆயுள்வேதமும்

ஆயுள்வேத வைத்திய முறையின் அருமை பெருமைகளை நாம் இங்கு எடுத்துரைப்பது மிகையாகும். ஆங்கில வைத்தியமுறையை அரசினர் எத்துணைப் பொறுப்புடன் பரிபாலிக்கின்றனரோ, அவ்வாறே இந்த, இந்தியரின்பழைய வைத்தியமுறையையும் பரிபாலிக்குங் கடமையை ஏற்றுள்ளார். ஆயுள்வேத வைத்தியத்தின் அவசியத்தை நன்குணர்ந்த இந்திய அரசினர், இதைக் குறித்துக் காட்டும் அக்கறை இம்மாத்திரமன்று. எத்தனையோ ஆயுள்வேத கல்லூரிகளும் வைத்தியசாலைகளும் இந்திய அரசினர் பாதுகாப்பில் பற்பல இடங்களிலும் அமைக்கப்பட்டு நடைபெறுகின்றன. இவ்வைத்தியம் எவ்வளவு பொருட்செலவு குறைந்ததென்பதும் ஏழைகட்கு இது பெரும் உதவியாயுள்ளதென்பதையும் எவரும் மறுக்கமாட்டார்.

விஷயமிவ்வாருக, இலங்கையரசினர் இவ்விஷயத்தில் போதியளவு அக்கறைகாட்டினரென நாம் மகிழ்வுடன் கூறவியலாது. ஆயுள்வேதக் கல்லூரியொன்று அரசினர் உதவியுடன நடத்தப்படுகின்றதாயினும் அதன் விருத்திக்கேற்றவழியில் நடபடிக்கைகள்கையாளப்படவில்லையென்ற சொல்லவேண்டியிருக்கிறது. இவ்விஷயத்தைக்குறித்து எல்லாக் குறையும் அரசினர்மாட்டுஏற்றிவிட நாமஒருப்படவில்லை. சில ஆங்கிலவைத்தியரும், மேனுட்டுமயமானவாழ்க்கையைக் கைக்கொண்டோரும் இவ்வைத்தியக் கல்லூரியை நசித்துவிடப் பார்க்கின்றனர். அக்கல்லூரிக்கு அரசினர் அளிக்கும் பணம் உபயோகமற்றதெனக் கூறினரும் உளர். எப்படியாயினும் சில தேசாபிமானிகளின் முயற்சியால் இக்கல்லூரி ஓரளவுக்குச் சங்கடமின்றி நடத்தபபடுகின்றதெனலாம்.

இக்கல்லூரியின் விருத்தியில் அரசினர் அக்கறையுடையராயின் இக்கல்லூரியில் கற்றுத் தேறிய வைத்திய மாணவர் தமது தொழிலை இனிது நடாத்தச்சிற்சில சகாயமாவது செய்யவேண்டுமல்லவா? சுதேச வைத்தியசாலைகளை அரசினர் ஸ்தாபிக்க இப்போது முன்வராவிடினும் இக்கல்லூரியில் கற்றுத் தேறியவர்கள் ஏற்ற இடங்களில் வைத்தியசாலைகள் அமைத்து நடத்தின், அதன் விருத்தியின் பொருட்டுப் பண உதவி வருடாவருடம் செய்யலாம். இவ்வைத்தியர்கள் அளிக்கும் ஆரோக்கியப் பத்திரங்களை (Medical Certificate) அங்கீகரிக்கலாம். இவைபோன்ற இன்னும் பலவிஷயங்கள் அரசினரால் செய்யப்படின், ஆயுள்வேத வைத்தியம் பன்மடங்கு விருத்தியடையுமென்பதில் ஐயமின்று.

சென்றவாரம் கொழும்பு ஆயுள்வேத வைத்தியசாலையின் அமைப்பினைக் குறித்து, மிக வேகமாக விவாதம் அரசாங்கசபையில் நடந்தது. ஆயுள்வேதக் கல்லூரியில் ஆயுள்வேதத்துடன் ஆங்கில வைத்திய முறையும் கற்பிக்கப்படவேண்டுமென ஒரு திருத்தப் பிரேரணை கொண்டுவரப்பட்டது. நற்காலமாக இப்பிரேரணை நிறைவேருதது பெருங் காரியமென்றே சொல்லவேண்டும். ஆயுள்வேத வைத்திய முறையைப் பூரணமாக மாணவர் கற்று, அதில் பாண்டித்திய மடையவேண்டி ஏற்பட்ட இக்கல்லூரியில், மேல்நாட்டு முறை வைத்தியமும் கற்பிக்கப்படவேண்டுமாயின் அதனுல்ஏற்படும் அலங்கோலங்கள் பலவுள. மாணவர் இரு வைத்திய முறையையும் போகடிபோக்காகக் கற்று, இரண்டிலும் பாண்டித்தியமில்லாதவராய் விரும்பிய நன்மைக்குப் பங்கம் விளைப்பவராவார். ஒரே வைத்தியத்தை நன்கு கற்று, அதில் ஆராய்ச்சி செய்யும் பேற்றையும் பெறில், அதுவே போதுமானதாகும். ஒன்றையும் நன்கு கற்காது இரண்டையும் கெடுக்கும் கல்வி எப்படிப் போற்றப்படலாம். ஆயுள்வேத வைத்தியத்தை நன்கு கற்றோர் வேண்டுமாயின் ஆங்கில வைத்தியத்தையும் கற்றுப் பாண்டித்திய மடைந்து தமது பெருமையை நாட்டலாமே. அதைவிட்டு வெள்ளாடு போல் அதிலும் இதிலும் கடித்து ஒன்றிலும் ஆழ்ந்த அறிவைப்பெருவிடின் என்ன நன்மை உண்டாகுமோ? இவ்விதமாக இரண்டு வைத்திய முறையிலும் சிறிது அறிவைப் பெற்ருேர் நாட்டவரால் அங்கீகரிக்கப்படார் என்பதும் உண்மை. மேல்நாட்டு வைத்திய முறை எங்கிருந்து வந்ததோ? மேல்நாட்டிலும் ஆதியில் வைத்திய நூல்களும வைத்தியரும் இருந்தனரா? கீழைத்தேச வைத்திய நூல்களிலிருந்து அறிந்ததைச் சாஸ்திர முறையாக அமைத்துக் கொண்ட பெருமை மாத்திரம் மேல்நாட்டு வைத்தியத்திற்குண்டு. மேல்நாட்டு ஒளடதங்களையும் அம் மருந்துகள் எந்நோய்கட்குச்செய்யப்பட்டனவென்பதையும் ஆராய்ந்து பார்த்தால் அவை ஆயுள்வேத முறையிலிருந்து கவரப்பட்டதாகக் காணலாம்.

ஆனுல், இப்போது பிரதானமாகவிரும்பப்படுவது ஆயுள்வேதக் கல்லூரியில் கற்பிக்கப்படும் கல்வி, சாஸ்திரமுறையை அனுசரித்ததாயிருக்கச் செய்வதே. இது சடுதியில் செய்யத் தக்கதொன்றன்று. சிறிது சிறிதாகச் செய்து முடிக்கப்படவேண்டியது. அதற்கு ஆயுள்வேதக் கல்வியைச் சாஸ்திர முறையாகக கற்பிக்கும் முறை ஏற்படவேண்டும். இதைச் செய்யவியலாக்கால், ஆங்கில வைத்தியமும் அங்கு கற்பிக்கப்பட வேண்டுமென எண்ணின், அதன் மடைமையை என்னென்று கூறுவாம். நற்காலமாக இந்த உபயோகமற்ற பிரேரணையை அரசாங்கசபையினர் ஏற்ருரில்லை. அங்காதிபாதம் முதலியன ஆயுள்வேதமுறையில் கற்பிக்கப்படுகின்றதே. சத்திர வைத்திய முறையும் ஆயுள்வேதத்திற்குப் புதியதொன்றன்று ஆனுல் சத்திர வைத்தியமுறை ஆயுள்வேத வைத்தியத்தில் விருத்தியடையாதிருந்தது உண்மையே. சில சுதேச வைத்தியரின் அடாதசெயலை உதாரணமாகக்கூறி, சத்திரவைத்தியம் கற்பித்தலை ஆயுள்வேத வைத்தியசாலையில் [illegible] னவும் சிலர் அபிப்பிராயம் கூறினர். எப்படியாயினும் ஆயுள்வேதவைத்தியத்தின் பெருமையை நன்கறிந்த தேசாபிமானிகள், அரசாங்கசபையில் இடம் பெற்றிருந்தமையால் மேல்நாட்டு நாகரிகமாம் மாய்கையில் உமிழ்ந்தினேர் திட்டங்கள் அங்கீகரிக்கப்படாதாயின. எனவே ஆயுள்வேதக் கல்லூரியும் வைத்தியமுறையும் அதன்பெருமையுடன் பிரத்தியேகமாக முன்னேறவேண்டுமென்பது அங்கீகரிக்கப்பட்டது. இது பெரிதும் போற்றப்பட வேண்டியதே. ஆயுள்வேதக் கல்லூரிகள் இந்தியாவில் ஏற்றமுறையில் விருத்தியடைந்து பெரு நன்மையைப் பயப்பதைக்கண்டும், இலங்கை வாசிகள் சிலர் இன்னும் உண்மையறியாதது தூதனமாகிறது.

## சுவபாஷா ஆசிரியர்களுக்கு இருபக்கமும் இடியா ?

சுவபாஷா வித்தியாசாலைகளை வைத்து நடாத்துவோர், ஆசிரியர்களுக்குச் செய்து வந்த இன்னல்களை உணர்ந்த வித்தியாபகுதியார், அவர்களின் வேதனத்தை மாதா மாதம் அவர்களே நேரில் பெறும்படியான ஒழுங்கை இற்றைக்குச் சில காலத்தின் முன்னர் செய்துள்ளதை யாவருமறிவர். அப்படியிருந்தும், சங்கங்கள்—சபைகளின் மூலமாக நடாத்தப்படும் பாடசாலைகளின் அதிபர்கள் சிலர், தங்கள் ஆதிக்கமும் வருவாயுங் குன்றிவிடுமென நினைந்து போலும், மூன்று மாசத்துக்கொரு முறை தங்களுக்கே உதவி நன்கொடைப்பணங் கொடுக்கப்பட வேண்டுமென்றும், தாங்களே ஆசிரியர்களின் வேதனத்தைக் கொடுத்தல் வேண்டுமென்றுங் கேட்டுக்கொண்டமைக்கிணங்க, வித்தியா பகுதியாரும் அதற்குச் சம்மதித்துள்ளார்கள். அதனை அச்சபையின் கீழ் கடமை பார்க்கும் ஆசிரியர்களும் ஆமோதித்துள்ளார்கள். விஷய மிவ்வாருக, அன்றுதொட்டின்றுவரை தனிப்பட்ட பாடசாலை அதிபர்களும், மற்றும் சில சபைகளும் மீண்டும் தம மதிகாரத்தை நிலைநாட்ட முனைந்து, நேர் சம்பளத்திட்டத்தைத் தகர்த்துவிடக் கங்கணங்கட்டி நிற்கின்றனவென அறியக் கிடக்கின்றது. இபபொழுது, "அமரிக்க மிஷன்" என்னும் சபையினரால் நடாத்தப்படும் பாடசாலைகளின் நிர்வாகிகள், எக்காரணங்கொண்டோ, "ஆசிரியர் நேர்முகமாக வேதனம் பெறுவதை நிறுத்தித் தங்கள் பரிபாலனத்தின் கீழுள்ள வித்தியாசாலைகளின் உதவி நன்கொடையை மூன்று மாசத்துக்கொருமுறை தாங்களே பெற்றுக் கொள்வதற்கு வேண்டிய ஒழுங்குகளைச் செய்யுமாறு" வித்தியா பகுதியாரைக் கேட்டிருப்பதாக நாமறிகின்றேம்.

ஆசிரியர்கள், தங்கள் வேதனத்தை நேரே பெற்றுக் கொள்வதால், இவர்களுக்குண்டாகும் நஷ்டம் யாதோ? குறிதத சபையின் கீழுள்ள ஆசிரியர்கள், மேற்படி தீர்மானத்தை எதிர்த்துத் தங்கள் அபிப்பிராயத்தை வித்தியாதிகாரிக்குத் தெரிவித்திருப்பதாகவும் கூறப்படுகிறது. வித்தியா பகுதியார், ஆசிரியர்களின் வேதன விஷயமாகக் கைக்கொண்டிருக்கும் முறை போற்றக்கூடியதாயிருக்கவில்லையென்றே கூறவேண்டியிருக்கிறது. ஆசிரியர் என்ற முறையில் எல்லாரும் சமமாகவே கணிக்கப்படல் வேண்டும். ஒருவருக்கு மாதவீதமும், இன்னெருவருக்கு மூன்று மாதத்துக்கொருமுறையும், மற்ருெருவருக்கு வருட மொருமுறையும் வேதனங் கிடைக்கக்கூடிய முறையில், வித்தியாபகுதியார் பிரமாணம் வைத்திருப்பது ஏற்றதாகுமோ வென்பதும் ஆலோசிக்கத்தக்கது.

வித்தியாசாலை அதிபர்களுக்கு அவ்வவ் வித்தியாலையின் பொருட்டு ஏற்படும் செலவையும் வித்தியா பகுதியாரே கொடுத்து உதவுகின்ருர்கள். ஆசிரியர்களிடமிருந்தும் குறித்த ஓர் விகித வரி அறவிடப்படுவதும் பலரறிந்த இரகசியம். சுயாதீனத்தோடு கூடிய தொழிலை மேற்கொண்டிருக்கும் ஆசிரியர்கள் கேவலமாக நடாத்தப்படுங்கால், கல்வி விருத்தியும் அதன் நோக்கமும் யாதாகுமென்பதை உணர்ச்சியுள்ளோர் யூகித் துணர்வார்களாக.

பாஷை விருத்திக்கும் தேசநன்மைக்குமே தாம் பாடசாலைகளை வைத்து நடாத்துவதாக வெளியில் காட்டி, மறைமுகமாகத் தங்கள் சுயநலத்தை முற்றுவிக்கும் பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்களைத் துன்புறுத்த எண்ணுதல் அடாத செயலேயாகும்.

ஆசிரியர்கள், வித்தியாபகுதியாரின் பிரமாணங்களுக்குக் கட்டுப்பட வேண்டிய தொருபுறமிருக்க, அதிபர்களின் எண்ணத்துக்கும் அடங்கி, அவர்கள் இட்ட சட்டளையையும் நிறைவேற்றி வைக்காவிட்டால், தங்கள் தங்கள் நிலைமையில் பாதிக்கப்பட வேண்டியவர்களாயிருப்பதும் நிதர்சனமாய் இருக்கிறது.

இன்னும், வித்தியாபகுதியார் பயிற்சிபெற்ற ஆசிரியர்களின் நியமன விஷயத்தில் ஓர் "கோட்டா"த் திட்டத்தை உண்டாக்கப்போவதாகவும் வதந்தி உலாவுகின்றது. இவ்வாறு ஆசிரியர்களுக்கு இருபக்கமும் இடிவிழுதல் மிகவும் துக்கமான சம்பவமேயாகும்.

இனிமேலாவது, ஆசிரியர்கள் தங்கள் உரிமையை நிலைநாட்டுவதற்கு ஏற்ற வகையில் மதபேதம் முதலியவைகளைப் பொருட்படுத்தாது ஒத்துழைக்க முன்வரவேண்டுமென நாம் வற்புறுத்தவேண்டியவர்களாயிருக்கின்றேம்.

## புகையிலை நிபுணர்.

சென்ற வாரம் நடந்த அரசாங்க சபைக் கூட்டத்தில் கமத்தொழில் மந்திரியாரின் பிரேரணையின்படி ஒரு புகையிலை நிபுணரை நியமிக்க அரசாங்க சபையினர் ஒருப்பட்டுள்ளார். மேலும் நெற் செய்கையை விருத்தியடையச்செய்யும் நிபுணரும் நியமிக்கும அங்கீகாரமும் அரசாங்க சபையில் பெறப்பட்டது.

சென்ற பத்தாண்டுகளாக புகையிலையின் விலை பன்மடங்கு குறைந்தமையால், யாழ்ப்பாண வாசிகள் அடைந்து வரும் நட்டத்துக்கு அளவின்று. மலையாளத்தில் பணக் கஷ்டம் ஏற்பட்டதும் அங்கு புகையிலையின் விலையும் இறங்கியது. வியாபார முறையைத் திருத்தி யமைப்பின் ஓரளவுக்குப் புகையிலையின் விலை அதிகரிக்குமாயினும், பழைய படி யாழ்ப்பாணப் புகையிலைக்கு மலையாளப் பிரதேசத்தில் நன்குமதிப்பு ஏற்படுமென நாம் முற்ருக நம்பவியலாது.

ஆகையால், யாழ்ப்பாணப் புகையிலைவிருத்தி கைகூடுதற்கு வேறுவழிகள் காண்பதும் அவசியமாயிருக்கிறது. புகையிலையை அதிகமாக விரும்பும் நாடுகள் யாது? எவ்வித புகையிலை அங்கு விரும்பப்படுகின்றது; என்பனவற்றை நன்காராய்ந்து அதற்கியையப் புகையிலை விருத்தியை நடத்திச் செய்தற்பொருட்டு ஒரு புகையிலை நிபுணர் ஏற்படுவது அவசியம். பலவித இனப் பிகையிலைகளையும், அவைகளைப் பதஞ் செய்யும் முறைகளையும் நன்குணர்ந்த ஒருவர் நியமிக்கப்படுவதானுல் நன்மை ஏற்படுமெனத் திடமாகக் கூறலாம். மேலும் புகையிலை வியாபாரம் அதிக பொருள் வருவாயைக் கொடுக்கக்கூடிய முறையில் இத் தொழிலை நடத்துவதும் அவசியம்.

இழுக்காமை யார்மாட்டு மென்றும் வழுக்காமை, வாயினதுவொபப் தில்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணத்தில் சென்ற பல்லாண்டுகளாக நடத்தப்பட்டு வந்த சுருட்டுத் தொழிலும் இப்போது மிக்க கேவல நிலையை அடைந்துளது. இத்தொழில் யாதொரு கட்டுப்பாடுமின்றி நடத்தப்பட்டமையாற்றான் இச்நிலைக்கு வந்ததென்பது எமது கருத்து. இவ்விஷயங்கள் யாவற்றையும் புகையிலை நிபுணர் நன்கு விசாரணை செய்து இத்தொழில் விருத்தியைநாட்டப் பேருதவி புரிவாராயின் இலங்கை வாசிகள் — பிரதானமாக யாழ்ப்பாணத்தவர் — இவர்க்குப் பெரிதும் கடமைப் பட்டவராவர். புகையிலைச் செய்கையைக் குறித்தும், சுருட்டுத் தொழிலைக் குறித்தும் நிபுணராவார் காலத்துக்குக் காலம் வெளியிடும் அறிக்கைகளைப் பொது மக்கள் கையாண்டு வருவதும் அவசியம். அத்துடன் அரசினரும் இத்தொழில் தூக்கமடையாது செழித்தோங்குங்கால் நிபுணரின் கோட்பாடுகட்கிணங்கிச் சட்டங்களும் கட்டுப்பாடுகளும் ஏற்படுத்தப் பின்னிற்றலாகாது.

## என்ன கஷ்டமோ?

இந்தியாவில் சுயபாஷையில் நகரசங்கக் கூட்டங்கள், சட்டசபைக் கூட்டங்கள் நடத்தப்படுகின்றனவென்பதை நாம் பன்முறை கேட்டு ஆனந்தமடைந்துள்ளோம். சென்ற வாரம் அரசாங்கசபையில் ஓர் விஷயம் விவாதிக்கப்பட்டது. அதாவது கீழ்தர நீதிமன்றங்கள் சுதேச பாஷையில் நடத்தப்பட வேண்டுமென்பதே. இதைச் சிலர் ஆதரித்தனராயினும், பலர் ஏற்றுக்கொண்டாரில்லை. இப்படிச் செய்வதற்கு ஏற்படும் கஷ்டம் யாதென நமக்கு விளங்கவில்லை. நீதிபதி சுதேசபாஷையை அறியாதவரெனச் சிலர் கூறலாம். சுயபாஷையைக் கற்றுக் கொள்ளுதல் நீதிபதியாம் பதவியை நாடுவோர்க்கவசியமென நியதி யேற்படின் இக்குறை ஏற்படாது. இனி நியாயதுரந்தராவோர் ஆங்கிலத்திலேயே நீதியையும் சட்டங்களையும் கற்றாராயினும், தமது சுயபாஷையில் அவைகளை வெளியிடுவதில் ஏற்படும் கஷ்டம் யாதோ? ஆங்கிலத்தில் பேசிப் பழகப் பல்லாண்டுகள் கஷ்டப்பட்ட இவர், இரண்டொரு வருடங்கட்கு ஊக்கமாகக் கருத்துக்கொள்ளின் சுயபாஷையிலும் சொற்பொழிவாற்றும் வன்மையைப் பெறுவார் இது சங்கடமான விஷயமன்று. சுயபாஷையில் நீதிமன்ற விசாரணை நடத்தப்படுவதால் ஏற்படக்கூடிய இன்னொரு பெருநன்மை யாதெனில், நீதிபெற முன்வந்த வழக்காளிகளும் எதிரிகளும் நடக்கும் எல்லா விஷயங்களையும் அறிந்துகொள்ளக்கூடியவராவர். இது மிகவும் அவசியமான விஷயமன்றோ. இப்பிரேரணையை இலங்கை அரசாங்கசபைப் பிரதிநிதிகள் எதிர்த்தது பெருந் துக்கமே. தன்னுணர்ச்சியைப்பெற இலங்கைவாசிகட்கு இன்னும் காலம் வரவில்லைப்போலும். போலி ஐரோப்பிய வாழ்க்கையின் கெடுதிகளை அறியும்வரையும் இவர்க்கு மீட்சியேது? உண்மையை உணர்வது இவர்களாற்கூடாதகாரியந்தான்.

## காலதாமதத்தின் தீமை

இப்போது இலங்கையிலுள்ள நீதிமன்றங்களில் விசாரணைக்குவரும் வழக்குகள் விசாரித்து முடிவுசெய்ய செலவாகும் காலம் சிறிதன்று. அவசியம் விசாரித்து முடிவு செய்யப்பட வேண்டிய சிலவழக்குகள் விளங்கப்படுமுன் வருடங்கள் சென்றுவிடுகின்றன. இதைத்தடுத்தற்கு வேண்டிய திருத்தங்களைச் சட்டப்பகுதித் தலைவர் அரசாங்கசபையில் கொண்டுவந்தது போற்றப்பட வேண்டியதே. நீதிமன்றத்தில் ஏற்ற வழக்குகள் ஒருவருடத்துக்குப் பின் விளங்கப்படுமாயின், அவ்வழக்கில் சாட்சியம் கூற முன் வந்தோர் சொல்வது எப்படி உண்மையாகும். வழக்கின் பெருமையும் விறுவிறுப்பும் குன்றிவிடுகின்றது. சாட்சிகளும் தாம் கண்ட-அறிந்தவற்றின் விபரங்களை மறந்து விடுகின்றனர். பின் எல்லாம் அலங்கோலநிலையை அடைய நீதியுங் கிடையாதாகின்றது. இவ்வித கிரமக் குறைவுகளை நீக்கும் பொருட்டே புதிய சட்டம் எழுந்ததாகும்.

இச்சட்டப்படி பாரதூரமான குற்றங்கள் செய்தோர் கீழ்க்கோட்டில் விளங்கப்பட்டபின், சட்டப்பகுதித் தலைவரின் அபிப்பிராயம் நாடிப் பெறுது உடனே உயர்தர நீதிமன்றத்துக்கு நீதிபதியால் அனுப்பப்படலாம். அப்படியாயின் கொலைக்குற்றவாளிகள் இரண்டொருமாதத்துள் விசாரணைசெய்யப்படுவர். விஷயம் இவ்வாறாக, சாட்சியங்கூறவருவோரும் தடுமாற்றமும்மறதியுமின்றித தமது கடமையை ஆற்றுவர். இவ்விதமாக இச்சட்டம் விரைவில் அனுட்டானத்துக்குவரின் பெரும் நன்மையேயாகும். மேலும் கீழ்க்கோடுகளில் நீதிபதிகளாக நியமிக்கப்படுவோர் உயர்ந்த அறிவு வாய்ந்தவரும் அனுபவம் படைத்த நியாயதுரந்தரராக இருந்தவருமாகையால், இவர்கள் உயர்தர நீதிமன்றத்துக்கு வழக்குகளை அனுப்பும் விஷயத்தில், அல்லது போதிய சாட்சியமும் ஆதாரமும் இன்றேல், வழக்குகளைத் தள்ளிவிடும் விஷயத்தில நடுநீதியாகவும் விவேகத்துடனும் நடப்பாரென்பதில் ஐயமின்று. ஆகையால், இச்சட்டம் தாமதமின்றி அனுட்டானத்துக்கு வருவதாக.

## யாழ்ப்பாணத் துறைமுகங்கள்

சென்ற 37 வருடமாக யாழ்ப்பாணத் துறைமுகங்கள் தென்னிந்திய துறைமுகங்களுடன் வியாபாரம், பிரயாணம் முதலியன செய்யாது மூடப்பட்டிருக்கின்றன. பிரதானமாக இந்தியாவிலிருந்து பிரயாணிகள் யாழ்ப்பாணம் வந்திறங்கக் கூடாது. மண்டபம் அல்லது தூத்துக்குடியிலுள்ள இலங்கை வைத்தியரின் அனுமதியின்றி எவரும் இலங்கைக்குள் புக இயலாதாகும்.

மறுபடியும் இத் துறைமுகங்களைப் பிரயாணிகளின் வசதிக்காகத் திறந்து வைக்கும்படி அரசாங்கசபையில் திரு. S. நடேசன் அவர்கள் ஓர் தீர்மானம் கொண்டுவந்தது யாவரும் அறிவர். இவ்விஷயம் இப்போது உள்நாட்டு மந்திரி சபையாரால் யோசிக்கப்பட்டது. திரு. நடேசனும் அப்போது சமுகமளித்துத் தமது அபிப்பிராயங்களைக் கூறியுள்ளாராம். இவ்விஷயமாக இன்னும் ஒரு முடிவும் கூறப்படவில்லை.

இப்போது வல்லுவெட்டித் துறையொழிந்த மற்றைய துறைமுகங்கள் இந்தியாவுடன் வியாபாரஞ் செய்யும் உரிமையை உடையன. வல்லுவெட்டித்துறையும் மற்றைய துறைமுகங்களைப்போல் சகலவசதிகளையும் பெற வேண்டுமென திரு. நடேசன் வாதித்தாராம்.

## ஸ்ரீ ராமகிருஷ்ண நூறுண்டு நிறைவு விழா

ஸ்ரீ ராமகிருஷ்ண நூறுண்டு நிறைவுவிழா நிகழும் ஜனவரிமீ 30, 31-ந் தேதிகளில், அரசாங்கசபைத் தலைவர் கௌரவ திரு. W. துரைசுவாமி அவர்களின் வரவேற்புடனும் அரிய சொற்பொழிவுடனும் உருவப் படத்திறப்பு, பாடசாலைகளின் திறப்பு விழா ஆதியவற்றுடனும் நடைபெறும். மாசிமீ 7உ விஞ்ஞானசாஸ்திர சாலைத் திறப்புவிழாவும் 14உ ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ச தேவரின் திருநட்சத்திரக் கொண்டாட்டமும், கல்லடியுப்போடை ஸ்ரீ ராமகிருஷ்ண ஆலயத் திறப்புவிழாவும் நடைபெறும்.

# ஐரோப்பிய அரசியல் நிலை

பிரிட்டன்.

ஐராப்பிய யுத்தம் ஆரம்பிக்குங்காலம் எட்டத்தில் இல்லையென்பதே அரசியல் வாதிகளின் அபிப்பிராயம். பிறிட்டிஷாரின் யுத்தாயத்தங்கள் மற்றைய நாட்டினருடன் சேர்த்து நோக்குமிடத்து குறைந்ததாகவே காணப்படுகின்றதென மெஸ். சேர்ச்சுஹில் துரை மனம் வருந்துகின்றூர்.

இப்போது மத்தித்தரைக் கடலில் பிறிட்றிஷார் தமது ஆகாயப் படையைப் பெலப்பிப்பதே நோக்கமாகவுள்ளார். இப்போது பிறிட்டிஷாரிடம் 87 படைகளே உள்ளன. ஒவ்வொரு ஆகாயப்படையிலும் 12 விமானங்கள் உள. அடுத்த பங்குனி மாதததுள் பிறிட்டிஷ் ஆகாயப்படை 100 ஆகவேண்டுமென மிக நெருக்கடியாக வேலை நடக்கிறது. இவ்விதமாகப் படையை அதிகரித்தும் ஜர்மனியரின் படையளவுதானும் 1937-ம் வருடத்தில் பெறவியலாது, 1938-ம் வருடத்திலாவது ஜெர்மனியரின் பெலத்தளவு பெறலாகுமோவென்பதும் சந்தேகம்.

சிங்கப்பூரில் பிறிட்டிஷார் செய்யும் யுத்த ஆயத்தம் ஓரளவுக்குப் பூர்த்தியடைந்து விட்டன. யுத்த காலங்களில் எப்படித் தமது ஆயத்தங்களை உபயோகிக்கலாமென்பதை சிங்கப்பூர் இராணுவப்பகுதியினர் பரிசோதித்துப் பார்க்க எண்ணுகின்றனர். இக்காலமுறைகள் யாவும் சிங்கப்பூர் கடற்படை ஸ்தானத்தில் வகுக்கப்பட்டிருக்கின்றன. இங்கே நடக்க விருக்கும் பரிசோதனைப்போது இந்தியா, ஐறுக், ஹொங்கொங் முதலிய இடங்களிலிருந்து ஆகாயப்படைகளும் கலந்து கொள்ளும்.

ஸ்பேயின்

இந்நாட்டில் ஏற்பட்ட கலகம் முடிந்தபாடில்லை. அரசினர்க்குச் சொந்தமான ஒரு கப்பல் கலகக் கட்சியினரின் சண்டைக்கப்பலால் பிடிக்கப்பட்டது.

ஸ்பெயின் தேசத்துக்குப் போர் வீரராகச் செல்வோர் தடுக்கப்பட வேண்டுமென்ற பிரேரணை முன்னர் பிறிட்டிஷாரால் கொண்டுவரப்பட்டது. அது இன்னும் மற்றைய வல்லரசினரின் அங்கீகாரத்தைப் பெறவில்லை. இப்போது ஸ்பெயின் தேசத்துக்குப் பணம் கடனுகக் கொடுக்கும் முறையும் தடுக்கப்படவேண்டுமென பிறிட்டிஷார் புதிய ஓர் பிரேரணையைக் கொண்டுவந்துள்ளார். அனுட்டானத்தில் ஒன்றுஞ் செய்யாது வாய்ப்பேச்சுடன் எல்லாவற்றையும முடிவு செய்வது சிறிதும் ஒவ்வாத காரியமாகும்.

இப்போது போர்வீரர் ஸ்பெயினுக்குப் போகும் விஷயத்தைக் குறித்து இத்தாலியரும் ஜெர்மனியரும் பதில் அனுப்பியுள்ளார். யுத்தத்திற் சேர ஸ்பெயினுக்குச் செல்வோர் தடுக்கப்படவேண்டுமென்பதை மேற்படி இருதேசமும் அங்கீகரித்து விட்டன. எனவே தாமதமின்றி இவ்விஷயம் அனுட்டானத்துக்கு வரலாமே. வல்லரசினர் நாடுகளிலிருந்து எவராவது ஸ்பெயின் செல்ல இடங்கொடுக்கப்படார் என்ற சட்டம் விரைவில் வரவேண்டாமா? ஆனல் போதிய வீரர்கள் ஜெர்மனி, இத்தாலி ஆகிய இடங்களினின்று ஸ்பெயினுக்கு சென்ற சில மாதங்களாகச் சென்றுள்ளாரே. அவர்களை அழைப்பது யாராலும் இயலுமா?

இத்தாலியர் பிறிட்டிஷாருக்கு விடுத்த பதிலில் இப்போது ஸ்பெயினில் நின்று யுத்தஞ் செய்யும் புறநாட்டவர் திருப்பி அழைக்கப்பட வேண்டுமெனவும் காட்டப்பட்டிருக்கிறது.

* * *

ஜெர்மனியின் ஆகாயப்படை மந்திரியாகும் தளபதி கேயறிங் என்பவர் இத்தாலி சென்று, முஸோலினியுடன் சம்பாஷித்துவிட்டு ஊர் திரும்பியுள்ளார். ஸ்பெயின் விஷயத்தில் எவ்வித பதில் கூறுவதென்பதே இவர் யோசித்த விஷயங்களிலொன்றுகும். சமீபத்தில் மத்தித்தரைக்கடல் விஷயமாக பிறிட்டிஷார் இத்தாலியருடன். செய்த உடன்படிக்கை ஜெர்மனிய இத்தாலிய நட்பிற்குப் பங்கம் விளைத்ததா என்பதை நேரில் ஆராய்தற் பொருட்டுமாகவே தளபதி கேயறிங் இத்தாலி சென்றதாகச் சொல்லப்படுகிறது. ஆனல் இவ்விரு நாட்டின் தொடர்புக்கும்மாறுக ஏதாவது நடக்கவில்லையெனக் கண்டு இவர் திருப்தியடைந்தனராம்.

## எருமையால் தாக்குண்ட புகைரதம்

### 9 மணிநேரத் தாமதம்

சென்றவெள்ளிக்கிழமை(29-1-37 அதிகாலை 7 மணிக்கு யாழ்ப்பாணம் வந்து சேரவேண்டிய புகைரதம், வவனியாவுக்கணித்தாக எருமை மாட்டில் மோதுண்டு தண்டவாளத்தை விட்டு விலகியதால்; பிற்பகல் 4½ மணியளவில் யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தது. வண்டி கீழே விழுந்தபொழுது பிரயாணிகள் பலர் அதிர்ச்சியால் தாக்கப்பட்டனராம். சிலர் காயமடைந்ததாக்வும் கூறப்படுகிறது. தபால் முதலியன நகரஎல்லைக்குள் கொடுக்கப்பட்டன. மற்றைய விடங்களுக்கு அடுத்தநாளே கொடுக்கப்பட்டனவாம்.

## மாணவரின் மத்தியானப் போசனம்

அரசினர் சென்றமாதம் தொடக்கம் சுயபாஷா வித்தியாசாலைகளிலுள்ள வறிய மாணவர்க்கு மத்தியானப் போசனம் அளித்து வந்தனர். இப்போது இப்போசனம் கொடுக்கும் விஷயத்தில் அநேக மாற்றங்கள் கல்வி மந்திரிசபையினர் செய்துள்ளாராம். அதன்படி பணக்கஷ்டம் மிகவுமுள்ள இடங்களில் வசிக்கும் ஏழை மாணவர்க்கே ஆகாரமளிக்கப்படும்.

இவ்விடங்களில் இப்போது 1077 வித்தியாசாலைகளிலேயே ஆகாரம் கொடுக்க வசதிகள் ஏற்பட்டுள்ளன. இனி 3000 வித்தியாசாலைகளில் ஆகாரம் கொடுக்க ஒழுங்குகள் செய்யப்படும்.

பணக்கஷ்டம் அதிகமில்லாத இடங்களில் இதுவரையும் மத்தியானப் சோசனத்துக்கு உதவிசெய்யப்பட்டுவந்த வித்தியாசாலைகட்கு இம்மாதத்துடன் (31-1-37) பணம் கொடுக்கப்படமாட்டாது.

50 பிள்ளைகட்குமேல் சராசரி வரவினையுடைய வித்தியாசாலைகட்கு மத்தியான ஆகாரத்துக்கு 4 சதம் வழங்கப்படும்.

நகரங்களிலுள்ள வித்தியாசாலைகட்கும் சராசரி ஐப்பது பிள்ளைகட்குக் குறைவாக வரவினையுடைய வித்தியாசாலைகட்கும் மத்தியான ஆகாரத்தின்பொருட்டு 5 சதம் கொடுக்கப்படும்.

சமையற்பாத்திரம் முதலியன வாங்குதற்கு ஐந்து ரூபாவும், சமையற்காரனுக்கு மாதவீதம் மூன்றரை ரூபாவும் அரசினரால் அளிக்கப்படும். புதிய திட்டம் அடுத்த மாதம் (1-2-37) தொடக்கம் அனுட்டானத்துக்கு வரும்.

யாவரிடத்து மெக்காலத்தும் மறவாமை வாய்க்குமா றிலதற்கொப் பொன்றுமில்லை.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பொலிஸ்காரனின் சேட்டை

## குடிவெறியால் துப்பாக்கிப் பிரயோகம்

வல்லுவெட்டித் துறையிலுள்ள பொலிசாரிருவர், சென்ற 25-ந்தேதி திங்கட்கிழமை காலை கீரிமலையிலிருந்து நெல்லியடிச் சந்தியை நோக்கி ஓட்டப்பட்டுவந்த ஓர் பஸ்வண்டியைப் பின்தொடர்ந்து வந்தனர். அவர்கள் மேற்படி சந்தியை அடைந்ததும் தாங்கள் வந்தகருமத்தை இழந்து குடிவெறிமயக்குடன் அவ்விடத்திலுள்ள ஓர் மலையாளியின் தேனீர்க்கடைக்குள் சாப்பிட்டுக்கொண்டிருந்தனர். அத்தருணம் ஏறக்குறைய 12 மணிவரையிலிருக்கும். கரவை விக்கினேஸ்வர வித்தியாசாலையில் கல்விகற்கும் பிலிப்பு என்னும் ஓர் மாணவனும் அத்தேதேனீர்க்கடையை அடைந்தனன். அப்பொழுது பொலிசாரின் மதிமயக்கத்தைக் கண்ணுற்ற மேற்படி மாணவன் அவர்களை நோக்கி, "கடமைக்கும், அரசாங்கப் பிரமாணத்துக்கும் மாறுக நடக்கலாமா" என வினவியதும், அவர்களில் ஒருவர் துப்பாக்கியை எடுத்து மாணவனுக்குச் சுட்டபோது மாணவன் விலக, பக்கத்தேயுள்ள சிவரின்மீது அச்சூடுவிழுந்தது. அதன் காரணமாக மாணவன் கோபாவேசங்கொண்டு கரவெட்டி தபாற்கந்தோரை அடைந்து யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்திற்கு விண்ணப்பித்தான். உடனே உதவிப்பொலிஸ் சுப்பிறின்டென்டன் திரு. டி. ஏ. ஒபயசேகரா சம்பவம் நடைபெற்ற இடத்துக்குவந்து நடைபெற்ற காரியங்களை ஆராய்ந்து குறித்த பொலிஸாரை வல்லுவெட்டிததுறையிலுள்ள பொலிஸ் நிலையத்திற்கு விசாரணை செய்வதற்காகக் கொண்டுசென்றனர்.

—நிருபர்

## கடிதம்

### மல்லாகம் கோடு

'ஈழகேசரி'ப் பத்திராதிபர் அவர்கட்கு:

ஐயா!

இக்கடிதம் பொதுசனங்களின் வசதியீனங்களை நீக்குவதற்கு ஏதுவாயிருக்குமாதலின் தயைகூர்ந்து இதைத் தங்கள் பத்திரிகையில் தவறுது பிரசுரஞ் செய்யுமாறு வேண்டுகிறேன்.

காருண்ணியம் நிறைந்த ஆங்கில அரசினரால் ஊர்கள்தோறும் நீதிஸ்தலங்கள் ஏற்படுத்தப்பட்டமை சனங்களின் வசதியின் பொருட்டேயன்றி, ஒரு சிலரின் வருவாய்க்கும் வசதிக்குமனறு. வலிகாமம் வடக்கிலுள்ள மல்லாகம் கோட்டு நீதிபரிபாலனத்தின்கீழ் உட்பட்ட இடம் மிகவும் விசாலமானது. பொதுவாகக் கூறுமிடத்து, வலிகாமம்மேற்கு, வலிகாமம் வடக்கு, வலிகாமம் கிழக்கு ஆகிய முப்பிரிவுகளிலுமுள்ள இடங்களில சில கிராமங்கள் தவிர, மிகுதி முழுவதும் இக்கோட்டு நீதிபரிபாலனததுக்குட்பட்டனவாகும்.

சிலவருடங்களின்முன் அரசினர் மல்லாகம் கோட்டை மூடியிருந்தனர். அக்காலத்தில் சனங்கள் அனுபவித்த கஷ்டங்களைக்கண்ணுற்றுத் திரும்பவும் மல்லாகம் கோட்டைத் திறந்து நடப்பித்து வருகிருர்கள். காலந்தோறும் மல்லாகம் கோட்டில் வழக்குகள் அதிகரிப்பதினுலும், அவை காரணமாக வழக்குகள் பலமுறையும் தவணைபோடப்படுவதினுல் சனங்கள் பலவித வசதியீனங்களுக்குள் ஆகின்றனர் என்பதையும் அறிந்த அரசினர், சென்ற மார்கழி மாசந் தொடக்கம மல்லாகம் கோட்டுக்குப் பிரத்தியேகமான ஒரு நீதிபதியை நியமித்து, அவர் ஒரு கிழமையில் நான்கு நாட்களுக்கு விசாரணை நடத்துமாறு ஏற்பாடு செய்தனர். இவை யாவும் சனங்களின் வசதிக்காகச் செய்தனவேயாகும.

இப்போது புதிதாக நியமனம் பெற்ற நீதிபதி கோட்டுவளவிலுள்ள வங்களாவில் குடியிருந்து கொண்டு, காலமே 9 மணிதொடக்கம் இரவு 7 அல்லது 8 மணிவரையிலும் விசாரணை நடத்துகிருர். அதன்பின் முடியாத் வழக்குகளுக்குத தவணை கொடுக்கிருர். சிலசமையங்களில் ஞாயிற்றுக்கிழமைகளிலும விளக்கம் நடத்துகிருர். இதனுல் பொதுசனங்கள் அனுபவிக்கும் கஷ்டங்களுக்கோர் அளவில்லை. இப்பிரிவிலுள்ள சனங்கள் பொதுவாக யாவரும கமக்காரர். இக்கோட்டுக்கு நீதியை நாடிவரும் சனங்களில் நூற்றுக்குத் தொண்ணூறு வீதமும் வறிய சனங்களாகவே யிருப்பாகள். கோட்டுக்கு வருபவர்கள எல்லோரும் வண்டி, கார் முதலியவற்றில் வருபவர்கள் அல்ல. மல்லாகத்தில் சனங்கள் தங்கிப்போவதற்கும சாப்பிடுவதற்கும் போதிய வசதிகள் இல்லை. இப்படிக் காலமே 9 மணிதொடக்கம் இரவு 7 அல்லது 8 மணிவரையும் சனஙகள் கோட்டுவீட்டில் காத்து நிற்பதால், தங்களுடைய கம முயறசியைச் செவ்வனே செய்ய இயலாதவர்களாக விருக்கிருர்கள். சிலர் சாப்பாட்டு வசதியீனத்தின் நிமித்தம் உபவாசம் இருக்கவேண்டியவர்களாக இருக்கிருர்கள. வயது சென்ற ஆண் பெண் இருபாலாரும் பருவமடைநத பெண்களும் இராக்காலங்களில் ஏழு அலலது எட்டு மைலுக்கப்பாலுளள தங்கள் இல்லங்கட்குக் கால்நடையாக நடந்து செலல, கள்வர், காடையர் முதலியவாகளுக்கு அஞ்சுகின்றனர். சில சமையங்களில் வயது சென்ற பெண்களும் குமர்ப்பிள்ளைகளும் கோட்டு விருந்தையில் எஞ்சிய இரவைக் கழித்து, விடியற்காலையில் செல்கின்றூர்கள் என்றும் கூறப்படுகிறது. இப்படியான வசதியீனங்களை அனுபவிப்பதிலும் பார்க்கக் கோட்டுக்குச் செல்லாது விடுவதே சிறந்ததென்பது மற்றொரு சாரார் கருத்தாயிருக்கிறது.

இவைதவிர, மல்லாகம் கோட்டில் இன்னும் பல ஒழுங்குகள் செய்யப்படுத லவசியம். இவற்றை விசாரணைசெய்து தக்க நடபடிக்கைகளைக் கையாளவேண்டியதும் மிக அவசியமாகும்

பொது சனங்களுககு ஏற்படும் வசதியீனங்களைப் போக்குவது தேசத் தலைவர்களினதும் காருண்ணியம் நிறைந்த ஆங்கில அசினரதும் கடமையாகையால், இதைக்குறித்து வேண்டியன செய்வார்கள் என எதிர்பார்க்கின்றேம்.

போதுசன அபிமானி

மல்லாகம் 29–1–37.

## றவுக்கைக்குள் அபின்

### 2,520 ரூபா குற்றம்

மட்டக்களப்பிலுள்ள புளியடிக்குடாவில் வசிக்கும், நாகமணி சம்புநாதன், ஸ்ரீமதி எலன் வீரசிங்கா, மேதர் பொன்னம்பலம், மேரி புரோலெண்டி லில்லி, ஏ. எம். சின்னத்தம்பி ஆகிய ஐயர் மீது சட்டவிரோதமாக அபின வைத்திருந்ததாக, மட்டக்களப்பு நீதிபதி திரு. P. வைத்தியலிங்கம் அவர்கள் முன்பாகக் குற்றஞ் சாட்டப்பட்டது.

இவ்வெதிரிகள் கைது செய்யப்படும்போது மூன்றுவது எதிரி வைத்திருந்த அபின் பொட்டணத்தை வீச, இரண்டாவது எதிரி அப்பொட்டணத்தை எடுத்து றவுக்கைக்குள் வைத்துக்கொண்டதாகவும், உடனே பரிசோதகர் பாய்ந்து அபினைப் பறித்துக் கொண்டதாகவும் விசாரணையில் கூறப்பட்டது. முடிவில் நான்காம் எதிரி விடுதலைபாக்கப்பட்டு மற்ற எதிரிகளுக்கு மொத்தம் 2,520 ரூபா அபராதம் அல்லது கடூழியச் சிறை எனத் தீர்ப்பளிக்கப்பட்டதாம்.

## புதிய மன்னரின் நாணயங்கள்

புதிய அரசரின் உருவத்தையுடைய நாணயங்கள் எப்போது இலங்கையில் பாவிப்பில் வருமென்றது சிலர் கேள்வியாகும்? அடுத்த மேமாதம் வரும் முடிதரிப்புக்கு முன் ஒரு தொகை நாணயங்கள் உபயோகத்துக்குக் கொண்டுவரவேண்டுமென்ற நோக்கத்துடன் வேண்டிய ஆயத்தங்கள் செய்யப்படுகின்றன.

இந்தியாவிலும் முடிதரிப்புக்கு முன் சில நாணயங்கள் உபயோகத்துக்கு வருமாம்.

## புதிய அரசரின் விருப்பம்

இங்கிலாந்தின் தற்போதைய அரசராகும் ஆருவது ஜோர்ஜ் ஓர் விஷயமாக முதன்மந்திரிக்கு அறிவித்துள்ளார்.

அதாவது, தாம் இங்கிலாந்தை விட்டு வேறு இடத்துக்கு யாத்திரை செய்யுங்கால், அல்லது நோய்வாய்ப்பட்டு அரசியலை நடத்தவியலாது இருக்கும்போது, அல்லது தாம் உயிர்துறக்க நேரின் தமக்குப் பின் அரசியலை நடத்தும் உரிமை பெற்ற ஒருவரை நியமிக்கவேண்டுமென்பது அவசியமாகும். ஆருவது ஜோர்ஜ் அரசர்க்குப் பின் அரசியற்பாரம் அவரது சிரேஷ்ட புத்திரியாகும் எலிஜபெத் இளவரசிக்கே செல்லும். ஆனுல் அவ்விளவரசியே அரசர் இங்கிலாந்தில் இல்லாக்காலத்தில் அரசியலை நடத்தும் உரிமைவாய்ந்தவர். ஆனுல் அவ்வம்மையார் இப்போது 11 வயதுடையர். 21 வயது வந்த பின்னரே தாமாக விஷயங்களை நடத்தும் உரிமையைப் பெறுவர். ஆகையால், இவ்வித சந்தர்ப்பங்கள் ஏற்படுங்கால், அரசியலைநடத்துதற்கு ஒரு சபை (Regency) ஏற்படுத்தவேண்டுமெனக் கேட்டுள்ளார். அதற்கு மந்திரிசபையினர் உடன்பட்டுள்ளார். இவ்விஷயமாக ஓர் திட்டம் தேசாளுமன்றத்தில் உள்நாட்டு மந்திரியாராகும் சேர். ஜோன் சைமனுல் கொண்டுவரப்படும்.

## கிளிநொச்சி வைத்தியசாலை

இற்றைக்குச் சிலவருடங்கட்குமுன் பொருளாதார நிலை சீர்குன்றியதன் பயனுகப் பணக்கஷ்ட மேற்பட்டபோது அரசினர் உத்தியோகஸ்தர்கள் தொகையையும், அநேக செலவுகளையும் குறைத்தனர். அப்போது பரந்தன் கமக்காரருக்கு மிக உதவியாகவிருந்த கிளிநொச்சி வைத்தியசாலையில் நோயாளர்க்கு இடங்கொடுத்துச் சிகிச்சைசெய்யும் முறையைக் கைவிட்டனர்.

ஆனுல் பரந்தன் கமக்காரர் செய்த கிளர்ச்சியினுல் சென்ற வருடம் இவ்வைத்தியசாலையை அரசினர் மறுபடியும் திறக்க ஒருப்பட்டனர். சென்றவாரம் கூடிய அரசாங்கசபையில் இவ்வைத்தியசாலை மறுபடியும் திறத்தற்பொருட்டு 6100 ரூபா மேலதிகமாக விடப்பட்டிருக்கிறது. எனவே இவ்வைத்தியசாலை விரைவில் பழையபடி நோயாளர்க்குத் திறந்து வைக்கப்படும்.

## மன்னுர்ப்பிரிவின் இடப் பெயர்களும் அவற்றின் சத்தோற்பத்திகளும்

(முற்றொடர்)

72. சோனக நெடுங்குளம்: சோனக+நெடும்+குளம். சோனகருடைய நெடிய குளம். இது கிழக்கு நானுட்டானிலுள்ள ஓர் சிற்றூரின் பெயர்.

73. சோனகப் பிட்டி: சோனக+பிட்டி. சோனகருடைய பிட்டிநிலம். இது பெருங்களிப்பற்றிலுள்ள ஓர் சிற்றூரின் பெயர்.

74- சுண்டிக்குழி: சுண்டி+குழி சுண்டி=உணரும் தன்மையுடைய பூண்டுவகை. குழி=பதிந்தநிலம், இவ்வகைப் பூண்டுகளுள்ள பதிந்த நிலமே சுண்டிக்குழி என்பதன் அர்த்தம் இது முருங்கனுக் கணித்தாயுள்ள ஒரு கிராமத்தின் பெயர்.

75. சின்னக்குஞ்சிக்குளம்: சின்ன+குஞ்சி+குளம். குஞ்சி என்பவளுடைய சிறிய குளம். இது அனுராசபுரப் பிரிவிலிருந்து மன்னுர்ப் பிரிவிற்கு மாற்றிவிடப்பட்ட கிராமங்களி லொன்று. தற்போது கிழக்கு நானுட்டானுக்குச் சேர்க்சப்பட்டுள்ளது.

76. சின்னப்புதுக்குளம்: சின்ன+புது+குளம். சிறிய புதிய குளம். இது கிழக்கு நானுட்டானிலுள்ள ஓர் சிற்றூரின் பெயர்.

77. இளையான்குளம். இளையான்ள+கும்.
   (i) இளையான் என்னும் பெயரையுடையவனுடைய குளம்.
   (ii) இளையவன்=வயதிற்குறைந்தவனுடைய குளம்.

78. எருக்கிலம்பிட்டி: எருக்கிலை+பிட்டி எருக்கிலைச்செடி வளர்ந்துள்ள பிட்டி. இது மன்னுர் தீவிலுள்ள சுகாதார பரிபாலனப் பகுதியாரின் மேற்பார்வையிலுள்ள இடங்களிலொன்று.

79 எருவிட்டான்: எரு+இட்டான். எரு இடப்பட்ட இடம். இது மேற்கு நானுட்டானிலுள்ள ஓா சிற்றூரின் பெயர்.

80 இடையன் குளம்: இடையன்+குளம். இடையனுடைய குளம் இது வங்காலைக்கணித்தாயுள்ள ஓர் சிற்றூரின் பெயர்.

77. இலைக்கறிக்குளம்: இலை+கறி+குளம். கறிக்காகிய இலைகளுள்ள குளம். இது தெற்கு முசலியிலுள்ள ஓர் சிற்றூரின் பெயர்.

82. இலந்தைக்குளம்: இலந்தை+குளம். இலந்தை மரங்களுள்ள குளம். இப் பெயரை யுடைய மூன்று சிற்றூர், ஒன்று முசலிவடக்கிலும், மற்றிரண்டும் முறையே நானுட்டான் மேற்கிலும் கிழக்கிலும் இருக்கின்றன

83. இலந்தைவான்: இலந்தை+வான் "வான்" என்பது இப்பகுதியில் குளம் நிறைந்து மிகுதித் தண்ணீர் வெளியே செல்லும் இடத்திற்கே பாவிக்கப்படுகின்றது. இலந்தைவான்=இலந்தை மாத்தடியில் வான் பாச்சலையுடைய குளம். இது வடக்கு மாந்தையிலுள்ளஓர் சிற்றூரின் பெயர்.

(தொடரும்)

## குருபூசை விழா அன்னதானமும் சைவப் பிரசங்கமும்

யாழ்ப்பாணம் துன்னலை வடக்கு திருநீலகண்டத்தொண்டர் மடாலயத்தில் நிகழுந் தாதுவருடம் தை மாதம் 22-ம் திகதி வியாழக்கிழமை ஷை மடாலயத்தின் நான்காம் ஆண்டு நிறைவு விழாவாகலின் அன்று சித்திர நடராஜமூர்த்திக்கு விசேஷ ஆராதனைகளும், மாகேசுர பூசையும், இரவு தொண்டர் புராண படனமும், அடுத்த நாளாகிய வெள்ளிக்கிழமை பகல் அன்னதானமும், அடுத்தநாளாகிய 24-ம் திகதி சனிக்கிழமை (6-2-37) மாலை 6 மணி தொடக்கம் சைவப்பிரசங்கமும் நடைபெறும். பிரசாரகர்களும் பிரசங்க விபரமும் விளம்பரத்தில் வெளிவரும்.

—கடித.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிறந்த ஊரும் சிங்காரத் தேரும்

நீர்வளம், நிலவளம், பலவளம், முதலிய வளங்களாலும், தீங்கனிச் சோலைகளாலும் நானாவித விலங்கிட்டங்களாலுமேயன்றிப் பொன்னும், நன்மணியும், முத்தும், ஆதியாந் திரவியங்களாலும் இதன் மங்காச்சிறப்பை நோக்கிப் பிரமித்திருக்கும் பிற ஜாதியாராலும் நான்கு வேதங்களாலும் பரிசுத்த நாடெனக் கொண்டாடப்பட்டு வரும் இவ்விலங்கைத் தீவின்கண் இலங்கிவிளங்கும் சிறந்த நகர்களில் நீர்கொழும்பு நகரும் ஒன்றெனலாம். இந்நகரிற்குச் சிறிது வடக்கில் வீரசூரசேவகனும், யேசுநாதரின், சேனைத்தலைவனுமாகிய ஆராதிஷ்ட செபஸ்தியாரின் நாமத்தால் ஓர் கோயில் நிறுவப்பட்டிருக்கின்றது. இக்கோயில் கொண்டெழுந்தருளியிருக்கும் உத்தமரின் திருவிழா வருடாவருடம் தைமாதம் 20-ந் திகதிக்குப் பின்வரும் ஞாயிற்றுக்கிழமை கடற்கரைத்தெருக் கத்தோலிக்கரின் ஆதிக்கத்தில் வெகு குதூகலமாகக் கொண்டாடப்பட்டு வருகிறது. இவ்வருடமும் இத்திருநாளை முன்னிட்டு ஒன்பது நோவனைகளும் கடைசித் தினம் வேஸ்ப்பர் என்னும் மாலை ஆராதனையும் பாடப்பட்டது. இதில் எட்டாம் நோவனையானது கட்டுவலைத் தொழில் செய்யும் கடற்கரைத் தெருவாசிகளால் சொல்லருஞ் சிறப்புடன் செய்யப்பட்டது. 24-ந் திகதி ஞாயிற்றுக்கிழமை திருநாள் தினமாகையால் அதிகாலையில் பீரங்கிகள் குபீர் குபீர் என முழங்க கோயில் சிகரங்களில் கட்டப்பட்டிருந்த சிங்காரக் கொடிகள் சிறப்புடன் பறக்க, வாருங்கள் வாருங்கள் என்று வருந்தி அழைத்தாற்போல் இனிய ஓசையுடன் கோயில் மணி ஒலிக்க டொன் சந்தியாகு என்பவரின் தலைமையில் பாண்டுவாத்தியக்கோஷ்டியினர் இனியகீதங்களைப்பாட காலை 8—30 மணியளவில் வண. மைக்கல் சுவாமியாரால் திவ்விய பூசை நடைபெற்றது. அவ்வமயம் வண. பிறஞ்சீஸ் சுவாமியார் ஆராதிஷ்ட செபஸ்தியாரைப் பற்றி ஓர் இனிய பிரசங்கஞ் செய்தார். இதில் இவ்வுத்தமர் கிறீஸ்துவையும் அவரினது போதனையையும் பின்பற்றி நடந்ததினால் தியோக், கிளேசியானென்னும் அரசனினால், வதையுண்டு இறந்து வேதசாட்சி முடிபெற்றதுவும், அக்காலத்திலிருந்த மறமன்னர்கள், மிருகபலத்தினாலும், அவசரசட்டங்களினாலும், கிறீஸ்தவர்களை அதட்டி அடக்கி ஆண்டமையால், அம்மன்னர்கள் தேவமுனிவுக்கு உள்ளாகி மாண்டதையும் பற்றித் தெளிவாக எடுத்துக் கூறினார். திவ்விய பூசை நேரத்தில் 600 பெயருக்கதிகமானோர் தேவ விருந்தருந்தினர். பின்மாலை 4 மணியளவில் வீரசூரதேவசேவகனான செபஸ்தியாரினதும் மோட்சராக்கினியாகிய கன்னிமரியாளினதும் மோட்சபிரதானியாகிய மிக்கேல் தூதனினதுவும் திருத்தேர்கள் கோயில் தளத்தைவிட்டு வெடி கொடி மத்தாள வரிசையுடனும் பாண்டு வாத்தியத் தொனியுடனும் மங்கள வாழ்த்தொலியுடனும் ஊர்வலஞ் சென்றன. இத்தேர்கள் செல்லும் தெருக்கள் இருமருங்கும் பார்ப்போரது கண்களைக் கவருமாறு அழகு செய்யப்பட்டிருந்தது. மாலை 6-30 ஆனதும் இரவோ பகலோ என்று அறியக் கூடாத விதமாக அலங்கார வெளிச்சங்கள் சூழ நீர்கொழும்பு சென். மேரிஸ் தேவாலயத்திற்கு முன் வரவேற்கப்பட்டு டொன்யுவாம் என்பவரால் ஓர் மன்றுட்டமும் கேட்கப்பட்டது. பின்னர் இத்தேர்கள் கன்னார்த் தெரு வழியாய் பவனிவந்தது. அச்சமயம் அத்தெருவிலுள்ளோர் யாவரும் கரங்குவித்துச் சிரங்குனிந்து ஆராதிஷ்ட செபஸ்தியாரின் உதவியை வேண்டி நின்றார்கள். இதன் பின் 8-மணியளவில் திருத்தேர்கள் கோயிலைச் சேர்ந்து திருச்சுரூப ஆசீர்வாதமும் சற்பிரசாத ஆசீர்வாதமும் நடத்தப்பட்டது. இக்கொண்டாட்டத்தில் கலந்து கொண்டவர்கள் 10 ஆயிரம் பேருக்கு அதிகமானோர் எனக் கணிக்கப்படுகின்றது. —கடித

## கலம்பகம்

இலங்கையில் செயலற்ற குழந்தைகளுக்கான சகாயச்சங்க மொன்றை ஸ்தாபிப் பதற்கேற்ற முயற்சிகள் செய்யப்படுகின்றனவாம்.

o o

டொக்கியோ நகரின் வடமேற்கு வெளிப்பகுதியிலுள்ள ஓர் இராணுவவெடி மருந்துச் சாலையில் ஏற்பட்ட வெடிவிபத்தின் காரணமாக 5 பேர் இறந்தனர் 3பேர் காயமடைந்தனராம்.

o o o

மாட்ரிட்நகரில் கலகக்காரர் பீரங்கிகொண்டு நகரை வெகுநேரம் வரை தகர்த்ததின் காரணமாக ஓர் பகுதியில் தீப்பற்றிக் கொண்டது. இறந்தவர்களின் தொகை கணக்கிடப்படவில்லையாம்.

o o o

களனியைச் சேர்ந்த யோலின்டிருடயஸ் என்னும் ஓர் பெண்ணின் மீது சென்ற ஆகஸ்டு மாதம் 4ந் திகதி விமலிஸ் சில்வா டி. எம். இசயேலா ரொட்றிக்கோ என்பவர்களுக்கு நஞ்சூட்டச் செய்ததாகத் தொடரப் பட்டவழக்கில் எதிரி விடுதலையாக்கப்பட்டார்.

o o o

அனுராதபுரத்தைச் சேர்ந்த பஹலகாமிலவா என்னும் ஊரிலுள்ள ஓர் தொழிலாளன் இன்னோர் தொழிலாளனை சென்ற எப்பிரல் மாதம் 27ந் திகதி கொலை செய்ததாகத் தொடரப்பட்ட வழக்கில் கண்டிச் சுப்பிறீம் கோட்டில் 7 வருடக் கடுங் காவற்றண்டனை விதிக்சப்பட்டான்.

o o

காலுகங்கையைச் சேர்ந்த உடுவரை என்னும் கிராமத்தில் ஓர் எஸ்டேட்டிலுள்ள சூதாடுபவரின் மடத்தைப் பரிசோதனைசெய்வதற்குச் சென்ற இரு தலைமைக்காரர்கள் கத்தியால் தாக்கப்பட்டதாகவும் அதன் காரணமாக ஒருவர் இறந்ததாகவும் மற்றவர் அபாயகரமான நிலைமையில் ஆஸ்பத்திரியிலிருப்பதாகவும் கூறப்படுகிறது.

o o

நோர்வே தேசத்திலுள்ள இராச வமிசத்தைச் சேர்ந்த டக்றர் ஹாரால்டு ஸ்கட்ஸ் என்பவர் 290 பாஷைகள் பேசக் கற்றிருக்கிறாராம். 14,000 பகுதி புத்தகங்களடங்கிய ஓர் புத்தக நிலையம் வைத்திருக்கிறாராம். அந்நிலையத்தில் எட்டுப் பிரதி நூல்களும், 290 பாஷைகளுக்கும் வேண்டிய அகராதிகளும் இருக்கின்றனவாம்.

o o o

மிலான் நகரத்தைச் சேர்ந்த புரொபசர் மான்சின் என்பவர் ஒருவித ஒளியை உண்டாக்கக் கூடிய நூதன யந்திரமொன்றைக் கண்டுபிடித்திருக்கிறார். அந்த ஒளி எவர் மீது பட்டாலும் அவர் கண்ணுக்குத் தெரியாது மறைந்து விடுவாராம்.

o o

உலகில் முதன் முதலாக அவி சக்கரத்தைக் கண்டுபிடித்தவர் ஜோர்ஜ் ஸ்ஜூஸர் என்பவரே: இவர் கண்டுபிடித்த அவி சக்கரம் 60 மைல் தூரத்தை 4 மணி 40 நிமிஷத்தில் ஓடியிருக்கிறதாம்.

o o o

2831 லட்சம் ரூபா பெறுமதியான தங்கம் இவ் வருடத்தில் ஏற்றுமதி செய்யப்பட்டிருக்கிறதாம்.

o o

இங்கிலாந்தில் வருடமொன்றுக்கு 15 கோடி பவுண் விளம்பரஞ் செய்வதற்கு மாத்திரம் செலவு செய்யப்படுகின்றதாம்.

o o o

பிறிட்டிஷ் பெண்கள் தங்களை அழகு படுத்துவதற்காக வருடமொன்றுக்கு 6 கோடி பவுண் செலவு செய்கிறார்களாம்.

ஜெர்மன் சர்வகலாசாலையைச் சேர்ந்த ஓர் ஆசிரியர்குழாதினர் இலங்கையில் ஆயுள்வேதவைத்தியம் கற்றுக்கொள்ளும் பொருட்டு கூடிய சீக்கிரம் விஜயஞ் செய்வார்களாம்.

o o o

அமெரிக்காவில் வெள்ளப் பிரவாகத்தினால் 5 லட்சம் சனங்கள் வரை வீடுகளின்றிக் கஷ்டப்படுகின்றார்களாம்.

o o o

மட்டக்களப்பில் வெள்ளப் பெருக்குக் காரணமாக உயிர்ச் சேதமும், போக்கு வரத்து வசதியீனமும் ஏற்பட்டிருக்கின்றனவாம்.

o o

அமெரிக்காவிலுள்ள நிச்சுவே என்ற ஊரில் 100 வயதுள்ள ஒருவருக்கும் 36 வயதான அவர் மனைவிக்கும் இரட்டைக் குழந்தைகள் பிறந்திருக்கின்றனவாம். இங்கிலாந்திலும் 101 வயதான ஒருவருக்கும் ஓர் குழந்தை பிறந்திருக்கிறதாம்.

o o o

வீயன்னாவில் 5000க்கு மேற்பட்ட பெண்கள்வரையில் முத்த மிடுவதைத் தடுப்பதற்காக ஓர்சங்கத்தை நிறுவியுள்ளார்களாம்.

o o

டோக்கியோவில் 72 வயதுடைய ஓர் வர்த்தகர் இருக்கிறார். அவருக்கு 5அடி 6 அங்குல நீளமான தாடியிருக்கிறதாம். அவர் நடக்கும்போது தாடி மயிர் காலைச் சுற்றித் தடக்கி வீழ்த்தாமல் பாதுகாத்தற்காக ஓர் சிறு பை வைத்திருக்கிறாராம்.

o o o

சென்ற 15-ந் திகதி இரவு சண்டிருப்பாய் சங்கானையைச் சேர்ந்த சில கள்வர் கூட்டமாகச் சேர்ந்து பல இடங்களிற் திருடியும் சில இடங்களிற் துரத்தப்பட்டும் தப்பியோடியுமிருப்பதாகக் கூறப்படுகிறது.

o o o

முசோலினியிடம் அன்பு கொண்ட அகமது பென் அமார் என்னும் ஓர் அராபியர் இத்தாலிய சர்வாதிகாரியாகும் முசோலினிக்கு ஓர் யானையை நன்கொடையாக வழங்கியுள்ளாராம்.

o o o

நாசி கிந்தா என்னு மிடத்திலுள்ள கல்லூரிமாணவிகளை; அவர்கள் வழமையாகப் பொருட்கள் வாங்குகின்ற ஒரு கடைக்காரனும் புகைப் படம்பிடிக்கு மொருவனும் நிர்வாணமாய் நிற்குமாறு பலவந்தப் படுத்தினார்களாம்.

o o

ஸ்ரீமதி ருக்மணிதேவி சென்ற 15ந் திகதி தொடக்கம்; சென்னை அடையாற்றிலுள்ள சர்வதேசத் தலைச் சங்கத்தின் ஆதரவில் ஓர் பாத நாட்டிய வகுப்பு நடத்தி வருகிறாராம்.

o o o

தவமணிதேவி கதிரேசு என்னும் பெண்மணி சினிமாப்படத்தில் நடிப்பதற்காகச் சேலத்திற்குச் சென்ற யூலை மாதம் 4-ந்வ புறப்பட்டனர். அவர் "சதிஅஹல்யா" என்றழைக்கப்படும் புராண சம்பந்தமான சினிமாப் படத்தில் பிரதானமான நடிகையாக நடித்திருக்கிறாராம்.

o o o

79 வயதுடைய கௌன்ட் காஸ்டன் லியோன் என்பவர் வறுமையின் காரணமாகச் சென்றவாரம் இறந்துவிட்டார். இவர் உலகத்தில் பிரசித்திபெற்று விளங்கிய நெப்போலியனது பேரனும்.

o o o

பட்னாவுக்கருகிலுள்ள கிழக்கிந்திய புகைரதப்பாதையில் புகைரதம் வேகமாய் ஓட்டப்பட்டு வரும்போது 65 ஆடுகள் வரை அதில் அகப்பட்டு மாண்டனவாம்.

o o o

சென்ற 26-ந் திகதி கூடிய கல்வி நிர்வாக சபையில் பாடசாலைச் சிறுவர்களின் மத்தியான இலவசபோசன சம்பந்தமான திட்டத்தை மாற்றியமைப்பதாக முடிவுசெய்யப்பட்டிருக்கிறதாம்.

o o o

கிங்ஸ் வீதியைச் சேர்ந்த மொய்தீன் பீபி என்ற ஹோவம்மா என்னும் பெண்ணின் மீது 100 கிறெயின் நிறைக்கு மேற்பட்ட அபினைக் கள்ளமாக வைத்திருந்ததாக சென்றவருடம் மே மாதம் தொடரப்பட்ட வழக்கில் எதிரிக்கு 500 ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

## பார்ஸிய இளைஞனின் அலைவு

ஒரு வர்த்தகருக்கு உதவியாக ஜப்பானில் ஊழியம் செய்ய ஒருவர் தேவையென்றும், 2000 ரூபா பிணை கட்டவேண்டுமென்றும் ஒரு பத்திரிகையில் விளம்பரம் செய்யப்பட்டிருந்தது. பம்பாயைச்சேர்ந்த பார்ஸி இளைஞன் ஒருவன் அதைக் கண்ணுற்று அந்த வேலைக்குப்போக ஆசை கொண்டான். அவ்விதம் விளம்பரம் செய்தவர் துவாரதாஸ் என்பவரே. அவர் பிணைப்பணத்தை வாங்கிக்கொண்டு மாதம் 200 ரூபா சம்பளத்தில் அவ்வாலிபனை நியமித்தார். ஜப்பானுக்குச் செல்ல இரண்டாம்வகுப்புக் கட்டணமும் அளிக்கப்பட்டது. இளைஞன் ஜப்பான் சென்று அங்கே அவ்வித வேலையொன்று மில்லாதிருக்கக் கண்டு ஏமாந்தான். உடனே அவ்விளைஞன் தன் உறவினர்க்குத் தந்தியடித்து உதவிபெற்றுத் திரும்பி இந்தியா வந்து சேர்ந்தான். துவாரதாஸ்மீது வழக்குத் தொடரப்பட்டிருக்கிறது.

## அன்னங்கைப் பரஞ்சோதி வித்தியாசாலைப் பெற்றோர்தினக்கொண்டாட்டம்

ஷை கொண்டாட்டம் 25-1-37 திங்கட்கிழமை பிற்பகல் 7–மணியளவில் வடபெரும்பாக வித்தியாதரிசி திரு. மு. தம்பிப்பிள்ளை அவர்களின் தலைமையின்கீழ் ஆரம்பமாயிற்று. அத்தருணம் பாடசாலை உபமானேஜர் திரு. சி. கார்த்திகேசபிள்ளை அவர்கள் தலைவர்க்குப் பூமாலை இட்டு உபசரித்தனர். பின்பு தலைவர் அவர்கள், ஆசிரியர், மாணவர், பெற்றோர் ஆதியோர்க்கு மிகவும் பயன்படக் கூடிய சில குறிப்புரைகள் கூறினர். பின்னர் மாணவிகள் சங்கீதமும் உபந்நியாசமும் நடந்தேறின. இடையே பண்டித வ. சு. இராஜஐயனர் அவர்கள், பெற்றோர்கடன், என்னும் பொருள்பற்றிச் சபை மகிழுமாறு சொற்பொழிவாற்றினர். பின் தலைவர் அவர்களாற் பரிசளித்தல் நடத்தப்பட்டது. இவ்வளவில், அச்சுவேலி அ. மி. பாடசாலைத் தலைமை ஆசிரியர் திரு. கணபதிப்பிள்ளை அவர்கள் சிறந்த குறிப்புரை பகர்ந்தனர். பின் தலைவர்க்கும் சபையோர்க்கும் நன்றி கூறப்பட்டது. இறுதியாகப் பாடசாலை மாணாக்கர்களாற் "பிரபோத ராசகுமாரன்" சரிதை நடித்துக் காட்டப்பட்டது. சபையில் யாழ்ப்பாணத்தின் பல பகுதியினரும் குழுமியிருந்தனர். கொண்டாட்டம் இரவு 12 மணியளவில் மங்களகரமாக நிறைவேறியது.


## அறிவித்தல்

1893-ம் ஆண்டின் 8-ம் இலக்கக் கட்டளைச் சட்டத்தின்படி லைசென்ஸ் பெற்று அடைவு பிடிக்கும் அவாப்பத்தனை விண்டுலா பொ. சின்னத்தம்பி என்பவரிடம் 1932-ம் ஆண்டு தொடக்கம் 1935-ம் ஆண்டு ஆனி மாதம் 16-ந் திகதி வரைக்கும் அடைவு வைக்கப்பட்டு இப்போது தவணை தப்பி மேற்படி சட்டத்தின் பன்னிரண்டாம் பிரிவின்படி பிரசித்த ஏலத்தில் விற்கப்படும் நகைகளின் விபரத்திற்கு மேற்கண்ட விலாசத்திற்கு எழுதி கேட்லாக் பெற்றுக் கொள்ளவும்.

விற்பனவு: —1937-ம் வருஷம் பிப்ரவரி மாதம் 15-ந் திகதி திங்கட்கிழமை தொடக்கம் எடுபட்ட நகை புறநீங்கலாக மிகுதி நகை அவரப்பத்தனைகடை விண்டுலா பொ. சின்னத்தம்பி கடையில் பகல் 2-மணி தொடக்கம் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

H. P. Wickramasinghi
*Auctioneer, Talawakele*
(252) 24-1-37.—2.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந்துக்களும் : : : : இந்துமதமும்

திரு. W. S. சார்லிஸ் பேர்ணண்டோ
நீர்கொழும்பு

(முற்றொடர்)

**ச**மயப் பற்றுள்ளவர்கள் குழந்தைகள் கூறும் சமய லட்சியங்களேயும் நம்புவதியல்பு. எனவே சமயத்தின் பேரால் சுயநலப்புலிகள் சொல்லிய புரட்டுருட்டுகளே ஆண்டிமுதல் அரசனீறுக நம்பிவிட்டார்கள். இதில்தான் ஐயா புனிதமாகிய இந்துமதத்தில் மாசு படியத் தொடங்கியது. பின்பு சமத்துவம் என்று பாந்து செழித்தோங்கிவந்த இந்துமதமும் அதின் குளிர் நிழலாகிய அன்பும் அடியோடு அழிபட்டன. பின்னர் சமத்துவம் மாழவும் அனபு மறையவும் ஒரே தனி வகுப்பாயிருந்த மனிதர் ஒருவர்க்கொருவர் பிணக்குற்று உயர்ந்தோர் தாழ்ந்தோர் என்று கூறிப் பல பிரிவினராய் ஒற்றுமை இழந்து வேற்றுமைப்பட்டனர். ஐயோ! சமத்துவ வாழ்வு மாண்டதும், உயர்ந்தோர் நலங்கருதியே தாழ்ந்தோர் நலமிழந்து வாழவேண்டுமென்று வற்புறுத்தப்பட்டனர். ஆகவே துஷ்டர்களுடைய மோச வார்த்தைகளேயெல்லாம் தேவ வார்த்தைகளென நம்பிச் சிலர் தங்கள் செயலிழந்தனர், உடலிழந்தனர், உளமிழந்தனர், உயிர் இழந்தனர். இலட்சிய மணத்தையும் அர்ப்பணஞ் செய்துவிட்டனர். உயர்ந்தோர்களுக்கென்றே தாழ்ந்தோர் உயிரை இழநது தாழ்ந்து தததளிக்கின்றனர். இதுதான் ஐயா இந்துசமயம் இன்றிருக்கும் நிலே.

பழம் பெருமைவாய்ந்ததும் அன்பே அடிப்படையாகக் கொண்டதுமான இந்துமதததைத் தழுவியவர்களே, மனிதனுடைய சமூக வாழ்வென்னும் பாதையில் துஷ்டர்களின் கொடுமை என்னும் குதிரை, எவ்வளவு வேகமாக ஓடுகின்றதென்று பாருங்கள். இநதுமதம் மலிந்த எங்நாட்டையேனுமஎடுததுக்கொள்வோம். அங்கு எததனே கட்சி, எத்தனேவகுப்பு, எத்தனே பிரிவு, எத்தனே வழக்கம். இவைகளே எணணிச சொலல முடியுமா? இவைகளேயெல்லாம் நினேந்து நினேந்து எண்ணிறந்த பெரியோர்கள் தங்களினது உயிரைத்தானும் தியாகஞ் செயயச் சித்தமா யிருக்கிறார்கள். ஐயோ! பாவமே ,உயர்ந்தோரைத் தாழ்ந்தோர் தீணடுவது தீட்டாம். பார்ப்பது பாதகமாம். என்ன ஐயா இப்படியும் எந்த மததிலாவது சொலலப்பட்டிருக்குமா? நேயர்களே ஆண்டவன் அனபுவடிவானவர். பாரபடசமறறவர். அவரை நாடி நிற்கும் சமயங்கள் யாவும் புனிதமானவை. என்ருலும், பாதகர் சொல்லியும் செய்தும் வரும் அட்டூழியங்களுக்கெல்லாம் புனிதமான இநதுமததத்தில் இடமிருக்கின்றதென்று பிதற்றிக் கடவுள உடையவும் சமயநூல் உடையவும் பெருஙமகரும் புனிதத்தன்மைகரும் ஆபாசத்தை உண்டுபண்ணுவது எவ்விதத்தில் தீரக்கூடிய தோஷமென்று என்ருல் சொல்ல முடியவிலலே. மிருகத்தினுங் கேடாகத தன்னேயொதத மனிதனே நடத்துவதற்கு எந்தச் சமயந்தானேயா இடங்கொடுக்கும். நாய், சோழி, பன்றி முதலிய ஆபாசமான மிருகங்களேத் தொடடுக கொள்ள இடஙகொடுத்த இந்துமதம் மக்களேச் சரிசமானமாய் நடத்துவதறகு இடங்கொடுக்கவில்லேயே என்று சொன்ருல் யார் ஐயா இதை நம்புவது?

பொய்யரும் புழுகரும் தன்னலப்பெயர்களும் சொல்லிவரும் பொய்மொழிகளால் இந்துமதத்திற்குச் சீர்கேடும் தீண்டாமைபோன்ற அட்டூழியங்களும் மலிந்துவருவதிருல் லட்சக்கணக்கான இந்துசமயத்தினர் அந்நிய மதங்களில் சேர்ந்துகொள்ளுகிருர்கள். ஏறக்குறைய நூறு வருடங்களுக்குள் சுமார் முக்கால்கோடி இந்துக்கள் கிறீஸ்துமதத்தில் சேர்ந்துவிட்டார்கள் என்று தெரிகின்றது. என்ன தங்களினது முன்ேனோர்களால் போற்றிப் புகழ்ந்து கொண்டாடப்பட்டுவந்த இந்துமதத்தை விட்டு ஏனேய மதங்களுக்குச் செல்வதும் செல்லப்போவதற்கும் காரணமின்னதென்று மிகத் தெளிவாகவும் அழகாகவும் அடுத்த வாரப் பத்திரிகையில் எழுதப்படும்.

## அனுபவ ஆப்தவாக்கியங்கள்

(G. T.)

### பரோபகாரம்.

"பரோபகாரம்" என்பதற்கு இக்காலத்தவர் கூறும் கருத்துக்கும் முற்காலத்தவர் கைக்கொண்ட கருத்துக்கும் அதிக வித்தியாசங்கள் உள. முற்காலத்தவர் கைக்கொண்டபடி பரோபகாரமென்ருல் வறியோர்க்கு உபகாரஞ் செய்தலாகும். இக்காலத்தவர் அதற்குக் கொள்ளும் கருத்துயாது? வறுமை ஏற்படுதற்குக் காரணமாவன வற்றைத் தடுத்தலே பரோபகாரமாகும். முற்காலத்தவர் இதை ஓர் பெருங்குணமாக மதித்தனர். இக்காலத்தவர் இதை ஓர் விவேக செயலாகவும் பெருங்குணமாகவும் மதிக்கின்றனர். முற்காலத்தவர் நோய் ஏற்பட்டவுடன் வைத்தியஞ் செய்து அதை நிவிர்த்தி செய்வர். இக்காலத்தவரோ நோய் ஏற்படாதிருக்கும் சுகாதார வாழ்வைக் கையாள்வர். முற்காலத்தவர் வறியோர்க்கு உணவளிப்பர். இக்காலத்தவர் வறுமை ஏற்படாதிருக்க வழிதேடுவர்.

*  *  *

### வன்கண்மை.

எதைச் செய்தால் மற்றையோர் இன்புறுவார்கள். எதைச் செய்தால் மற்றையோர்கள் வருத்தமடைவர் என்பதை நுணுகி அறியவியலாதிருப்பதே வன்கண்மையாகும். வஞ்சகம், பாராமுகம் என்பன காரணமாக இவை ஏற்படுவனவன்று. இன்பத்தை உண்டாக்கும், அல்லாது துன்பத்தை வருவிக்கும் சில சிறு விஷயங்களே நுண்ணியதாய் அறியாதிருப்பதே வன்கண்மையென்பாம்.

### கடவுளின் இன்னருள்.

சகித்தற்கு அரிய பெரிய துன்பங்களே நாம் அனுபவித்தபின் கடவுள் நமக்கு அளிக்குஞ் சுகங்களே உபயோகியா திருப்பது எவ்வளவு எம்முடைய மடமையாகும். இவ்விஷயமாகக் கடவுள் சிற்சிலபோது அறிவுறுத்தி உணரச் செய்கின்ருர். பெரிய தீமைகளும் கலக்கங்களும் வந்தக்கால் மனஅமைதியுடன் அவைகளேத் தாங்கிக்கொள்ளல் அறிவுடைமையின் இலக்கணமாகும். பின் சுகம் கிடைத்தபோது அதனே மனத்திருப்தியுடன் அனுபவித்தலும் அறிவுடையாரின் இலக்கணமாகும். இவைகள் யாவும் திருவருள் கடாட்சமாக நடப்பன.

*  *  *

### வாழ்க்கை.

மனிதனின் வாழ்க்கையை நோக்கி அவனே உண்மையாக அறிவது கூடிய தொன்றன்று. நமது வாழ்க்கை உள்ளே முத்தினேயுடைய சிப்பிக்குச் சமமாகும். சிலர் குணங்களே நோக்கின், அவர்கள் வெளித்தோற்றத்தில் தீயாராகக் காணப்படுகின்றனர். தன்னயத்தை விரும்பி நிற்போர் சிலர் பெருநன்மைகள் தமக்குக் கிடைத்தற்கும் தடையாகின்றனர். ஒருவனே நன்கு ஆராய்ந்து ஊன்றி நோக்கினன்றி அவனின் உள்ளக்கிடக்கை விளங்காது. வெளித்தோற்றத்திலிருந்து நாம் ஒன்றையும் முடிவுசெய்ய முடியாது. எவ்வளவு பாவங்களேச் செய்தவனுயினும் ஒருவன் சிலகாலங்களில் சில நன்மைகளேச் செய்து மற்றையோரின் புகழ்ச்சியைப் பெறுகின்ருன். சிலரது பெருமையை உள்ளபடியறிதற்கு நாம் மிக ஆழ்ந்து நோக்க வேண்டும்.

*  *

இக்காலத்தவர்க்குத் தெரியாத விஷயங்கள் ஒன்றுமில்லே. ஆனல் ஒன்றைப்பற்றியாவது பூரண அறிவுங் கிடையாது.

*  *  *

தாம் கண்டு பேசுவோர்க்கு, உண்மையறிவையும் வழியையும் அறியும் விருப்பத்தை உண்டாக்கும் சக்திவாய்ந்தோர், உலகில் எப்போதும் அனுகூலத்தையே அடைகின்றனர்.


## சாலாமிசிரி லேகியம்

இந்த லேகியததை நான் அனேக பிரபுக்களுக்குச் செய்துகொடுத்துப் பல வியாதிகளேக் குணப்படுத்தியதால் அவர்கள் மனமகிழ்ந்து வெகுமதிகளேயும் கொடுத்திருக்கிருர்கள். ஆனல் பிரபுக்கள் மாத்திரமல்ல ஏழைகளும் இதஞல் உண்டாகும் சுகத்தை அடையும்படி பொதுநலத்தைக் கருதியே இப்போது இதைப்பற்றி விளம்பரப்படுத்தினேம்

இது சலாமிசிரி, குங்குமப்பூ, சிலாஜித், கஸ்தூரி, குமாஸ்தாக, பீதானுசாலாமுஸ்லி, சப்தேமுத்ஸ்லி, பிஸ்தாஸ், சாரப்பருப்பு, பாதம்பருப்பு. சாத்தாவாளி, நீர்முள்ளி விதை, நாகம்பூ, வங்கபஸ்பம், அப்ரக்பஸ்பம், பவள பஸ்பம் வெள்ளி பஸ்பம், அயக்காந்த செந்தூரம். சாம்பிராணி பதங்கம் இன்னும் அநேக புஷ்டியான மூலிகைகள் சேர்த்துச் செய்யப்பெற்றிருக்கின்றது.

இதஞல் நீரிழிவு, நீர்க்கடுப்பு, நீரடைப்பு, மூலச்சூடு, ஒரு வருஷத்துள் உண்டாயிருக்கும் பக்கவாய்வு, இருமல், சாசம், பித்தகாமாலே, பித்தபாண்டு, பீனிசம், கைகால் காந்தல் வலி, இடுப்புவலி, பக்கவாய்வு இன்னும் அநேக கடுமையானவியாதிகள் தீரும். ஸ்திரீகள் இந்த லேகியத்தைச் சாப்பிட்டுவந்தால் மேற்சொல்லிய வியாதிகள் சுகமடைவதுடன் சூதகவாய்வு, பிரசவ அறையில் உண்டாகும் நோய்கள் தீர்ந்து தேக புஷ்டியும் பலமும் பெறுவார்கள்.

இதன்விலே ராத்தல் ஒன்றுக்கு ரூபா 20. அரை ராத்தல் ரூபா 10. கால் ராத்தல் ரூபா 5. தபாற்செலவு வேறு.

சிங்கப்பூர், பினங்கு முதலிய தொடுவாய் ராச்சியப்பகுதிக்கு வி. பி. சட்டம் இல்லாததினல் முன் மனியாடர் அனுப்புதல் வேண்டும்.

க. ஆறுமுகம்பிள்ளே,
சிவஞான ஆரோக்கிய சுகாதார வைத்தியசாலே
இலக்கம் 33. பழைய வாடி ரோட்டு,
கோட்டைமுனே, மட்டக்களப்பு.

31-1-37-4.


### பெற்ருராசிரிய சமாசம்

நிகழும் தாது வருடம் தை மாதம் 8-ந் திகதி வியாழக்கிழமை மாலே ஏழு மணி வரையில் உடுவில் தெற்குச் சைவ வித்தியாசாலேயில் ஓர் பெற்ருராசிரியசமாசம் உடுவில் வாசரும், சங்கீத கதாப்பிரசங்க விற்பன்னருமாகிய பிரம்ம ஸ்ரீ குரு ஐ. முத்துச்சாமிக்குருக்களவர்களேத் தலேவராகக் கொண்டு நிகழ்வதாயிற்று. அவ்வமையம், பாடசாலே மனேஜாவர்களும், தென்பகுதியில் சிறந்த வழக்கறிஞராயுள்ள திருவாளர் "ரிமொதிசில்வா" (Timothy-Silva) அவர்களும், மேற்படி கிராமத்தில் உள்ள பல ஆடவர், மகளிரும், அயற்கிராமங்களிலுள்ள பல பெரியார்களும், பாடசாலேச் சிறுவர்களும், பெற்ருேருமாகப் பலர் சமுகமாயிருந்தனர். தேவாரபாராயணத்துடன் சமாசம் ஆரம்பமானது. முதலாவதாகப் பாடசாலேத் தலேமை ஆசிரியர் திருவாளர் க. கார்த்திகேசு அவர்கள் பாடசாலேயில் மாணவர்க்கு மத்தியான உணவு அளிக்கப்படுவதாகவும், அதற்கு அரசாட்சியார் உதவும் பணம் சிறுத்தொகையாயிருப்பதால் தரும சீலர்கள் பலர் இயன்ற பொருளுதவி செய்ய முன்வரவேண்டுமென்பதாகவும், ஓர் இனிய முகவுரை கூறினர். அதன் பின்பு, பாடசாலே மனேஜாவர்கள் "பாடசாலே போன்ற பொதுத் தாபனங்கள் ஒருவரால் மாத்திரம் பாதுகாக்க முடியாதென்றும், கிராமத்திலுள்ளார் பலரும் ஒருமித்துக் கருமங்களேயாற்ற வேண்டுமெனவும், மாணவரின் மத்தியான உணவிற்குத் தாம் கூடிய உதவி புரிவதாகவும், பிறரும் அவ்விதமே தம்மாலியன்ற உதவி செய்ய வேண்டுமென்றும், இன்னுரை புகன்றனர். அதன்மேல், தென்பகுதியிலிருந்து குறித்த சில கருமார்த்தமாக யாழ்ப்பாணம் வந்துள்ள திருவாளர் ரிமொதிசில்வா (Timothy Silva) அவர்கள் தலேமை ஆசிரியரின் கேள்விக்கிணங்கி, பாடசாலே விருத்தியைக் குறித்தும், மாணவர் கல்வியைத் தளர்வின்றிக் கற்பதற்கு உடல் நலனும், வலியும் வேண்டுமென்றும், அவையுறுவதற்குச் சிவசத்துள்ள (Vitaminas) ஆகாரமுட்கொள்ள வேண்டுமென்றும், தாம் இவ்விதம் ஒரு தமிழ்ப் பாடசாலேயில் நடைபெறும் சமாசத்தில் பங்கு பற்றியது இன்றேயென்றும், தமிழ்ச்சாகியத்தார் தாம், பிறிதோர் சாராரென்ற கருத்தை முற்ருக மறந்து தம்மவரோடு ஐக்கியமுறின் ஈழநாடு மிகச் செதியில், அரசியல், கல்வி முதலியவற்றில் முன்னேற்ற முறுமென்றும் தமது கல்வியறிவின் திறமைக் கேற்பப் பல உதாரணங்களுடன் சபையோர் வியக்குமாறு தெள்ளிதிற் கூறி முடித்தார். ஈற்றில் சமய வளர்ச்சியைப் பிரதான நோக்கமாகக் கொண்டு மாதந்தோறும் நடைபெறுவதாய ஓர் இனிய கதாப்பிரசங்கமும் பக்கவாத்திய சகிதமாக நடைபெறலாயிற்று. தலேவராயமர்ந்துள்ள குருமுத்துச்சாமிக் குருக்கள் அவர்களே "காரைக்காலம்மையாரது" பக்தி நிறைந்துள்ள சரித்திரத்தைக் கேட்போர் மகிழுமாறு இனிய சங்கீதத்துடன் கர்ணுமிர்தமாகும்படி பிரசங்கித்து முடித்தனர். அதன்மேல் பாடசாலே உதவி ஆசிரியர் பிரமஸ்ரீ தி. வைத்தீஸ்வர ஐயரவர்கள் தலேவரவர்கட்கும் பிரசாரகரவர்கட்கும், சபையோர்க்கும், நன்றி கூறி முடிந்ததும் தேவாரபாராயணத்துடன் சமாசம் நிறைவேறியது.

—கடித.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிரசித்த விற்பனவு.

கல்லடிட காத்திரமும் தேசபுஷ்டியுமுள்ள காளை (கேப்) மாடு ஒன்று 1937-ம் ஆண்டு மாசிமாதம் 7-ந் திகதி காலை பத்துமணிக்கு நீர்வேலிக் கிராமக் கோட்டு வளவில் விற்கப்படும்.

ச. இல்லைநாதன்
சங்கத்தலைவர்
26-1-37

(254) 31-1-37—1

## Notise of Sale
## விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் டிஸ்றிக் கோட்டு 9420-ம் இலக்க வழக்கில் 1937-ம் ஆண்டு தை மாதம் 21-ம் திகதியைக்கொண்ட கோட்டுக் கட்டளைப்படி கீழே விபரிக்கப்பட்டிருக்கும் ஆதனங்கள் 1937-ம் ஆண்டு மாசி மாதம் 25-ந் திகதி வியாழக்கிழமை பிற்பகல் 3-மணி தொடக்கம் அந்தந்தக்காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

விபரம்

வல்லுவெட்டித்துறை,
குட்டித்தம்பி-கந்தையா

வழக்காளி

பொலிகண்டி,
1. தாமோதரம்பிள்ளை-அப்பாப்பிள்ளை அல்லது இரத்தினசபாபதியும்
2. அப்பாப்பிள்ளை-தாமோதரம்பிள்ளையும்

எதிராளிகள்

### ஆதனங்கள்

1. பொலிகண்டிக் குறிச்சியிறை ஒழுங்குதெணி நிலப்பரப்பு $8\frac{3}{4}$ இதில் கிழக்குப்புறமாக $\frac{1}{6}$ பங்கும் மேற்குப்புறமாக $\frac{1}{6}$ பங்கும் நீக்கி மிகுதிக்கு ஆட்சிப்படி நிலப்பரப்பு $6\frac{3}{4}$. எல்லை: கிழக்கு வேலுப்பிள்ளை சின்னத்தம்பிக்குடைய ஆதனம். வடக்கு றோட்டு மேற்கு சிதம்பரநாதர் அம்பாப்பிள்ளைக்கும் மறுபேருக்குமுடைய ஆதனம், தெற்கு புதி ஒழுங்கை. இவ்வெல்லைக் குட்பட்ட நிலம் பனைகள் வடலிகள் தென்னைகள் வேம்புகள் கிணறு கொட்டில் வீடுகளடங்கலிற் சொரியலாய் $\frac{3}{4}$ பங்கும்.

2. மேற்படி இறை நறுவிலிட்டி. நிலப்பரப்பு 5. இதில் கிழக்குப்புறமாக $\frac{5}{8}$ பங்குக்கு நிலப்பரப்பு 3. குளி $2\frac{1}{4}$. எல்லை; கிழக்கு கணபதிப்பிள்ளை-தங்கமுத்துவுக்குடைய ஆசனம். வடக்கு கந்தையா சின்னத்துரைக்கும் மறுபேருக்குமுடைய ஆதனம். மேற்கு சிதம்பரப்பிள்ளைக்கும் மறுபேருக்குமுடைய ஆதனம். தெற்கு 1-ம் எதிராளிக்கும் மறுபேருக்குமுடைய ஆதனம். இவ்வெல்லைக் குட்பட்ட நிலம் தென்னைகள் கிணறு அடங்கலிற் சொரியலாய் $\frac{4}{18}$ பங்கும் கிழக்குப் புறமாக இருக்கும் வீட்டில் நடு அறையும்.

3. மேற்படி இறை நறுவிலியடி நிலப்பரப்பு $26\frac{1}{2}$. இதில் ஆட்சிப்படி $\frac{3}{8}$ பங்குக்குரிய நிலப்பரப்பு 9. குளி $16\frac{7}{8}$-ல பிரிவிடப்பட்ட 2-ம் நொம்பர்த் துண்டுக்கு நிலப்பரப்பு 1. குளி $5\frac{20}{32}$. எல்லை கிழக்கு சபாபதிப்பிள்ளை சுப்பிரமணியத்துக்கும் மறுபேருக்குமுடைய ஆதனம். வடக்கு ஆறுமுகம் பெண் கற்பகத்துக்குடைய ஆதனம். மேற்கு புதுக்கை யொழுங்கை. தெற்கு குமாரசாமி பெண் பாக்கியத்துக்குடைய ஆதனம் இவ்வெல்லைக் குட்பட்ட நிலம் பனைகள் வடலிகளடங்கலும்.

4. அல்வாய் மழவராய குறிச்சியிறை. அணின்சிற்காடு நிலப்பரப்பு $19\frac{3}{4}$. வீடு $\frac{1}{4}$. இதில் மேற்கரைவாசியில் 9-ம் 10-ம் நொம்பர்த் துண்டுகளுக்கு நிலப்பரப்பு 3. குளி $9\frac{3}{8}$. எல்லை; கிழக்கு வல்லிபுரத்துக்கும் மறுபேருக்குமுடைய ஆதனம். வடக்கு சீனியர் மயில்வாகனத்துக்கும் மறுபேருக்குமுடைய ஆதனம். மேற்கு ஒழுங்கை. தெற்கு ஒழுங்கையும் அப்பாப்பிள்ளை தாமோதரம்பிள்ளைக்கும் மறுபேருக்கு முடைய ஆதனமும். இவ்வெல்லைக்குட்பட்ட நிலம் பனைகள் வடலிகள் அடங்கலிற் சொரியலாய் அரைவாசி.

புலோலிகிழக்கு
24-1-1937.

S. C. Kanagasabi
கொம்மிஷனர்

(255) 31-1-37—1

## வேண்டுமென்றகூற்று

### விதிப்பொருட்டா?
### வினைதற்பொருட்டா?

ஈழகேசரிப் பத்திராதிபர் அவர்களுக்கு:-

வணக்கம். தாங்கள் வெளியிடும் செந்தமிழ்ப் பத்திரிகையிற் சென்ற இதழில் N. S. V. M. என்பாரொருவர் "பலமதத்தருங் குழுமிய பொதுக்கூட்டத்தில் ஒரு மதத்திற்குரிய அருட்பாவை ஓதலாமா" என்ற தலைப்பின்கீழ் ஒரு சில வரைந்துள்ளார். அவர் நியாயத்தைக் கேட்பதோடு நீதிவழி தப்பியின் றெழுதவுந் துணிந்தனர். அவைகளில் "பரித்தியாகஞ்செய்யவேண்டும்" "மன்னிப்புக் கேட்கவேண்டும்" எனக் கூறுதற்கு இவருக்காவது இவரை எழுதும்படி ஏற்படுத்திய கூட்டத்தாருக்காவது எட்டுணையும் அதிகாரமில்லையென்பதைப் பணிவுடன் கூறுவதோடு, அவை பொருத்தமுடையனவா என்பதையும் ஈண்டு ஆராய்வாம்.

"இந் நிலவுலகிற் பலநெறிகளுண்டென்பதூஉம் அந்நெறிக்குரிய அருட்பாக்களை ஓதுவாரென்பதூஉம் அன்பராற் காட்டப்பட்ட உண்மைகள். எனினும், அவர்கள் ஒன்றனைச் சிறிது கருத்தூன்றற்பாலர். அஃதென்னையெனின், சைவத் திருநெறிக்கண்ணுள்ள அருட்பாக்கள் சைவத்திற்குச் சிறப்பும்பொதுவுமாக அமைந்துள்ளனவாம்; பொதுவாக அமைந்தன புறச்சமயங்களின் கொள்கைகளைப் பொதுமைப்படுத்துவனவாம். அங்ஙன மமைந்த பாடல்களிலே தாயுமானவர் செய்தனவும் பலவுளவாம். அவைதம்முள்,

"அங்கிங் கெனாதபடி யெங்கும்பிர
காசமா யானந்த மூர்த்தியாகி அருளொடு
நிறைந்ததெது தன்னருள் வெளிக்குளே
அகிலாண்ட கோடியெல்லாம், தங்கும்
படிக்கிச்சை வைத்துயிர்க் குயிராய்த் தழைத்ததெது மன வாக்கினில் தட்டாமல் நின்றதெது சமயகோ டிகளெலாம் தந்தெய்வ மெந்தெய்வ மென், றெங்குந் தொடர்ந்தெதிர் வழக்கிடவு நின்றதெது எங்கணும் பெருவழக்காய் யாதினும் வல்லவொரு சித்தாகி யின்பமாய் என்றைக்கு முள்ள தெதுமேல், கங்குல்பக லறநின்ற எல்லையுள தெதுவது கருத்திற் கிசைந்த ததுவே கண்டன வெலாமோன உருவெளிய தாகவுங் கருதியஞ் சலிசெய்கு வாம்"

என்பது 'சமய சமரசப் பொதுநிலை' யை நன்கு தெருட்டுகின்றதை அன்பர் படித்துணர்வாராக. கிறித்துவ பற்று மிகுத்த பலர் இச்செய்யுளை எல்லாச் சமயத்தையும் புணர்க்கும் உபிராணியென்றுகொள்ளுகின்றனர். இதுபோலவே,

"வாழ்க வந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே"

என்பதூஉம் அமைந்துள்ளது. அதன்கண், எல்லாம் பொதுமையாக "அரன்" என்ற சொல் மாத்திரம் சிவனைக் குறிக்குமன்றே, என்று மலையற்க. ஏனெனில் அரன் என்பது பாவங்களை அரிந்து நீக்குபவன் என்று பொருள்படும்.

படவே, அஃது ஆண்டு அத்தொழிற்குரியார் யாவரையும் குறியா நிற்பினும் மக்களின் பாவமன்னிப்புக்கென்றே திருவவதாரஞ்செய்த கிறித்துநாதருக்கே சிறப்பாகவு மமைதலை அன்பர் நுனித்துணர்ந்து கொள்வாராக.

இனி, இக்காலத்தில் யாண்டும் சமய சமரசமே செறிந்து நிற்பவும் ஒரு சமயக் கருத்தைச் சிறப்புமுறையால் அறுதியிட்டுக் கூறுத பொதுநெறிச் செய்யுள்களைப் பொதுக்கூட்டங்களிலே ஓதலான் வரும் இழுக்கி யாது? செம்மை, கருமை, வெண்மை நிறங்களைக்கொண்ட பசுக்களிலே அவ்வந்நிறப் பால் தோன்றுதவாறுபோலவே, சமயங்களிலே உள்ள உண்மைக் கருத்துகளைக்கொண்டு அறிவை வளம்படுத்தலே அறிவுடையாரெவராலும் கடைப்பிடித்தற்பாலதாமென்க.

புறசமயத்தாரையல்லது அவர்தம் நெறிக் கடவுளரைப் பழித்தல் முகமாகவுள்ள செய்யுள்களைப் பொதுக்கூட்டங்களில் படித்தலே ஏதம் இழைப்பதல்லது சமய சமரசமும் உண்மைக்கருத்தும் பழிப்புமில்லாத செய்யுள்களைப் படித்தலால் ஏதம் எக்காலத்தும், எவ்வாற்றானும், எத்துணையானும் உளதாகாதென் றுணர்வாராக.

இனி, கடவுள் வழிபாடுஞற்றிச் செய்யுங் கருமங்கள் இனிது முடியுமென்ற நூற்றுணிபும் அனுபவத் துணிபும் கொண்டு யாமங்ஙனம்செய்ய நேர்ந்தது. அது சங்க வளர்ச்சிக்கும் பிறவற்றிற்கும் உறுதுணையாகுமென்பதை அன்பர் உணர்வாராக.

இத்துணையும் கூறியவைகளினாலே அன்பரவர்கள் "முறைதப்பியோதினர்" "பாரிய குற்றவாளி" "மன்னிப்புக் கேட்டல் வேண்டும்" என்று அருள் முகிழ்ந்து வரைந்தனவெல்லாம் வெற்றுரவார வெறும் போலியுரையாதல் கண்டுணர்வாராக.

இன்னும், அன்பரவர்கள் எம்மாற் செய்யப்பட்டது குற்றமுடையதோ? அன்றோ? என்பதை நடுநின்று சீர்தூக்கி யாராய்ந்து கூறுது, தமது முடிபும் மனமும் பொருந்திய வண்ணம் 'பரித்தியாகம் செய்தல் வேண்டும், மன்னிப்புக் கேட்டல் வேண்டும், என்று எழுதுதல் தாமே தமக்குச் சித்தாந்த பாத்தவம் என்பதைத் தழுவி அவர் தமக்கு இழுக்கைத் தேடுகின்றார்.' வேண்டும், என்ற சொன்முடிபு விதிப்பொருட்டா? விழைதற்பொருட்டா? என்பதைத் தெரியவில்லை. இன்னும், அன்பர் எதிர்கால உணர்வுடையார்போன்று இனிமேற்கஷ்டங்கள் பொதுக்கூட்டங்களிலேற்படும், என்றும் கூறுகின்றார். அவை வாராது காத்தற்கு உற்பாத உணர்வாகி நின்ற அன்பர்க்கு எமது நன்றியும் வணக்கமும் உரியவாக.

காரியதரிசி

வலி – கிழ. தமிழாசிரியர் சங்கம்.


## சரித்திர கதாவாசகம்

ஆசிரியர்: இ. தர்மலிங்கம் அவர்களால்
எழுதப்பட்டவை.

| | | |
|---|---|---|
| இரண்டாம் வகுப்பு | சதம் | 25 |
| மூன்றும் வகுப்பு | சதம் | 30 |
| நான்காம் வகுப்பு | சதம் | 40 |

வடஇலங்கைத் தமிழ்நூற் பதிப்பகம்
சுன்னுகம்


## Notice of Sale.
## விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் டிஸ்றிக் கோட்டு 6154-ம் இலக்க வழக்கில் 1937-ம் ஆண்டு தைமீ 26-ம் திகதியைக்கொண்ட கோட்டுக் கட்டளைப்படி கீழே விபரிக்கப் பட்டிருக்கும் ஆதனங்கள் 1937-ம் ஆண்டு மாசிமீ 27-ம் சனிக்கிழமை பிற்பகல் 3 மணிதொடக்கம் அந்தந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

விபரம்

இமையாணன்குறிச்சி:
1. மயில்வாகனம் மாணிக்கவாசகரும்
2. பெண் கனகாம்பிகையும்

வழக்காளிகள்

தனக்காறகுறிச்சி:
1. மயிலு குழந்தையும்
2. குழந்தை பொன்னையாவும்
3. வீரகத்தி செல்லப்பாவும்
4. பெண் பொன்னம்மாவும்.

எதிரிகள்

### ஆதனங்கள்

1. தனக்காறக்குறிச்சியிறை பிடாரந்தனை நிலப்பரப்பு $13\frac{5}{8}$. தோட்டம் $\frac{1}{2}$. பிடாரந்தனைக்குத் தெற்கு நிலப்பரப்பு 6 கூடிய நிலப்பரப்பு 20. குளி $5\frac{1}{4}$. எல்லை: கிழக்கு 1-ம் எதிராளிக்கும் மயிலர் பெரியதம்பிக்கும் மறுபேருக்குமுடைய ஆதனம். வடக்கும் தெற்கும் மயிலர் பெரியதம்பிக்கும் மறுபேருக்குமுடைய ஆதனம். மேற்கு 1-ம் 2-ம் எதிராளிக்கும் மறுபேருக்குமுரிய பின்னுற்காணும் 3-ம் ஆதனம். இவ்வெல்லைக்குட்பட்ட நிலத்தில் சொரியலாய் நிலப்பரப்பு 7. குளி $14\frac{3}{5}$ ம் பனைகள் வடலிகள் தென்னைகள் ஆகிய இவைகளில் இதற்குரிய பங்கும் நடுப்பெற உள்ள கிணற்றுக்குத் தெற்குப்புறமாக இருக்கும் வீடு நிந்தமாகவும்.

2. மேற்படி இறை பிடாரந்தனைதோட்டம் 2. ஷ்டி நிலப்பரப்பு $27\frac{3}{4}$ கூடிய நிலப்பரப்பு 30. குளி $7\frac{1}{2}$. எல்லை: கிழக்கு பெரியதம்பி பெண் தங்கமுத்துவுக்குடைய ஆதனம். வடக்கு வன்னித்தம்பி பெண் தெய்வானைப்பிள்ளைக்குடைய ஆதனம். மேற்கு கதிரன் வீரகத்திக்கும் மறுபேருக்குமுடைய ஆதனம். தெற்கு மயிலர் பெரியதம்பிக்குடைய ஆதனம். இவ்வெல்லைக்குட்பட்ட நிலம அடங்கலில் சொரியலாய் $\frac{841}{4380}$ பங்கும் இதற்கு வடக்குப் புறமாக மாசியப்புலம் என்னும் காணிக்குள்ளிருக்கும் கிணற்றில் இதற்குரிய பங்கும் வழிவாய்க்காலுரித்தும்.

3. ஷ்டி இறை பிடாரந்தனை நிலப்பரப்பு 43. ஷ்டி கலட்டி நிலப்பரப்பு $3\frac{1}{2}$ கூடிய நிலப்பரப்பு $46\frac{1}{2}$. இப்பிரிவுகளில் தெற்குப்புறமாக பரப்பு $18\frac{1}{4}$க்கு எல்லை; கிழக்கு 1-ம 2-ம எதிராளிகளுக்கும் மறுபேருக்குமுரிய மேற்சொல்லிய 1-ம் ஆதனம். வடக்கும் 1-ம் எதிராளிக்கும் பிள்ளைகளுக்கும் பங்காளருக்குமுரிய பின்சொல்லப்படும் 4-ம் ஆதனமும், மயிலர் பெரியதம்பிக்கும் மறுபேருக்குமுரிய வேறு ஆதனமும். மேற்கு 1-ம 2-ம எதிராளிகளுக்கும் மறுபேருக்குமுரிய ஆதனம். தெற்கு தற்காலம் வீரகத்தி சிதம்பரபிள்ளைக்குடைய ஆதனம. இவ்வெல்லைக் குட்பட்ட நிலம் பனைகள் கிணறு முழுவதும்.

4. மேற்குறித்த 3-ம் காணிப்பிரிவுகளில் நடுப்பெற நிலப்பரப்பு 12-ல வடக்குப்புறமாக $\frac{2}{3}$ பஙகு நிலப்பரப்பு 8. எல்லை கிழக்கு 1-ம 2-ம் எதிராளிகளுக்கும் மறுபேருக்குமுடைய ஆதனம். வடக்கு வயிரவி கைம்பெண் கந்தாத்தைக்கும், மறுபேருக்குமுடைய ஆதனம. மேறகு 1-ம 2-ம எதிராளிகளுக்கும் மறுபேருக்குமுடைய ஆதனம். தெற்கு 1-ம் 2-ம் எதிராளிகளுக்கும் மறுபேருக்குமுரிய மேற்சொல்லிய 3-ம் காணி. இந்த எல்லைக் குட்பட்ட நிலம் பனைகள் வடலிகள் தென்னைகள் அடங்கலில் சொரியலாக 1-ம் எதிராளிக்கு தேட்டமாயுரிய $\frac{1}{4}$ பங்கும் 2-ம் எதிராளிக்கு மாதாவால் முதுசமாயுரிய $\frac{1}{20}$ பங்கும் கூடிய $\frac{6}{20}$ பஙகும இக்காணிக்கு கிழக்கே முழுககாணிக்குட்பட இருககும கிணற்றிலும் வடக்குப்புறமாக ஆதியடியிறபாதி என்னும் காணிக்குள்ளிருக்கும கிணற்றிலும் இதற்குரிய பங்கும் வழிவாய்க்காலுரித்தும்.

புலோலிமேற்கு
24-1-1937

கு. வே. நாகலிங்கம்
கொம்மிஷனர்

(256) 31-1-37—1



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஸ்ரீமான் கு. கதிரவேற்பிள்ளை அவர்கள்

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

தம்மை யறிந்த நீதிவானிடம் சென்று, பிளீடர் (Pleader) ஆக உத்தியோகம் பார்ப்பதற்கு உத்தரவு பெற்றுக் கொண்டார். இவர் தருக்கம் நன்கு கற்றவராதலின், இப் புதிய பதவியில் சின்னாளிற்றானே பெரும் புகழ் பெற்று விளங்கினர். இதன் பினனர் வழக்கறிஞராக வர விரும்பி 1856-ம் ஆண்டு கொழும்புக்குப் புறப்பட்டார். கொழும்பில் அக்காலத்திற் புகழ் பெற்ற தொமஸ் றஸ்ற் (Thomas Rust) எனும் ஆங்கில அத்துவக்காத்தின கீழ் பயிற்சி பெற்று வந்தார். இவர் தம்மிடம் படித்த ஒவ்வொரு மாணவனிடமும் நூறு பவுண் வாங்குவது வழக்கம். இவர் ஏனைய மாணவரைப் படிப்பித்தலில் பட்ட கஷ்டத்தில் அரைவாசி தானும் பிள்ளையவர்களைப் படிப்பித்த பொழுது ஏற்படாமையால் அரைச் சம்பழமே போதுமென்று சொல்லி எஞ்சியதை வாங்க மறுத்துவிட்டார். பிள்ளையவர்களின் புத்தி நுட்பத்தையும், குன்றா முயற்சியையுங் கண்டின்புற்று ஏனைய மாணவர்கட்குப் பிள்ளையவர்களைப் பற்றிப் புகழ்ந் துரைத்தும் வந்தார். பிள்ளையவர்களைப் பரீக்ஷித்தவர்களும் பல படப் புகழ்ந்து பாராட்டி யிருக்கின்றார்கள். பரீக்ஷையிற் றேறிய செய்தி பிள்ளையவர்களின் உறவினர்க்கும், யாழ்ப்பாணத்தவர்க்கும் பெரு மகிழ்ச்சியை உண்டாக்கிறறு. பிளளையவர்கள் 1858-ம் ஆண்டு வைகாசி மீ 5-ந்வ வழக்கறிஞராகக் கடமை புரிதற்குரிய சத்தியத்தை நிறைவேற்றினர். நேர்மையாகவும் கவனமாகவும தாமெடுததுக்கொண்ட வழக்குகளைச் சிரததையோடு கற்று வெற்றிபெற்று வந்தார். தேசவழமையில இவர் மனந் தோய்ந்து கற்றுத் தெளிந்தவராக விளங்கியதால், அத்துறையில் அக்காலததில தனகொப்பாரு மிக்காரு மின்றித் திகழ்ந்தார். சுருஙகக் கூறுங்கால் தேசவழமையில் பிள்ளையவர்கள் ஒரு புலியென மதிக்கப்பட்டார். தமககு எதிராகப் பேசும் வழக்கறிஞர்கள மேசையிலடித்து வீண் ஆரவாரஞ் செய்து வெற்றி மொழிகளை உரத்துப் பிதற்றினும் கலஙகாது அமைதியுடன் வழக்கிற்கு இன்றியமையாது வேண்டபபடும குறிப்புக்களை மட்டும் கூறி உட்காாந்து விடுவார். தன் மீது கோபமுள்ளவர்களையும் இத்தகைய பொறுமையான வழியால் வென்று விடுவார். பிள்ளையவர்களிடத்து கோபம் நிலைநிற்க வியலாது கோபிததுக் கொண்டோடிவிட்டது. பொறுமை குடிகொண்டு ஆண்டுவந்தது. வழக்கறிஞராக 1858-1872 வரை கடமைபுரிந்தார். கி. பி. 1863 இல் அரசியற சபையில் தமிழருக்கென நியமிததவிடம் வெறுமையாயிருந்த பொழுது பிளளையவர்களே தகுந்தவர் களெனப் பத்திரிகைகள் தெரிந்தெடுததன. சனஙகளும் இவரையே நியமிககுமாறு முறையிட்டனர். இவருக்கே கட்டாயம் கிடைக்குமென முழு நம்பிக்கையோடு யாழ்ப்பாணதத வர் எதிர்பார்த்திருந்தனர். ஆயினும் உத்தம தேசாதிபதியவர்கள் இத்தகைய விருப்பததிற்கு மாறுகப் பறங்கியரொருவரைத் தெரிவு செய்தார்கள்.

(தொடரும்)

ஒத்துழைப்புச் சங்க
புதிய உபவிதிகள்
பிரதி விலை சதம் 4
தனலக்குமி புத்தகசாலை, சுன்னுகம்.

இலக்கணம்

## கற்பகச்சோலை!

(கொழும்பு திரு எம். ஆர். சேதுராமன் எழுதியது)

நறுமணம் கமழும் இனிய சோலையில் மெல்லிய தென்றல் வீசுகின்றது. செந்தேன் சொரியும் அச்செம்மலர்ச் சோலையில் வண்டுகள் பண்ணமைந்தவாறு இசைபாடுகின்றன. அழகிய மயில்கள் தோகையை விரித்து ஆடுகின்றன. பஞ்சவர்ணக் கிளிகள் கொஞ்சி விளையாடுகின்றன. இவ்வாறு இயற்கையில் வாழும் இன்னுயிர்களெல்லாம் இன்புற்று அமர்ந்த இனிய சோலையை நோக்கி ஓர் மங்கை மலர் கொய்ய வருகின்றுள். அம் மங்கையின் பொங்கு பேரழகையும் அங்க நலன்களையுங் கண்ட அன்பர்,

"கற்பகத்தின் பூங் கொம்போ
காமன் தன் பெரு வாழ்வோ
பொற்புடைய புண்ணியத்தின்
புண்ணியமோ புயல் சுமந்து
விற்குவளை பவள மலர்
மதிபூத்த விரைக் கொடியோ
அற்புதமோ சிவனருளோ
வறியே னென் றதிசயித்தார்"

இத்தகைய பஞ்சின் மெல்லடிப்பாவை பூஞ்சோலையிற் புகுந்து அங்கு நிறைந்து நின்ற இன்னொலியை நுகர்ந்து இன்புற்றுள். இனிமையும் அழகும் வாய்ந்த இயற்கையில் இலங்கும் இறைவனது வடிவைக் கண்டு வியந்தாள். மயிலாய் நின்றுடுவதும், குயிலாய் நின்று கூவுவதும், அஞ்சுகமாய் நின்று கொஞ்சுவதும், மலராய் நின்று மணங் கமழ்வதும் எங்கும் நிறைந்த இறைவனே என்னும் உண்மை அம் மங்கையின் உள்ளத்தில் உதித்தது. ஆதியு மந்தமு மில்லா அரும் பெருஞ் சோதியை அறிந்தாள். உள்ளுவாருள்ளத்தில் உலப்பிலாத் தேன் சொரியும், உயரிய செம் பொருளை உணர்ந்தாள். எழில் நலம் வாய்ந்த இறைவனை நினைந்து நினைந்து, தன் உள்ளத்தில் அப் பெருமானை ஓர் உயர் ஓவியமாய் எழுதி மகிழ்ந்தாள். அன்பினுல் நினையும் அடியாரது உள்ளத்தில் உதிக்கும் ஒளியாய இறைவன் அம்மங்கையின் மனக்கண்ணிற் தோன்றினன். அப் பெருமானது சடையும் பவள மேனியும் மங்கையின் மனதைக் கவர்ந்து விழுங்குவனவாயின. சோலை மலர்களிற் சுழன்ற வண்டுகள், துளித் தேனை மாந்தித்திளைக்குங்கால் அம்மங்கை இறைவனது ஆனந்தத் தேனை அறிந்து மகிழ்ந்தாள். அங்கு அமர்ந்த பறவைகள் தேமாங் கனியைத் தின்று திளைக்குங்கால், அம்மங்கை தெவிட்டாத் தீங்கனியாய் இறைவனை நுகர்ந்து இன்புற்றுள்.

இவ்வாறு இறைவனது வடிவத்தைத் தன்னுள்ளத்தில் அழகொழுக எழுதிப் பார்த்து இறுமாந்திருந்த மங்கையினருகே ஓர் சின்னஞ் சிறு கிளி பறந்தோடி வந்தது. பசுமை நிறம வாய்ந்த பைங்கிளி பறந் தோடி வரக் கண்ட பாவையினுள்ளம், அளவிறந்த ஆர்வத்தால் அப்பாவையின் மீது படர்ந்தது. அந் நிலையில் அம் மங்கை அச் சிறு கிளியைச் செம்மையாய் நோக்கி,

"சிறையாரு மடக்கிளியே
இங்கே வா, தேனெடு பால்
முறையாலே உணத் தருவேன்
மொய் பவளத் தொடு தரளம்
துறையாகும் கடற்றேணிபுரத்து
ஈசன் துளங்கு மிளம்
பிறையாளன் திரு நாமம்
எனக்கொருகால் பேசாயோ"

என்று அன்பினுல் வேண்டினுள். "செந்தளிர்ச்சோலையில் அமர்ந்த சிறு கிளியே! கண்ணுக்கினிய இக் கற்பகச்சோலையில் அமைந்த கனிகளை உண்டு களிக்கின்றுய்! உனது அருமை அறிந்த நான் தேனும் பாலும் கலந்து தருவேனே! அமுதினும் இனிய உன் அழகிய மொழிகளால் என் தலைவனது திருப்பெயரைச் செவிகுளிரப் பேசாயோ!" என்று இறவாத இன்ப அன்பால் எடுத்துரைக்கும் முறை மிக அழகியதாகும். அழகுறப் பறந்து அருகே வந்தமர்ந்த கிளியின் சிறகுகள், மங்கையின் கண்ணையும் கருத்தையும் முந்திக் கவர்ந்தமையால், அச் சிறு கிளியை "சிறையாருமடக்கிளியே" என்று சிறப்பிக்கின்றுள். தன்னோடு முன் பழகாத தன்மையால், அண்மையில் வர அஞ்சிச் சேய்மையில் வந்தமர்ந்த சிறு கிளியை நோக்கி, "குழலினும் யாழினும் இனிதாய் மழலைமொழி பேசும் இளங்கிளியே! அஞ்சாது என் அருகேவந்து நான் சொல்லும் மொழிகளைச் செவ்வையாய்க் கேட்டருள்வாய்" என்று அருமையாய் அழைக்கின்றுள். இன்மொழிபயிலும் இளங்கிளிக்கு இனிமை வாய்ந்த தேனும் பாலுமே ஏற்ற உணவாகும் என்று கருதி "தேனெடு பால் உணத்தருவேன்" என்று அன்போடு உரைக்கின்றுள். செழுஞ்சுவை பயக்கும் தேனையும் பாலையும் சேர்க்கும் முறையில் அளவுமிகுந்தாலும் குறைந்தாலும் சுவைபடாதாதலால் "தேனெடுபால் முறையாலே கலந்து அருந்தத்தருவேன்" என்று ஆர்வத்தோடு கூறுகின்றுள். இத்தகைய இன்னுணவருந்தும் கிள்ளையிடம் ஓர் கைம்மாறு வேண்டுகிறுள். "பவளம் போல் மேனியில் பால் வெண்ணீறும், படர்ந்த சடையில் பிறை மதியும் அமைந்து இலங்கும் ஈசனது பெயரை இனிய மொழிகளால் எனக்கொருகால் பேசாயோ" என்று இரந்து வேண்டுகிறுள். இவ்வாறு தன் மனதுக்கினிய தலைவனது பெயரைக் கிளி மொழியாற் கேட்டு மகிழக் கருதும் மங்கையின் அன்பு எல்லையற்ற தன்றே? தன் தலைவனது பெயரைப் பேசும் பெருமைபெற்ற நாவினுக்கு நறுஞ் சுவைநிறைந்த நல்லுணவு அளிக்கக் கருதும் நங்கையின் மனநலம் மிக்க மாண்புவாய்ந்ததன்றே? அம்மங்கைக்கு அமலன்பால் ஏற்பட்டுள்ள அளப்பரிய அன்பை, வாசகர்களே! மற்றுமோர்முறை வாசித்துப்பாருங்கள்!

## தெய்வாராதனை விளக்கம்

(சி. அகிலேஸ்வரசர்மா, மண்டைதீவு)

(முற்றொடர்)

7. உதித்திடுபே ரன்புடையார் யாவர் என்னில்
உற்பவத்தின் போதுள்ள கோட்கள் சொல்லும்
வித்திடு வியாழன்ஐந்தாம் இடத்தினில் நிற்க
வெள்ளியுடன் ஐந்தாதி பதியுங் கூடி
கதித்திடவே ஒன்றெழித்த பத்தில் நிற்க
காட்டுநவ மாதிபதி ஐந்தில் நிற்க
மதித்திடவே உதயபதி ஐந்தொன் பானில்
வதிந்திடவே அன்புருகும் மனிதர் தானே.

8. மனிதற்கு உதயத்தில் ஐந்தொன் பானில்
வான்குருவும் வீற்றிருந்து ஆட்சி செய்யின்
புனிதமனங் கசிந்துருகி அன்பு கொள்வர்
புண்ணியத்தா னதிபனும் வியத்தில் மேவ
கனிவுகொளும் உதயவிய வேந்தர் கூடி
காலித்தே ப்ராக்கியத்திற் பலமாய் நிற்க
பனிதருநன் மனம்நெகிழ்ந்து பத்தி செய்வார்
பகுத்தறியிற் பலஉளது விரியும் அன்றே.

9. விரிகின்ற இருதயமாம் கமலத் தன்னில்
விரும்பிமிக ஈஸ்வரனை ஆவா கித்துத்
புரிகின்ற மானதமாம் பூசை தானும்
பூர்வத்தில் வெளிப்பூசை செய்தோர் செய்வர்
தெரிகின்ற புஷ்பங்கள் கொண்டர்ச் சித்து
திருமேனி அபிஷேகம் சீராய்ச் செய்து
எரிகின்ற தீபமொடு தூபங் காட்டி
இறைவனுக்கு நிவேதனமும் செய்கின்றேமே.

(தொடரும்)

## பாலபண்டித, பண்டித வகுப்புகள்

யா. ஆ. தி. பா. வி. சங்கப் பண்டித, பாலபண்டித பரீட்சைக்கான வகுப்புகள், 17-1-37-ல் ஆரம்பித்து, ஞாயிற்றுக்கிழமைதோறும் காலை 9 மணிதொடக்கம் மாலை 4 மணிவரை, தொல்புரம் விக்கினேஸ்வர வித்தியாசாலையில் நடாத்தப்படுகின்றன. கற்பிக்கும் ஆசிரியர்கள் பிரமஸ்ரீ நவநீதகிருஷ்ணபாரதி அவர்களும், பண்டிதர் ஸ்ரீமத் வே. மகாலிங்கசிவம் அவர்களுமாவர். சேர்ந்து கற்கவிரும்புவோர் ஷெ பாடசாலைத் தலைமையாசிரியரிடம் வேண்டிய விபரங்களை யறிந்துகொள்க.

இ. இராமலிங்கம்
தலைமையாசிரியர்.


விக்நேஸ்வரவித்தியாலயம்
தொல்புரம், சுழிபுரம்
26-1-37
(253) 31-1-37—2.

## வலி—மேற்கு தீவுப்பகுதித் தமிழாசிரியர் சங்க சரித்திர பாடக் கழகம்.

இக்கழகம் 1937-ம் ஆண்டு மாசிமாதம் (February) 13-ந் திகதி சனிக்கிழமை ஊர்காவற்றுறை சென்ற். அந்தோனி பாடசாலை மண்டபத்தில் நடைபெறும். —கடித.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Insist on the all-Steel British Made World Renowned

**DAYTON CYCLES**

FOR

STRENGTH, SPEED & APPEARANCE.

**'DAYTON' is the Cheapest British Made Cycle now available in the Market.**

INQUIRIES INVITED. : :
HIRE PURCHASE TERMS ARRANGED

பெலத்திற்கும், ஓட்டத்திற்கும், தோற்றத்திற்கும்
இங்கிலாந்தில் செய்யப்பட்ட
உலகக் கியாதிபெற்றது

**டெயிற்றன் சைக்கிலே!**

உத்தரவாதமுள்ளது
மார்க்கட்டில் மிகவுங் குறைந்தவிலையில் கிடைக்கக்கூடிய
பிறிட்டிவ்ஸ் சைக்கில் இதுவே!

இன்ஸ்ரோல்மென்ற் ஒழுங்குகள் செய்துகொள்ளலாம்.

வடமாகாண சோல் ஏசண்டுகேள்

**மு. பாலகிருஷ்ணன் அன்ட் பிரதர்ஸ்**

(ஏசன்ஸ் டிறெக்ற் இம்போர்ட்டஸ் அன் மேர்ச்சன்ஸ்)

சைக்கில்கள், அவைக்குரிய சாமான்கள், மோட்டார்க்கார், டிறக்ஸ்கள், இலெக்றிக் சாமான்கள், பற்றறிகள், கிறுமபோன், றேடியோ மற்றுஞ்சாமான்கள் வியாபாரம்:

பெரியகடை, யாழ்ப்பாணம்.

*Sole Agents for Northern Province:*

**M. BALAKRISHNAN & BROS.**

*(Agents, Direct Importers & Merchants)*

*Dealers in Cycles and Accessories, Motor Cars, and Trucks, Electrical Goods & Battries, Gramophones & Radio Sets.*

*GRAND BAZAAR, JAFFNA.*

(240) 3-1-37


## வடமராட்சித் தமிழாசிரியர் சங்கம்.

### பூமிசாஸ்திர பாடக் கழகம்

மேற்படி பாடக்கழகம் இம்மாதம் 23-ம் தேதி (23—1—37) சனிக்கிழமை முற்பகல் 9-30 மணிக்கு உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் தமிழ் வித்தியாசாலை மண்டபத்தில் வித்தியாதரிசி திரு. K. கிருஷ்ணபிள்ளை B A. அவர்களின் தலைமையின் கீழ் ஆரம்பமாயது. அத்தருணத்தில் மேற்படி பகுதி ஆசிரியர்களுள் நூற்றுக்கணக்கானவர்கள் சமுகமளித்தனர்.

இரண்டாவதாக: தலைவர் அவர்கள் இப்பாடத்தின் இலக்கு அதனைக் கற்பிப்பவர்கள் கவனிக்க வேண்டியவைகள் என்பனவற்றை விளக்கிக் காட்டிக் கழகத்தை யாரம்பித்து வைத்தனர்.

மூன்றாவதாக: ஆரம்பவகுப்புகட்குப் பூமிசாஸ்திரங் கற்பித்தல் என்னும் விஷயத்தில் திரு. ம. வைத்திலிங்கம் ஆசிரியர் அவர்கள் ஐந்தாந் தரத்துக்குட்பட்ட சிறுவர்கட்கு சாஸ்த்திரமாகிய இக்கலையை இலேசிற் கற்பிக்கக்கூடிய நுட்பவழிகளையெல்லாம் நன்கு விளக்கிக்காட்டிச் சபையோரை மகிழ்வித்தனர்.

நான்காவதாக:- மேற்படிவிஷயத்தில் ஆசிரியர்கள் தம்முளொருங்கு சேர்ந்து கலந்துரையாடினர்.

ஐந்தாவதாக:- மூன்றும் வகுப்பு மாணவர்க்கு உணவு உண்டாக்கும் மாந்தர் ஒருவரின் சீவியம் என்ற விஷயத்தை திரு. ஆ. சுப்பிரமணியம் ஆசிரியர் அவர்கள் ஓர் மாதிரிப்பாடமாகக் கற்பித்துக்காட்டினர்.

ஆறாவதாக:- திரு. S. கணபதிப்பிள்ளை ஆசிரியர் அவர்கள் உயர்தர வகுப்புகட்குப் பூமிசாஸ்திரம் கற்பித்தல் என்னும் விஷயத்தில் ஓர் அரிய சொற்பொழிவாற்றி அவையோரை மகிழ்வித்தனர்.

ஏழாவதாக:- மேற்படி விஷயத்தில் ஆசிரியர்கள் தம்முட் கலந்துரையாடினர்.

கலந்துரையாடல்களில் ஆசிரியர்களினிடையே யெழுந்த அரிய பெரிய கேள்விகட்கெல்லாம் அவைகளைப் பொறுமையாய் அவதானித்து அவைகளை விளங்கி, அவைகட்குத்தக்க பதிலளித்த அக்கிராசனரின் பெருந்தன்மை போற்றற்குரியது.

எட்டாவதாக:- அக்கிராசனர் அவர்கள் எழுந்து மேற்படி விஷயங்களையெல்லாம் ஒருங்குதிரட்டிவிளக்கிக் காட்டியதோடு பிள்ளைகளின் இலவசப் போசனம் என்ற விஷயத்தில், ஆசிரியர்கள் கவனிக்க வேண்டியவைகளையும் விளக்கிக்காட்டினார்கள். ஈற்றிற் சங்கக் காரியதரிசி திரு. G. M. ஆழ்வாப்பிள்ளை யவர்கள் அக்கிராசனர் அவர்கட்கும் உபந்நியாசகர்களுக்கும் இக்கழகத்தை இனிது நடைபெற உதவிகள் புரிந்த மேற்படி வித்தியாசாலை ஆசிரியர்கள் முகாமைக்காரன் என்பவர்களுக்கு நன்றி கூறக் கழகம் பிற்பகல் 1—30 மணியளவில் நிறைவெய்தியது.

—சடிதி.

### சிவியாதெரு ஸ்ரீ பார்வதி வித்தியாசாலை வெள்ளிவிழாவும் பரிசளிப்பும்

நிகழும் தாதுஇல தைமீ கO-ந் திகதி (23—1—37) சனிவாரத்தன்று மாலை 6-30 மணிதொடக்கம் சிவியாதெரு ஸ்ரீ பார்வதி வித்தியாசாலையின் வெள்ளி விழாச் சிறப்பாக நிகழ்ந்தது. அதனோடு பரிசளிப்பும் நடந்தது. அரசாங்கசபை அங்கத்தவர் திரு. நடேசபிள்ளை அவர்கள் தலைமை வகித்தார். அரசாங்கசபைத் தலைவர் கௌரவ. வை. துரைசுவாமியவர்களும் சமுகமளித்துச் சில பொன்மொழிகள் புகன்று போயினர். பரமேஸ்வரக்கல்லூரிச் சங்கீத ஆசிரியரும் சைவபரிபாலனசபைப் பிரசாரகருமாகிய திரு. த. குமாரசுவாமிப் பிள்ளை அவர்கள் "வசலப் பெற்றார் கடமை" என்னும் பொருள்பற்றியும், யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி ஆசிரியை ஸ்ரீமதி சற்குணம் சரவணமுத்து என்பவர் "பெண்கல்வியின் ஆவசியகம்" என்னும் பொருள் பற்றியும், மாத்தறை நியாயதுரந்தரர் திரு. ச இரத்தினசிங்கம் அவர்கள் "பழைய மாணவர் கடமை" என்னும் பொருள்பற்றியும் விரிவுரைகள் நிகழ்த்தினர். இவ்வுரைகட்கிடையிடையே தேவாரம், திருப்புகழ், கீர்த்தனை என்பன மாணவ மாணவிகளாற் பாடப்பட்டன. வித்தியாசாலை அதிபராயிருக்கும் அத்துவக்காத் திரு. கா. அருளம்பலம் அவர்கள் சபைத் தலைவர்க்கும், விரிவுரைகள் நிகழ்த்தியோர்க்கும் நன்றி பாராட்டித் துதிகூறினர். அஃது சபையோரால் கரகோஷத்துடன் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

நிகழ்ச்சிகளின் இறுதியில் அரிச்சந்திரன் நாடகத்தில் முற்பகுதியும், பிரகலாதனன் என்னும் நாடகமும் மாணவர்களால் நடிக்கப் பட்டனர். விழா கடவுள் வழிபாட்டோடு பூர்த்தியாயது.

—கடித.


## சோதிட விளம்பரம்.

ஊரெழு, சோதிடர் வே. சிவஞானஐயராகிய நான் பல அறிஞர் வேண்டுகோட்கிணங்கி இச்சோதிட விஷயத்திலீடுபட்டுளேன். சென்ற காலங்களில் நம்மிடம் சோதிடவித்தையைக் கற்றுக்கொண்டவர்களுள் போஸ்மாஸ்டர் திரு சி. சோமசுந்தரம்பிள்ளை அவர்கள் இ. சின்னத்துரை, வை. ஆ. க. வயித்திலிங்கம், சி. சிவகுரு, இ. வேலுப்பிள்ளை, க. செல்வரத்தினம் என்பவர்கள் முக்கியமானவர்கள் என்பது உலகோர் அறிந்ததே.

தற்காலம் ஜாதக முறைகளைப் படிக்க விரும்புவோர்களும் ஜாதகம், குறிப்பு, விவாகப் பொருத்தம் முதலியவைகளை அறிய விரும்புவோரும் வீடு, கிணறு, வித்தியாசாலை, மடம் ஆதியவற்றிற்கு நிலங்களில் இடமமைப்போரும் நினைத்தகாரியம், கெடுதி முதலிய ஆரூடங்களை அறிவோரும் எம்மிடம் நேரிலாவது கடிதமூலமாயாவது ஒழுங்கு செய்யலாம். அன்றியும் ஆயுள், தொழில், விவாகம், புத்திரர், யாத்திரை, வியாதி, மரணம் முதலிய பிரதானமான விஷயங்களை ஒருமுறை பரீட்சியுங்கள்.

சோதிடர், வே. சிவஞானஐயர்
பிள்ளையார் கோவில் தெற்குவீதி
ஊரெழு, சுன்னாகம்
யாழ்ப்பாணம்,
சிலோன்.

(208)8-11-36—11-37




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Registered as a Newspaper. 16 Pages

# "The EeLAKESARI"

THE LEADING NATIONALIST TAMIL WEEKLY OF CEYLON

LARGEST CIRCULATION GUARANTEED — BEST MEDIUM FOR ADVERTISEMENT

Vol. 7 } Chunnakam, Jaffna, 31th January 1937, Sunday. { No. 27

## ஜோதிட விளம்பரம்

ஜாதகம் எழுதுவித்துக்கொள்ள விருப்புவோர் தங்கள் தங்கள் இஷ்டப்படி சுத்தமாகவும் சீக்கிரமாகவும் செய்வித்துக்கொள்ளலாம்.

கிரகஸ்புடம், பாவஸ்புடம், தசவர்க்கம், அஷ்டவர்க்கம், கிரக சமயம், கிரகபலன், அஷ்டவர்க்கபலனும், காலதெசை, பிராண தெசை, சிவதெசை, மனோதெசை, மிருத்துதெசை இவைகளும், மகாதெசை அந்தரபலனுக எழுதியுங் கொடுப்பதற்கு ரூபா 60-00. மேற்படி ஒரு தெசைக்கு அந்தரபலனும் மிகுதி புத்திபலனும் எழுத ரூபா 35-00. 10 வருட அந்தரபலனும் மிகுதி புத்திபலனும் எழுத ரூபா 20-00. ஐந்துவருட அந்தரபலனும் மிகுதி புத்திபலனும் எழுத ரூபா 10-00. முற்றும் புத்திபலனும் சுருக்கமான பிறபலன்களும் எழுத ரூபா 5-00. குறிப்பெழுத ரூபா 1-00. விவாகப்பொருத்தம் பார்க்க ரூபா 2-00.

கோவில், வீடு, கிணறு முதலிய கிருக சம்பந்தமான கருமங்களும் எம்மிடம் செய்வித்துக் கொள்ளலாம்.

ஜாதகம், குறிப்பு, ரேகை முதலியனமூலம் தற்காலம் நடக்கும் பலாபலன் அறிய விரும்புவோர் ரூபா 1 கொடுத்தல்வேண்டும்.

ஜாதகம் எழுதுவித்துக்கொள்ள விரும்புவோர் பிறந்த ஊர், வருஷம், மாதம், தேதி, கோம், ஆண், பெண் முதலியவற்றின் சரியான விபரத்துடன் மேற்காட்டிய விகிதத்திற் பாதி முற்பணமாக அனுப்பவேண்டும்.

சோதிடர் ஸ்ரீ வை. ஆ. வல்லிபுரமவர்களின் மாணுக்கரான

V. A. K. Vaithialingam
ASTROLOGER
URELU
Chunnakam, Jaffna.

வை. ஆ. க. வைத்தியலிங்கம்
சோதிடர்
ஊரேழு
சுன்னுகம், யாழ்ப்பாணம்.

(213) 22-11-36—11-37

## Sri Lanka Book Depot

### ஸ்ரீ லங்கா புத்தகசாலை

வண்ணார்பண்ணை

ஐயன்மீர்!

யாழ்ப்பாணம் - வண்ணார்பண்ணை, கதிரேசன் கோவிலுக்கு வடக்குப்பக்கமாகவிருக்கும் ஸ்ரீ லங்கா புத்தகசாலையில்

பள்ளிக்கூடங்களுக்குத் தேவையான தமிழ், இங்கிலீஷ் புத்தகங்களும், ஆசிரிய, பாலபண்டித, பண்டித வகுப்புகளுக்குரிய இலக்கிய, இலக்கண, இதிகாச, புராண நூல்களும் வேறு இலங்கை இந்திய பதிப்புகளும்

பென்சில், பேனு முதலியனவும், கோப்பி (Ex. Copy) கணக்குப்புஸ்தகங்கள், அச்சுக்கூடங்களுக்குத் தேவையான எல்லாவகையான கடதாசிகளும் சகாயமான விலைக்கு தொகையாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

வியாபாரிகளுக்கும் ஆசிரியர்களுக்கும் தக்க கழிவு கொடுக்கப்படும்

ஒருமுறை பரீட்சித்துப்பாருங்கள்

அதிபர், ஸ்ரீலங்கா புத்தகசாலை
வண்ணார்பண்ணை.

(36) 6-10-35

விலை நிதானம்! நயம் சரக்கு!

## எங்கே?

யாழ்ப்பாணம் பெரியகடை
கெங்காசத்திரத்திற்கு மேற்குப்பக்கமாய் இருக்கும்

### மு. குமாரசாமிப்பிள்ளை கடையில்

நெல், அரிசி முதலிய தானியவகைகளும், கயிற்றுவகைகளும், நூல், வாளியும் பலவிதமான சாய்ப்புச்சாமான்களும் விலை நிதானமாயும் நயம் சரக்காயும் கிடைக்கும்.

கொழும்பு - வெள்ளவத்தை 2, 4, 6, 8, 10, 20-ம் நம்பர் நூல் வகைகளும், யாழ்ப்பாணம் இரகுநாதையர் பஞ்சாங்கமும், திறம் இங்கிலீஷ் மேக் குடைகளும் யப்பான் மேக் குடைகளும் தொகையாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

மு. குமாரசாமிப்பிள்ளை,
பெரியகடை, யாழ்ப்பாணம்

(22) 19-2-34

### சுத்தமான கதர்ப்புடவைகள்.

திருப்பூர் சுயம்கதர் வேஷ்டிகள், சால்வைகள், துண்டுகள், ஷேட் துணிகள் முன்னிலும் பார்க்கச் சகாயமான விலைக்குக் கிடைக்கும்.

ஆ. சு. வேதாரணியம்பிள்ளை,
புடவை வியாபாரம்,
பெரியதெரு, சுன்னுகம்.

(50) 1-12-35×12-36.

### ஈழமண்டல திருத்தல தேவாரமும், திருப்புகழும்

விலை சதம் 5

தனலக்குமி புத்தகசாலை
சுன்னுகம்

நீர் அழிவுக்கு
சுவாமி பரிபூரணனந்தர் அவர்களது

## அப்ரேக் செந்தூரம்

### கைகண்ட அரிய மருந்து

20 நாள் 40 வேளை மருந்து விலை ரூபா 16—0—0

"இந்தமருந்தை ஒரு சாய்புக்குக் கொடுத்ததில் 15 நாட்களில் அவருக்குச் சர்க்கரை யில்லாமல் நீர் சுத்தமாயிருக்கிறது" என்று

புதுக்கோட்டை, தலைமை வைத்திய சுகாதார அதிகாரி
டாக்டர் எம். ஜி. ராமச்சந்திரராவ் எம். பி. சி. எம்.
எழுதுகிறுர்.

இதற்கும் மற்றும் பல வியாதிகட்கும் மருந்து வேண்டுவோர் அடியிற்கண்ட விலாசத்திற்கு எழுதுங்கள்.

ஏழைகட்கும், யாத்திரீகர்கட்கும் இராமேசுரத்தில் இலவச சிகிச்சை அளிக்கப்படும்.

சுவாமி பரிபூரணநந்தா,
ஸ்ரீ ராமகிருஷ்ண சித்த வைத்தியசாலை, இராமேசுரம்.

(63) 9-8-36—7-37.

வெளிவந்துவிட்டது! வெளிவந்துவிட்டது!

நீண்டகாலமாய் ஆவலுடன் யாவரும் எதிர்பார்த்திருந்த

## அருணோதயம்

அல்லது

## சிம்மக்கொடி

என்னும்

விரந்ததும்பும் சிறந்தநாவல்

இதுவரை வெளிவந்துள்ள நாவல்களுக்கெல்லாம் சிரோரத்தினமாய் விளங்குவது.

வரணியூர், திரு. எ. சி. இராசையா அவர்களால் எழுதப்பட்டது.

16 அத்தியாயங்கள் 331 பக்கங்கள் கொண்டது.

விலை ரூபா 1-50
"ஈழகேசரி" சந்தாதாரர்களுக்கு விலை ரூபா 1-25

முந்துங்கள்! முந்துங்கள்!!

"ஈழகேசரி" நிலையம், சுன்னுகம்.

இப்பத்திரிகை, யாழ்ப்பாணம்—மயிலிட்டிதெற்கு "திருமகள் நிலைய"த்திலிருக்கும் நா. பொன்னையா என்பவரால், சுன்னுகம் "தலையாட்டி"யிலுள்ள திருமகள் அச்சியந்திரசாலையில் 1937-ம் ஆண்டு ஜனவரிமீ 31-ந் தேதி ஞாயிற்றுக்கிழமை அச்சிடுவிக்கப்பெற்று வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org